விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 புரட்டாதி 15 செவ்வாய்க்கிழமை (01.10.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 286

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## போர்க் கப்பல்களை வழங்க எதிர்ப்பு

இந்தியா இரண்டு போர்க் கப்பல்களை இலங்கைக்கு வழங்கும் திட்டத்தை கைவிட வேண்டும் என்று கோரி பொது நலன் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சென்னை மேல் நீதிமன்றத்தில் இந்த மனு நேற்று தாக்கல் செய்யப்பட்டது.

சென்னையை சேர்ந்த சட்டத்தரணி கே.ஸ்டாலின் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

இலங்கைக்கு இரண்டு கப்பல்களை வழங்கவுள்ளதாக இந்திய மத்திய அமைச்சர் வி.நாராயணசாமி அண்மையில் தெரிவித்த தகவலை மையமாகக் கொண்டே இந்த மனு தாக்கல்

20-ம் பக்கம் பார்க்க

## 5-ஆம் தர புலமைப் பரிசில் பெறுபேறுகள்

இன்று

ஐந்தாம் தர புலமைபரிசில பரீட்சையின் பெறுபேறுகள் இன்று வெளியிடப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

பெறுபேறுகளை அறிய
www.doenets.lk

எதிர்வரும் காலங்களில் சர்வதேச சிறுவர் தினமான ஒக்டோபர் மாதம் முதலாம் திகதியே பரீட்சையின் பெறுபேறுகளை வெளியிட நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

20-ம் பக்கம் பார்க்க

## தமிழீழத்தை உருவாக்க விக்னேஸ்வரன் திட்டம்

### மகிந்தவை எச்சரிக்கிறது தே.தே. இயக்கம்

தமிழீழத்தை உருவாக்குவதற்காகவே விக்னேஸ்வரன் வடமாகாண சபையின் முதலமைச்சராக ஜனாதிபதியின் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்ய திட்டமிட்டுள்ளதாக தேசப் பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தை கவிழ்த்து விட்டு தனி தமிழீழத்தை உருவாக்குவதே இதன் நோக்கம் என அந்த அமைப்பின் செயலாளர் மருத்துவர் வசந்த பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்த திட்டத்தை அரசாங்கம் உடனடியாக நிராகரிக்க வேண்டும் என அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுகின்றோம். கூட்டமைப் பின்

20-ம் பக்கம் பார்க்க

# இனவாத வன்முறைகளை பௌத்தர்களே நிறுத்துங்கள்

### தலாய் லாமா மீண்டும் கோரிக்கை

இலங்கையிலும் மியன்மாரிலும் உள்ள பௌத்தர்கள் இனவாத வன்முறைகளை நிறுத்த வேண்டும் என திபெத்திய ஆன்மீகத் தலைவர் தலாய் லாமா மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளார்.



திபெத்திய பௌத்த ஆலயத்தில் பக்தர்களுக்கு போதனைகளை வழங்கும் முதல் நாள் நிகழ்

20-ம் பக்கம் பார்க்க

## கிராம சேவகர் விபத்தில் பலி

மோட்டார் சைக்கிளும் சிறிய வகை கன்டர் ரக வாகனமும் விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே தலை சிதறி உயிரிழந்துள்ளார். இச் சம்பவம் நேற்றிரவு வல்லைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் துன்னாலை கிழக்கு கரவெட்டியைச் சேர்ந்த சோமநாதர் கிருஷ்ணராஜா (வயது 57) என்பவரே உயிரிழந்தவராவார்.

வடமராட்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி மோட்டார் சைக்கிளில் தமது உறவினர்களைப் பார்வையிடுவதற்காக வந்த போதே மேற்படி விபத்து இடம்பெற்றுள்ளது.

சடலமானது அச்சுவேலி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு பின்னர் நேற்றிரவு 8 மணியளவில் யாழ் போதனா வைத்திய சாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக வைத்தியசாலை பொலிஸார் ஆரம்ப விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

உயிரிழந்தவர் கரவெட்டி பிரதேசத்தைச் சேர்ந்த கிராம சேவகர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-24)

## பிரித்தானியா மற்றும் கனடாவின் அணுகுமுறைகள் தவறானவை

### கவலை தெரிவிக்கிறார் ஜீ.எல். பீரிஸ்

பொதுநலவாய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களின் கூட்டத்தை பிரித்தானியா, கனடா ஆகிய நாடுகளின் அமைச்சர்கள் இலங்கையின் உள்விவகாரம் தொடர்பில் தமது நிலைப்பாடுகளை தெரிவிக்கும் மேடையாக மாற்றிக் கொண்டமை கவலைக்குரிய விடயம் என அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இலங்கை வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நியூயோர்க்கில் கடந்த 26 ஆம் திகதி நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களின் கூட்டத்தில் பிரித்தானியாவும் கனடாவும் பொதுநலவாய அமைப்பின் இணக்கப்பாடுகளையும் சம்பிரதாயங்களையும் மீறி செயற்பட்டன. இந்த நாடுகளின் பிரதிநிதிகள் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதில் இலங்கை அரசு நிரந்தரமாக செயற்படுவது அவசியம் என கூட்டத்தின் போது தொடர்ந்தும் கோரிக்கை விடுத்தமை முழுமையான அநீதியாகும்.

பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை இலங்கையில் நடத்த உறுப்பு நாடுகள் எடுத்துள்ள தீர்மானத்தை பிரித்தானியா ஒரு பிரச்சினையாக எடுத்து கொண்டமை இலங்கையின் கவலைக்கு காரணமாகியுள்ளது.



இலங்கை தொடர்ந்தும் பொதுநலவாயத்தின் சம்பிரதாயம் மற்றும் பெறுமதிகளின் அடிப்படையில் செயற்பட்டு வருகிறது. இதனால் சகல உறுப்பு நாடுகளையும் சமமாக நடத்த வேண்டியது அத்தியவசியமானது.

முன்பு ஒருபோதும் நடந்திராத வகையில் பொதுநலவாய அமைப்பின் கொள்கைளை

20-ம் பக்கம் பார்க்க

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் இன்றைய அன்ரன் பாலசிங்கம்

### கணிப்புகளைத் தெரிவிக்கிறது தே.சு.முன்னணி

வடக்கு மாகாண சபைக்கு தெரிவாகியுள்ள முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் இன்றைய அன்ரன் பாலசிங்கம் என அமைச்சர் விமல் வீரவன்ஸவின் தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

புத்திசாலித்தனமான நுணுக்கங்களை கொண்டு தென் பகுதி மக்களை ஏமாற்றி வரும் அவர் வடபகுதி மக்களை ஈழத்தை நோக்கி வழி நடத்தி வருகிறார் என அந்த கட்சியின் பேச்சாளர் மொஹமட் முஸ்ஸாமில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிங்கள ஊடகங்களில் ஐக்கியம், நல்லிணக்கத்தை பற்றி பேசும் விக்னேஸ்வரன், தமிழ் ஊடகங்களில் சுயாட்சி, பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் பற்றி பேசி பிரபாகரனை

20-ம் பக்கம் பார்க்க

## அணிசேரா நாடுகளின் உதவியை கோரும் இலங்கை

மனித உரிமை விடயங்களை ஐக்கிய நாடுகள் அமைப்பு ஒரு அரசியல் கருவியாக பயன்படுத்துவதாக தெரிவித்துள்ள இலங்கை, சகல நாடுகளுக்கும் சமமான தரத்தில் வைத்து அளவிடுமாறு வலியுறுத்த அணிசேர நாடுகளின் ஆதரவை கோரியுள்ளது.

ஒட்டுமொத்த சர்வதேச சமூகமும் பிரச்சினைகளின போது அவற்றை சமமான நிலையில் கணிப்பதற்கான பங்களிப்பை அணிசேரா நாடுகள் வழங்க வேண்டும் என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

பொருளாதார, சமூக அம்சங்கள் மற்றும் அரசியல் பிரச்சினைகளின் போது குறை மதிப்புக்குட்படுத்தும் சமமற்ற நடவடிக்கைகளுக்கு எதிராக அணிசேரா நாடுகள் குரல் கொடுக்க வேண்டும்.

20-ம் பக்கம் பார்க்க

## ஐ.நா சென்ற இலங்கைக் குழுவால் மக்களின் பணம் வீண் விரயம்!

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் 68வது பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள சென்றிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான பிரதிநிதிகள் குழுவில் சுமார் 75 பேர் அடங்கியிருந்தனர்.

இவர்களில் ஒருவருக்கான நாள் செலவு 500 அமெரிக்க டொலர்களையும் தாண்டிச் சென்றுள்ளதாக தெரியவருகிறது. இந்த செலவுகளில் விமானப் பயணம், ஹோட்டல் கட்டணம், வாகனம், தொலைபேசி உட்பட நாள் செலவுகள் அடங்குகின்றன.

ஜனாதிபதியுடன் அமெரிக்கா சென்ற குழுவில், அமைச்சர்கள் ஜீ.எல். பீரிஸ், நிமால் சிறிபால டி சில்வா, சுசில் பிரேமஜயந்த, அதாவுத செனவிரட்ன, நாடாளுமன்ற உறுப்பினர்களான சஜின் வாஸ் குணவர் [illegible]

20-ம் பக்கம் பார்க்க

## இராணுவ பஸ் மோதியதில் இளம் பெண் பலி; யுவதி படுகாயம்

இராணுவத்தை ஏற்றிச் சென்ற பஸ்ஸும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் இளம் பெண் பலியானதுடன் மற்றுமொரு யுவதி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் யாழ். தட்டாதெருச் சந்தியில் நேற்று திங்கட்கிழமை இரவு 9.45 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் கோப்பாய் ராஜவீதியைச் சேர்ந்த இளம்பெண் சதீஸ்குமார் கீர்த்தனா (வயது 20) என்ற பெண்ணே இதில் பலியாகியுள்ளார்.

அவரது சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் படுகாயமடைந்த யுவதி யாழ். போதனா

20-ம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போனஸ் உறுப்பினர்கள் உத்தியோகபூர்வமாக அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணசபைத் தேர்தலின் மூலம் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பிற்கு கிடைத்த இரண்டு போனஸ் ஆசனங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களை உத்தியோகபூர்வமாக தேர்தல் திணைக்களத்திற்கு அக்கட்சியின் பொதுச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா நேற்றைய தினம் அறிவித்துள்ளார்.

யாழ்.தேர்தல் திணைக்களத்திற்கு நேற்று முற்பகல் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் அங்கு வடக்கு மாகாண பிரதித்தேர்தல் ஆணையாளர் சி.அச்சுதனிடம் போனஸ் ஆசனத்திற்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் தொடர்பில் கடிதத்தை ஒப்படைத்தார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் இரண்டு போனஸ் ஆசனங்களில் ஒன்று மன்னார் மாவட்டத்தில் போட்டியிட்ட அஸ்மின் அயுப்பிற்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் போட்டியிட்ட பெண் வேட்பாளரான மேரிகமலா குணசீலனுக்கும் வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

## போர்க்கால கவிதை வா[illegible]போது சோகமயமாக மாறிய அரங்கு



(யாழ்ப்பாணம்)

இலங்கையின் வடமாகாணம் உட்பட தமிழர் தாயகப் பகுதிகளில் கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்தப் பாதிப்புக்களை விபரிக்கும் போர்க்கால கவிதைகளை கவிஞர்கள் வாசித்தபோது யாழ்.இந்தியத் துணைத் தூதரக அரங்கு சோகமயமாக காட்சியளித்தது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ரஜீவ விஜேசிங்கின் தொகுப்பில் உருவாக்கப்பட்டு இந்திய தேசிய புத்தக அறக்கட்டளை நிறுவனத்தால் யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தில் வைத்து நேற்று வெளியிடப்பட்ட தெறிப்புப் படிமம் எனும் கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழாவினையடுத்து இடம்பெற்ற கவிதை வாசிப்பு நிகழ்வின்போதே மேற்கண்டவாறு இடம்பெற்றது.

இதில் கவிஞர் சோ.பத்மநாதன், அ.யேசுராசா, கருணாகரன், பா.அகிலன், விவேக், ஐ.சாந்தன் ஆகியோரின் தமிழ்க் கவிதை வாசிப்பும் ஆரியவன்ச ரணவீரவின் சிங்களக் கவிதை வாசிப்பும் இதன்போது இடம் பெற்றது.

தமிழ்க் கவிதைகளில் கடந்த கால போர் அழிவுகளும் இடப்பெயர்வுகளும் உயிர் அழிவுகளும் வெளிப்படுத்தப்பட்டதனால் அங்கு கூடியிருந்த பேராசிரியர்கள், கவிஞர்கள், மதகுருமார்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் எனப் பலரும் மிகவும் சோகத்துடன் காட்சியளித்ததோடு சிலரின் கண்களின் ஓரமாக கண்ணீர் வழிந்தோடியதையும் அவதானிக்க முடிந்தது.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் எனப் பலர் கலந்து கொண்டனர். (செ-6)

## கைக்குண்டு, சயனைட்டுடன் ஒருவர் கைது

பதுளை வெலிமடை கலுலந்த பிரதேசத்தில் வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கைக்குண்டு மற்றும் சயனைட் குப்பியுடன் ஒருவரை தாம் கைது செய்துள்ளதாக வெலிமடை பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் வெலிமடை பிரதேசத்தை சேர்ந்தவர். அவரது வீட்டில் டின் ஒன்றுக்குள் இந்த கைக்குண்[டு] சயனைட் குப்பியும் மறைத்து வைக்கப்ப[ட்டி]ருந்தது.

குறித்த சந்தேக நபர் தற்போது வெலிமடை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறார். (செ-11)

## கண்டியில் வயோதிபப் பெண் கோடரியால் வெட்டிக் கொலை

கண்டி உடவளவ பிரதேசத்தில் வீட்டி[ல்] தனியாக வசித்து வந்த 81 வயதான வயோதிபப் பெண்மணி ஒருவர் கோடரியால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளதாக உடவளவ பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினமிரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் பிள்ளலாகே பொடிநோனா என்ற வயோதிப பெண்ணே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

பெண்ணின் அலறல் சத்தம் கேட்டு அருகில் குடியிருக்கும் அவரது மகன் வீட்டுக்குள் சென்று பார்த்தபோது பெண்ணின் கழுத்து கோடரியால் வெட்டப்பட்டு அவர் இறந்து கிடந்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக உடவலவ பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

எனினும் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் இதுவரை கைது செய்யப்படவில்லை. (செ-11)

## தங்க நகைகளை திருடிய இரு பெண்கள் பிடிபட்டனர்

(யாழ்ப்பாணம்)

தங்க நகைகளைத் திருடிய குற்றச்சாட்டின் பேரில் இரண்டு பெண்களை 20 நாட்களுக்குப் பின்னர் நகைக்கடை உரிமையாளர்கள் பிடித்து யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் நேற்றைய தினம் ஒப்படைத்தனர்.

இதனால் யாழ்.நகரப்பகுதியில் நேற்றைய தினம் பிற்பகல் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

கடந்த 10 ஆம் திகதி யாழ்.நகரப்பகுதியிலுள்ள நகைக்கடை ஒன்றுக்கு நகைகளைக் கொள்வனவு செய்வதற்காக வருகை தந்த இரண்டு பெண்கள் அங்கு வேலை செய்து கொண்டிருந்த நபரை ஏமாற்றி விட்டு சுமார் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு அட்டியல் நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

தங்க நகைகள் திருடப்பட்டதை அறிந்த கடை உரிமையாளர் குறித்த நகைக்கடையிலிருந்த கமராவின் உதவியுடன் இரண்டு பெண்களின்னையும் இனம்கண்டு கொண்ட பின்னர் பொலிஸாருக்கு அறிவித்திருந்தார்.

இந்நிலையில் நேற்றையதினம் பிற்பகல் 3.15 மணியளவில் குறித்த இரண்டு பெண்களும் யாழ்.நகரப்பகுதியில் சென்றபோது மடக்கிப்பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இதனால் யாழ்.நகரப்பகுதியில் ராஜா திரையரங்கிற்கு அருகில் நேற்றுப் பிற்பகல் பெரும்பரபரப்பு ஏற்பட்டதோடு பெருமளவானவர்கள் ஒன்று கூடியதனால் வாகனப் போக்குவரத்தும் சிறிது நேரம் தடைப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

## ரணிலுடன் சந்திரிகாவை ஒப்பிட முடியாது! -திஸ்ஸ



ரணில் விக்ரமசிங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆகிய இரண்டு பேரையும் சமமாக மதிப்பிட முடியாது என ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் மேல் மாகாண சபையின் முதலமைச்சர் பதவிக்கு போட்டியிட உள்ளதாக ஊடகங்களில் வெளியாகியுள்ள தகவல்கள் உண்மைக்கு புறம்பானவை.

அதேவேளை தென் மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடுமாறு சஜித் பிரேமதாசவுக்கு எவராவது யோசனை முன்வைத்தால் அதனை ஏற்றுக்கொள்ளவும் நிராகரிக்கவும் அவருக்கு உரிமை உள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியை விற்று பிழைப்பவர்கள் போன்று கட்சியை வலுவிழக்க செய்யும் தரப்பினரும் உள்ளனர்.

ரணில் விக்ரமசிங்கவுடன் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவை சமமாக ஒப்பிட முடியாது. ரணில் விக்ரமசிங்க அரசியலில் சிறந்த அனுபவங்களை கொண்டுள்ளதுடன் நாட்டில் இரண்டு முறை பிரதமராக பதவி வகித்த சிரேஷ்ட அரசியல்வாதி என்றார்.

இதேவேளை, ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுடன் இணைந்து எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட உள்ளதாக ஊடகங்களில் தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## மாங்காய் சாப்பிட்டதால் மாணவிகள் வைத்தியசாலையில்

### மட்டக்களப்பில் சம்பவம்

மட்டக்களப்பு கல்லடி விவேகானந்தா மகளிர் மகா வித்தியாலயத்தின் விடுதியில் தங்கியிருந்த மாணவிகள் சிலர் நேற்று திடீர் சுகவீனமுற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பாடசாலை விடுதியில் 77 மாணவிகள் தங்கியிருக்கின்றனர். அம்மாணவிகளில் 7 பேரே திடீர் சுகவீனமுற்றுள்ளனர்.

இவர்கள் சிகிச்சைக்காக ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

பின்னர் ஐந்து மாணவிகள் வைத்தியசாலையிலிருந்து வீடு திரும்பியுள்ளனர். எனினும் இரண்டு மாணவிகள் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதாக ஆரையம்பதி வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு சுகாதார அலுவலகத்தின் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் குழு விசாரணைகளை மேற்கொண்டனர். மாணவிகளுக்கு உணவு ஒவ்வாமையினால் திடீர் சுகவீனம் ஏற்படவில்லை என அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, குறித்த மாணவிகள் மாங்காய் சாப்பிட்டதன் விளைவே திடீர் சுகவீனத்திற்கு காரணம். அவர்களுக்கு எவ்வித பாதிப்பும் இல்லையெனவும் தான் நேரில் சென்று வினவியதாக மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுபா சக்கரவர்த்தி தெரிவித்துள்ளார். (செ-11)

## புத்தளத்தில் மீண்டும் தேர்தல் நடத்துமாறு மனுத்தாக்கல்

புத்தளத்தில் மீண்டும் தேர்தலை நடத்துமாறு கோரி நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. புத்தளம் மாவட்ட தேர்தல் முடிவுகளை ரத்து செய்து, மீளத் தேர்தலை நடத்துமாறு மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஜன செத்த என்ற அமைப்பினால் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஜனசெத்தவின் பொதுச் செயலாளர் பத்தரமுல்ல சீலரட்ன தேரராலேயே கொழும்பு உயர் நீதிமன்றில் இவ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தேர்தல்கள் நடத்தப்பட்டு முடிவுகள் வெளியிடப்படும் வரையில் கடந்த 21-ம் திகதி வெளியான தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் செய்வதற்கு இடைக்கால தடையுத்தரவு விதிக்கப்பட வேண்டுமெனவும் அதில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் புத்தளத்தில் உள்ள வாக்கெண்ணும் நிலையமாக பயன்படுத்தப்பட்ட புனித அன்றூாஸ் வித்தியாலயத்தில் ஒரு தொகுதி வாக்குச்சீட்டுக்கள் மீட்கப்பட்டிருந்தமை தெரிந்ததே. (செ-11)


**நாயைக் காணவில்லை**

சாம்பலில் கறுப்பு புள்ளியுடைய கிறேடன் (பெரிய ஆண் நாய்) காணவில்லை.

தயவுசெய்து கண்டவர்கள் கீழுள்ள முகவரிக்கு அறியத்தரவும்.

**19, நல்லூர் பாம் சென்ரர்**

**021 222 6944**

(த-4967)

**மனத்தளர்வா? தனிமையா? வாழ்க்கையில் வெறுப்பா?**

உங்களுக்காக நாங்கள் இருக்கின்றோம். உடனே அழையுங்கள். இரகசியங்களை முழுமையாகப் பாதுகாப்போம்.

**கைகொடுக்கும் நண்பர்கள்**

**021 222 8117**

(த-4924)

**தொடர்ந்தும் உங்கள் சேவையில்....**

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

கடிதங்கள் அன்பளிப்பு பொருட்கள் உடுபுடவைகள்

CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No. :-021 222 5392

WESTERN UNION MONEY TRANSFER

(C-4963)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## கொடுத்ததை வாங்கக்கூடாது!

புதுக்கோட்டைக்கு பக்கத்தில் மிதிலைப்பட்டி என்று ஒரு ஊர் இருந்தது.

அங்கே அழகிய சிற்றம்பல கவிராயர் என்ற ஒருவர் இருந்தார்.

ஒரு நாள் அவர் கல்யாண வைபவம் ஒன்றில் கலந்து கொள்வதற்காக இன்னொரு ஊருக்குச் சென்றார்.

கல்யாணம் முடிந்ததும் ஊருக்கு திரும்ப ஆயத்தமானார். ஒரு இரவு முழுவதும் பயணம் செய்தால்தான் இவரது ஊருக்கு போகலாம்.

ஒரு வண்டியை வாடகைக்கு பிடித்தார். வண்டிக்காரனைப் பார்த்து "எவ்வளவு வாடகை?" என்று கேட்டார்.

"மூன்று ரூபாய் வாடகை கொடுங்கள்! ஊருக்குப் போய்ச் சேரும் போது பொழுது விடிந்து விடும். அதனால் நாளைக்கு காலையில் சாப்பாடு கொடுங்கள் அதுபோதும்" என்றான்.

சரி என்று ஒத்துக் கொண்டார்.

வண்டியும் புறப்பட்டது. கவிராயர் அதில் நன்றாக நீட்டி நிமிர்ந்து படுத்துக் கொண்டார். நல்ல நிலா வெளிச்சம்.

வண்டிக்காரனும் ஆனந்தமாக தெம்மாங்கு பாடிக்கொண்டே போனான்.

கவிராயரும் சுவாரசியமாக அதைக் கேட்டுக் கொண்டே போகிறார். வண்டிக்காரன் பாட்டை நிறுத்திவிட்டு மெதுவாக கவிராயரிடம் பேச்சுக் கொடுத்தான். "நீங்கள் யார்? உங்களைப்பற்றி கொஞ்சம் சொன்னால் நான் கேட்டுக்கொண்டே வருவோன்!" என்றான்.

கவிராயரும் தனது கதையை சொல்ல ஆரம்பித்தார்.

"நான் இருக்கிறது மிதிலைப்பட்டி தான். எங்கள் முன்னோர்களெல்லாம் பெரிய வித்துவான்கள்.

ஆரம்பத்தில் அவர்கள் சேலத்துக்குப் பக்கத்தில் ஒரு ஊரில் இருந்தார்கள்.

அந்த காலத்தில் இந்தப் பக்கத்தில் வெங்களப்ப நாயக்கர் என்ற ஜமீன்தார் இருந்தார். அவர்தான் மிதிலைப்பட்டி கிராமத்தை எங்களிடம் கொடுத்தார். இப்பொழுது எங்களுக்கு ஜீவாதாரமாக இருப்பது அதுதான். இன்றைக்கு கஷ்டமில்லாமல் இருக்கிறோம் என்றால் அதற்குக் காரணம் வெங்களப்ப நாயக்கர்தான் என்று சொல்லிக் கொண்டு வந்தார்.

பொழுது விடிந்தது. மிதிலைப்பட்டியும் வந்து சேர்ந்தது. கவிராயர் இறங்கினார்.

வீட்டு வேலைக்காரனைக் கூப்பிட்டு "வண்டிக்காரனுக்குப் பழையது கொண்டு வந்து கொடு" என்றார்.

அப்பொழுது வண்டிக்காரன், "ஐயா எனக்கு சாப்பாடு வேண்டாம். நான் போய் வருகிறேன் உத்தரவு கொடுங்கள்!" என்றான்.

"நீ ஊருக்குப் போய்ச் சேர்வதற்குள் ரொம்ப நேரமாகிவிடும் சாப்பிட்டுப் போ!" என்றார்.

"எனக்குப் பசி இல்லை!" என்றான் அவன்.

"சரி... இந்தா வண்டி வாடகை!" என்று சொல்லி மூன்று ரூபாய் கொடுத்தார்.

"இது உங்களிடமே இருக்கட்டும். நான் வருகிறேன்" என்று கிளம்பினான் அவன்.

"இன்னும் அதிகமாக வேண்டுமா?" என்றார் அவர்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை! நீங்கள் தவறாக நினைக்கக் கூடாது!" என்று சொல்லி விட்டு கம்பீரமாக கிளம்பினான் அவன்.

"என்ன காரணம் என்றாவது சொல்லி விட்டுப் போ!" என்றார் கவிராயர். அப்பொழுதுதான் வண்டிக்காரன் சொன்னான்.

"ஐயா நேற்று ராத்திரி உங்கள் முன்னோர்களைப் பற்றி சொல்லிக் கொண்டுவந்தீர்களே! அவர்களை ஆதரித்த வெங்களப்ப நாயக்கர் பரம்பரையில் பிறந்தவன்தான் நான்!"

ஏதோ என் தலைவிதி இப்பொழுது வண்டி ஓட்டிக்கொண்டிருக்கிறேன்! எங்கள் வீட்டுப் பெரியவர்கள் என்ன சொல்வார்கள் என்றால் என்னதான் ஆனாலும் சரி... கொடுத்ததை மட்டும் வாங்கக்கூடாது!" என்று சொல்வார்கள். "எங்கள் முன்னோர்கள் உங்களுக்குக் கொடுத்ததிலிருந்து ஒரு சின்ன துரும்பைக் கூட திருப்பி வாங்குவதற்கு என் மனம் இடம்கொடுக்க வில்லை! மன்னித்துக் கொள்ளுங்கள்!

ஏதோ இந்த அளவுக்காவது நான் உங்களுக்கு உபயோகப் படுவது மாதிரி கடவுள் கருணை செய்தாரே! அது எனது பாக்கியம்!" என்று சொல்லிவிட்டு அந்த ஆள் போய்விட்டான்.

இது கற்பனைக் கதையில்லை! நிஜமாக நடந்தது.! இந்த சம்பவத்தை அந்த கவிராயரே சொல்லியிருக்கிறார். இந்த குறிப்பை ஒரு புத்தகத்தில் பார்த்தேன். அதை என் நண்பரிடம் கொடுத்து படித்து விட்டுக் கொடுங்கள் என்றேன்.

வாங்கியவர் திருப்பி அந்த புத்தகத்தை தரவேயில்லை. ஒரு நாள் "என்ன படித்து விட்ீர்களா?" என்றேன்.

"படித்துப் பார்த்தேன். வெங்களப்ப நாயக்கர் பரம்பரை மாதிரி நானும் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன்" என்றார்.

"என்ன அது?" என்றேன்.

"கொடுத்ததை திருப்பி வாங்கக் கூடாது என்பது அவர்களது கொள்கை. வாங்கியதை திருப்பிக் கொடுக்கக் கூடாது என்பது எனது கொள்கை!" என்றார்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# தெற்கில் செய்யும் ஏமாற்று வேலையை அரசு வடக்கில் செய்ய முடியாது

## மக்கள் நிரூபித்துள்ளனர்-அசாத் சாலி

நேர்மையான முறையில் தேர்தலை நடத்தியிருந்தால் அரசாங்கம் படுதோல்வி அடைந்திருக்கும். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு தைரியமிருந்தால் எதிர்க் கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்கவுடன் நேரடி விவாதத்துக்கு வர வேண்டும் என எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு இயக்கம் தெரிவித்துள்ளது.

மேலும் வடமேல் மற்றும் மத்திய மாகாண சபைத் தேர்தல்களில் அரசாங்கத்தின் வெற்றிக்கு தேர்தல்கள் ஆணையாளரும் முக்கிய காரணம் என அவ் இயக்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இராஜகிரியவில் நேற்று முன்தினம் எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு இயக்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின் போதே அவர்களால் மேற்கண்ட கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும் மத்திய மாகாண சபை உறுப்பினருமான அசாத் சாலி கருத்துத் தெரிவிக்கையில்,

தேர்தலில் வெற்றி பெறுவதற்காக அரசாங்கம் எவ்வளவு சூழ்ச்சிகளை செய்துள்ளதென்பதை அனைவரும் அறிவர். அரச ஊழியர்களையும் அரச வாகனங்களையும் பாவித்தமை தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை.

சூழ்ச்சிகளின் மூலம் ஆட்சியை கைப்பற்றிவிட்டு தகுதியான தலைவரென ஜனாதிபதி கூறுவதை ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது. நாட்டின் தகுதியான தலைவர் யார் என்பதை நிரூபிக்க வேண்டுமாயின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுடன் நேரடி விவாதத்துக்கு வர வேண்டும்.

மேலும் நாட்டின் உண்மைத் தன்மையை தற்பொழுது எந்தவொரு ஊடகமும் முழுமையாக வெளிப்படுத்துவதில்லை. எதிர்க்கட்சிகளின் கொள்கைகளையும் கருத்துக்களையும் வெளிப்படுத்துவதில் ஊடகங்கள் மறந்து வருகின்றமை கவலைக்கிடமானதே.

மேலும் அரசாங்கத்தின் உள்ளேயே விடுதலைப் புலிகளை வைத்துக் கொண்டு எம்மை தீவிரவாதிகள் என அரச தரப்பினர் குறிப்பிடுவதானது கேளிக்கையாகவேயுள்ளது.

விடுதலைப்புலி உறுப்பினர்களைவைத்துவடக்கில் பிரசாரம்செய்துவாக்குகளை பெறலாம் என அரசாங்கம் நினைத்தமை தவிடு பொடியாகிவிட்டது. தெற்கில் செய்யும் ஏமாற்று வேலைகளை அரசாங்கம் வடக்கிலும் செய்ய முடியாது என்பதை வடக்கு மக்கள் நிரூபித்து விட்டார்கள்.

அதேபோன்று முஸ்லிம் மக்களின் உரிமைகளும் சுதந்திரமும் பறிக்துப் பட்டு வருகின்றது. முஸ்லிம்களின் உரிமைகள் பற்றி பேசும் அதிகாரம் எமக்கு உள்ளதைப் போன்று தமிழர்களுக்கும் உண்டு.

இதைக் கேவலப்படுத்தும் வகையில் சில நாசகார சக்திகள் பேசுவதைக் கவனத்தில் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை எனவும் தெரிவித்தார். (2)

# தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி மாணவர்களிடையே போட்டிகள்

(சாவகச்சேரி)

ஒக்டோபர் மாதத்தில் கொண்டாடப்படுகின்ற தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி, நுணாவில், மீசாலை ஆகிய பொது நூலகங்கள் இணைந்து பாடசாலை மாணவர்களிடையே போட்டிகளை நடத்தவுள்ளன.

இதற்கமைய மேற்படி நூலகங்களின் எல்லைக்குட்பட்ட மாணவர்களிடையே நடத்தப்படவுள்ள போட்டிகளுக்கான விபரங்கள் அனைத்து பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பிரதம நூலகர் வே.வித்தியானந்தன் அறிவித்துள்ளார்.

அத்துடன் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 9 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் குறித்த பொது நூலகத்துக்குக் கிடைக்கக் கூடியவாறு பாடசாலை அதிபர் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும் என அவர் கேட்டுள்ளார். (2-9-29)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 40 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 100-140 | 100 |
| பச்சைமிளகாய் | 60 | 70 | 100 |
| தக்காளி | 100 | 60 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 |
| கோவா | 40 | 60 | 60 |
| கரட் | 50 | 50 | 60 |
| பூசணி | 20 | 30 | 40 |
| புடோல் | 50 | 60 | 40 |
| வாழைக்காய் | 50 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 160 | 120-140 | 160 |
| பெரிய வெங்காயம் | 40-90 | 70 | 80 |
| பாகற்காய் | 90 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 50 | 70 | 40 |
| கருணைக் கிழங்கு | 40 | 50 | 70 |
| பயற்றங்காய் | 40 | 40 | 60 |
| லீக்ஸ் | 80 | 90 | 100 |
| பீற்றூட் | 10 | 15 | 30 |
| கறிமிளகாய் | 50 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 40-90 | 40-60 | 100 |
| போஞ்சி | 90 | 90 | 120 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 25 |
| தேசிக்காய் | 450 | 350 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 40-60 | 40-50 | 35-45 |
| இராசவள்ளி | - | 70 | 120 |

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இராசி பலன்

01.10.2013
(புரட்டாதி 15, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
துவாதசி பின்னிரவு 5.56 மணிவரை
ஆயிலியம் பிற்பகல் 1.28 மணிவரை
இராகுகாலம் 3.02-4.32 மணிவரை
சுபநேரம் 10.32-12.02 மணிவரை
சத்தியஸ்த மகாளயம்

**மேடம்** வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்.

**இடபம்** விருந்தினர் வருகையுண்டு, பெற்றோரின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும், கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்** இனிய அனுபவங்கள் ஏற்படலாம், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், அந்நியர் சந்திப்புண்டு, வருமானம் திருப்தி தரும்.

**கடகம்** உங்களின் மணியான யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், சொத்துக்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், குடும்பத்தினர் பெருமைப்படும் விதத்தில் சில நிகழ்வுகள் நடைபெறலாம்.

**சிங்கம்** குடும்பச் சுமை கூடும், வழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி** சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், தொழிலில் பணியாளர்களை மாற்றும் எண்ணம் உருவாகும், சயன சுகக் குறைவான நாள்.

**துலாம்** எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வரலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும்.

**விருச்சிகம்** பயணங்களால் பலன் கிடைக்கும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**தனுசு** குடும்பத்தில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், குலதெய்வ வழிபாட்டால் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் நன்மை கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**மகரம்** எந்தக் காரியத்தையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்து செய்வது நல்லது, குடும்பத்தில் கோபமாக பேசி விட்டு பின்னர் வருந்த நேரிடலாம், ரோக நிலையுண்டு.

**கும்பம்** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், வருமானம் திருப்தி தரும், கௌரவம், அந்தஸ்து உயரும்.

**மீனம்** உறவு-பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், நண்பர்கள் வலிய வந்து உதவுவார்கள்.

வளவன்

# மரத்தில் ஏறியவர் தவறி வீழ்ந்து மரணம்

(கரணவாய்)

மாமரத்திலிருந்து தவறி வீழ்ந்து குடும்புஸ்தர் ஒருவர் பரிதாபமான முறையில் உயிரிழுந்துள்ளார்.

இச்சம்பவம் கடந்த 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

கரவெட்டி வதிரியைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான மூர்த்தி (வயது 45) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

இக் குடும்பஸ்தர் சம்பவதினமன்று தனது வீட்டு முற்றத்திலிருந்த 20 அடி உயரமான மாமரத்தில் காய்கள் பறிப்பதற்காக ஏறிய வேளை எதிர்பாராத விதத்தில் கால் தவறி வீழ்ந்துள்ளார்.

இதனையடுத்து வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு முன்னதாகவே அவர் உயிரிழந்துள்ளார்.

சடலம் மந்திகை வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை செய்யப்பட்ட பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (2-9-60)







# நல்லூர் பிரதேச சபை தொழிலாளர்கள் அடையாள வேலைநிறுத்த போராட்டம்

(யாழ்ப்பாணம்)



வட மாகாண தேர்தலுக்கு பின்னர் அரச ஊழியர்கள் பொது மக்கள் மீதான தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்து காணப்படுகின்றன எனவும் அவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் எனவும் நல்லூர் பிரதேசபை தவிசாளர் பா.வசந்தகுமார் கோரிக்கை விடுத்துள்ளார்.

நல்லூர் பிரதேச சபை தொழிலாளிகள் மூவர் நேற்று முன்தினம் மாலை இனம் தெரியாத நபர்களால் தாக்கப்பட்டு படுகாயமடைந்துள்ளனர்.

அதனைக் கண்டித்தும் தாக்குதலாளிகளை கைது செய்யக்கோரியும் நேற்றுக் காலை அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளிகளுக்கு ஆதரவாக போராட்டத்தில் ஈடுபட்ட வேளையிலே அவர் இதனை தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச சபை சுகாதார தொழிலாளிகள் நேற்று முன்தினம் மாலை கழிவுகளை உழவு இயந்திரத்தில் ஏற்றி சென்றவேளை, கோண்டாவில் கட்டை ஆலடி இந்து மயானத்திற்கு அருகில் இலக்கத் தகடற்ற 4 மோட்டார் சைக்கிளில் வந்த ஆறு பேர் கொண்ட இனம்தெரியாத நபர்கள் அவர்கள்ளை வழிமறித்து தாக்குதலை மேற்கொண்டனர்.

இந்த தாக்குதல் சம்பவத்தில் சுகாதார தொழிலாளிகளான ஜெகதீஸ்வரன், குணசேகரம், விபுந்தன் ஆகிய மூவரும் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர.

அத்துடன் அவர்கள் சென்ற உழவு இயந்திரமும் தாக்குதலாளிகளால் சேதமாககப்பட்டுள்ளது.

தாக்குதலாளிகள் கைது செய்யப்படாமல் போனாலோ எதிர்வரும் காலத்தில் வேறு தொழிலாளிகள் தாக்கப்படும் சம்பவம் இடம்பெற்றாலோ தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக தொழிலாளிகள் தெரிவித்தனர்.

வடமாகாண தேர்தலில் பின்னர் யாழ். மாவட்டத்தில் தமிழத் தேசிய கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் மீதும் பொதுமக்கள் மீதும் இனம்தெரியாத நபர்கள் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த ஒருவார காலப்பகுதியில் யாழ். மாவட்டத்தில் ஐந்துக்கும் மேற்பட்ட தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-6)

சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினரால்

# மாதாந்தம் மூன்றிடங்களில் சிரமதான பணி முன்னெடுப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபையின் சுகாதார பிரிவினரால் மாதாந்தம் மூன்றிடங்களில் சிரமதானம் செய்யப்படவுள்ளதாக தலைவர் த.சுதர்சன் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய நாளை புதன்கிழமை மீசாலை பொது நூலக வளாகமும் எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை சாவ.நகரசபை அலுவலகமும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நவீன சந்தை போன்ற இடங்களும் துப்புரவு செய்யப்படவுள்ளன.

இச் சுகாதார பிரிவினர் பொதுமக்களால் இனங்காணப்பட்ட பகுதிகள் மாதாந்தம் மூன்றிடங்கள் என்ற அடிப்படையில் சிரம தானம் செய்யப்படவுள்ளன. வழமையான சுகாதார சேவைக்கு மேலதிகமாகவே இச்சிரமதான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக தலைவர் தெரிவித்தார். (2-9-29)

# 144 ஆவது காந்தி ஜெயந்தி தினம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தினரால் நடத்தப்படும் 144 ஆவது காந்தி ஜெயந்தி தினம் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாகவுள்ள காந்தி திருவுருவச் சிலையடியில் சங்கத்தின் யாழ்.கிளைத் தலைவர் கா.கார்த்திகேசு தலைமையில் நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து அன்றையதின மாலைநிகழ்வுகள் பிற்பகல் 3.30 மணிக்கு அகில இலங்கை காந்திசேவா சங்க யாழ்.மாவட்ட பணிமனையில் சங்கத்தலைவர் தி.இராசநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற அதிபர் மூதறிஞர் ஆ.சபாரத்தினம் கலந்து கொள்ளவுள்ளார்.

இதில் சிறப்புரைகளை யாழ்.பல்கலைக் கழக மெய்யியல்துறை விரிவுரையாளர் ந.சிவகரன், மதுரகவி காரை எம்.பி. அருளானந்தம் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

இதன் போது காந்தீயம் பத்திரிகை வெளியீடு இடம்பெறும்.

இதற்கான வெளியீட்டுரையை மூத்த காந்தீயவாதி சோ.க.தம்பிப்பிள்ளை நிகழ்த்தவுள்ளார்.

நூலின் முதற் பிரதியை மூதறிஞர் ஆ. சபாரத்தினம் பெற்றுக் கொள்ளவுள்ளார். (2-5)

# டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தினரால் விசேட தேவைகள் சார்பான மேற்கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவ் விண்ணப்பப்படிவங்களை இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் 9 ஆம் திகதி புதன்கிழமை வரை பிறவுண் வீதி, கொக்குவில் என்ற முகவரியில் அமைந்துள்ள யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளமுடியுமென பிராந்திய நிலைய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (2-9)

# முதியோர்தின விழா


(யாழ்ப்பாணம்)

கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தினரால் கொண்டாடப்படும் முதியோர் தீன விழா நாளை புதன்கிழமை காலை 10 மணி முதல் மதியம் 12 மணி வரை யாழ்.சென் பற்றிக்ஸ் வீதியிலுள்ள அகவொளி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையும் சிறப்பு விருந்தினராக பொது நிலையினர் கழகத்தைச் சேர்ந்த வின்சென்டி போலும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக செல்வி வயலட் இம்மானுவேலும் அருட்தந்தை ஜே.பி.இ.செல்வராஜா அடிகளாரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (2-9)






காரைநகர் மெய்கண்டான் வித்தியாசாலையின் கணனிக்கூட திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் தீவக வலய கல்விப் பணிப்பாளர் ரி.யோன்குயின்ரஸ் நாடாவெட்டி கணனிக் கூடத்தை திறந்து வைப்பதனையும் வேலுப்பிள்ளை சடாச்சரம் நிழற்பிரதி இயந்திரம் ஒன்றினை அன்பளிப்பாக வழங்குவதையும் அருகில் வித்தியாலய அதிபர், கோட்டக் கல்விப் பணிப்பாளர், பு.சிறி விக்கினேஸ்வரன், ஆசிரிய ஆலோசகர் க.கேசவன் ஆகியோர் உடன் நிற்பதை படங்களில் காணலாம்.

(படங்கள்:- காரைநகர் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.கவின் தலைமைக்கு ஆசைப்படுவோர் மாகாண சபை தேர்தலில் வென்று காட்டட்டும்

## தயாகமகே தெரிவிப்பு

(கொழும்பு)

**ரணில் விக்ரமசிங்கவை பதவி விலகச் சொல்லும் அதிகாரம் ஐக்கிய தேசியக் கட்சியில் எவருக்கும் இல்லை. தலைமைப் பதிவிக்கு ஆசைப்படுவோர் முதலில் மாகாண சபை தேர்தலில் வென்று காட்டட்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் தயாகமகே தெரிவித்துள்ளார்.**

அத் தலைமைத்துவ பண்பும் ஆட்சி நடத்தும் தகுதியும் ரணில் விக்கிரமசிங்க விற்கேயுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இராஜகிரியவில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தார.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,


ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தில் எவ்வித குழப்ப நிலையும் இல்லை. நர்ட்டின் ஆட்சி மாற்றத்தை ரணில் விக்ரமசிங்க ஒருவரால் மட்டுமே கொண்டு வர முடியும் என்பதனை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். கட்சியின் தலைமைத்துவத்தை கொடுத்தால் மாற்றத்தை ஏற்படுத்திக் காட்டுவோம் எனக் கூறுவோர் முதலில் தமது தகுதியை நிரூபித்துக் காட்ட வேண்டும்.

மாகாண சபை தேர்தலில் தமது தனிப்பட்ட திறமையை நிரூபித்துக் காட்டிவிட்டு பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைக்காக போட்டியிட வேண்டும்.

மேலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் மேற்கொள்ளப்படும் அராஜக ஆட்சியை மாற்ற வேண்டுமெனில் ரணில் ஒருவரால் மட்டும் போராடி வெற்றி காண முடியாது. கட்சியின் அனைத்து உறுப்பினர்களும் ஒற்றுமையோடும் அர்ப்பணிப்புடனும் செயற்பட்டால் மட்டுமே நாட்டில் ஆட்சி மாற்றம் ஒன்றை எதிர்பார்க்கலாம்.

எனவே, அரசாங்கத்தை எதிர்க்கும் கட்சிகள் அனைத்தையும் ஒன்றிணைத்து அரசாங்கத்திற்கு எதிரான பலமானதொரு எதிர்க்கட்சியை உருவாக்கும் நடவடிக்கையை நாம் மேற்கொண்டு வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (2)

# உருவானான் சிந்திக்கும் எந்திரன்! உருவாக்கினார் இந்தியத் தமிழர்!!



மனிதனைப் போன்று தன்னிச்சையாக செயற்படக் கூடிய எந்திரனை அமெரிக்கா வாழ் இந்திய வம்சாவளித் தமிழ் விஞ்ஞானியான ஜகன்னாதன் உருவாக்கியுள்ளார்.

ஜகன்னாதன், எந்திரன் பற்றி பல ஆண்டாக ஆராய்ச்சி செய்து வருகிறார். அவர் தலைமையிலான குழுவினர் பல வகையில் எந்திரனின் செயலற்பாடுகளைக் கணக்கிட்டு, அதற்கு தனி கட்டளைகளைப் பிறப்பித்து, தானியங்கி முறையில் மட்டுமன்றி, சுயமாக சிந்தித்து, குறைந்தபட்ச செயற்பாடுகளை மேற்கொள்ள வைத்தனர்.

இதில் ஜகன்னாதன் வெற்றி கண்டுள்ளார். எந்திரன் சுயமாக சிந்தித்து, செயற்படக்கூடிய அளவில் அதற்கு மனிதர்களுக்கு உள்ளதை போல மூளையை கண்டுபிடித்துள்ளார்.

அனைத்து கட்டுப்பாட்டுக் கருவிகளையும் மூளையில்வைத்து, மனிதனை போலவே சிந்திக்கும் அளவுக்கும், புரிந்து கொள்ளும் அளவுக்கும் எந்திரனின் செயற்பாட்டை மாற்றியமைத்துள்ளார். சோதனை ரீதியாக எந்திரனுக்கு மூளையை பொருத்தி செயற்படுத்திய போது, எந்திரனுக்கு இலக்கை மட்டும் குறிப்பிட்டு விட்டால் அதை அடைய மனிதனை போலவே அது தானாகவே சிந்தித்து, செயற்படும் என்பதில் வெற்றி கண்டுள்ளார்.

எந்திரனுக்கு அவர் கண்டுபிடித்த மூளையை பொருத்துவதில் படிப்படியாக மேலும் வெற்றி கிடைக்கும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ள ஜகன்னாதன், எதிர்காலத்தில் எந்திரனால், மனிதனை போல சிரிக்கவும் முடியும். கோபப்படவும் முடியும். ஏன், முகபாவத்தை கூட மாற்றிக்காணபிக்கவும் முடியும் என்று உறுதியுடன் தெரிவித்துள்ளார். பாலம் கட்டுவது, மேம்பாலம் அமைப்பது போன்ற இடங் களில் ஒரே நேரத்தில் பத்து புல்டோசர்களை இயக்க வேண்டும் எனின், அதில் உள்ள பழுது களை கண்டுபிடிக்க வேண்டும், அதை சரி செய் யவும் வேண்டும் என்றால் இந்த மூளையுள்ள எந்திரன்களை பயன்ப டுத்தலாம். இதுவே எதிர்காலத்தில் தனது குறிக் கோள் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (2)

# கோட்டக்கல்வி பணிப்பாளர் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வலிகாமம் வலயக்கல்வி அலுவலகங்களில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் (நல்லூர்/உடுவில்) பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் ஆகக் குறைந்தது 3 வருடமேனும் சேவையாற்றக்கூடிய வயதெல்லையுடையவராகவும் இலங்கைக் கல்வி நிர்வாக சேவை III மற்றும் யாழ். மாவட்ட பாடசாலையைச் சேர்ந்த இலங்கை அதிபர் சேவை I ஐ பூர்த்தி செய்தவர்ாகவும் இருத்தல் வேண்டும்.

இப்பதவிகளுக்கு இ.க.நி.சே III இல் பொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்படாத சந்தர்ப்பத்தில் மாத்திரமே இ.அ.சே I ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

விண்ணப்பத்தாரிகள் தங்கள் சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பப்படிவத்தை வலயக்கல்விப் பணிப்பாளரின் உறுதிப்படுத்தலுடன் எதிர்வரும் 08 ஆம் திகதிக்கு முன்னர் மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறு வடமாகாண கல்வி பணிப்பாளர் வ.செல்வராசா கோரியுள்ளார். (2-7)

# அரசியல் அமைப்பு அதிகாரங்கள் வடமாகாணத்திற்கு வழங்கப்படும்

இலங்கையின் அரசியல் அமைப்பில் வழங்கப்பட்டுள்ள சகல அதிகாரங்களும் வடக்கு மாகாணத்துக்கு வழங்கப்படும் என முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

கட்டுநாயக்கவில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாண சபையின் அதிகாரத்தை யார் கைப்பற்றியிருந்தாலும் அது ஜனநாய கத்திற்கு கிடைத்த வெற்றியாகும். போர் வெற்றிக்கு பின்னர் வடக்கில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படமாட்டாது என பலர் நினைத்தனர். ஆனால், அரசாங்கம் அக்க ருத்துக்கு மாறாக வடக்கு மக்களுக்கு ஜன நாயகத்திற்கான சந்தர்ப்பத்தை வழங்கியது என்றார். (அ-2)

# வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வருகை தருவோருக்கு எயிட்ஸ் பாதிப்பு

## எயிட்ஸ் தடுப்பு திட்டத் தலைவர் தெரிவிப்பு

எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளானவர்களில் 40 வீதமானவர்கள் வெளி நாட்டிலிருந்து வருகை தந்தவர்களே என்று தேசிய பாலியல் நோய்கள் மற்றும் எயிட்ஸ் தடுப்பு திட்டத்தின் தலைவர் வைத்தியர் சிசிர லியனகே தெரிவித்துள்ளார்.

33 வீதமான ஆண்களும் 7 வீதமான பெண்களும் இவ்வாறு எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளா கியுள்ளனர். சிகிச்சைக்காக வருவோர் குறித்து நடத்தப்பட்ட ஆய்வில் இவ்விடயம் தெரியவந்துள்ளது.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களில் தொழில் நிமிர்த்தம் வெளி நாடு சென்றவர்கள் மற்றும் உல்லாசப் பிரயாணம் மேற்கொண்டவர்களும் உள்ளடங்குகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

எச்.ஐ.வி. தொற்று இருப்பதாக சந்தேகமுள்ளவர்கள் இரத்த பரிசோதனை மூலம் அதனை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

இரத்த பரிசோதனை மூலமாக மட்டுமே அதனை அறிய முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உத்தியோகபூர்வ தரவுகளின்படி தற்போது இலங்கையில் ஆயிரத்து 739 பேர் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்கள், ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுவோர், போதைப் பொருள் பாவனையாளர்கள், சிறைக்கைதிகள், கடலோரப் பிரதேசங்களில் தமது நேரங்களை அதி கமாக செலவிடும் சிறுவர்கள் ஆகியோர் அதிகமாக எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளாகின்றனர். அவர்க ளுக்கு விழிப்புணர்வு வழங்குவதனூடாக நோயைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க ப்பட்டுள்ளது என் றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பாதுகாப்பற்ற பாலியல் உறவில் ஈடுபட வேண்டாம் என தேசிய பாலியல் நோய்கள் மற்றும் எயிட்ஸ் கட்டுப்பாட்டு பிரிவு பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (2)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## இலங்கை
## முகாமைத்துவ கற்கைகள்
## வணிக பீடம்

**1ஆம், 2 ஆம், 3ஆம், 4 ஆம் வருடம் வணிகமாணி/ தொழில் நிர்வாகமாணி முதலாம்**

**அரையாண்டு மீள் பரீட்சைகள் 2011**

**(பழைய பாடத்திட்டம்)**

முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் மேற்படி பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்கள் 01.10.2013 ஆம் திகதி முதல் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்களை பீடாதிபதி அலுவலகத்தில் 04.10.2013 அன்று அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு மாணவர்கள் வேண்டப்படுகின்றார்கள்.

- பதிவாளர்

(சி-4964)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**திருவாளர் அழகரத்தினம் சத்தியன்**



(MA (Socio) (Read), BBA (Hons) spl in HRM, Dip in English)


அபிவிருத்தி உத்தியோகத்தர்
சுகாதாரத் திணைக்களம்,
கிளிநொச்சி நிர்வாக இயக்குநர்
AM சர்வதேச கல்லூரி

இராமநாதபுரம் கிளிநொச்சியில் பிறந்த ஏழாலையின் மைந்தன் திருவாளர் அழகரத்தினம் சத்தியன் அவர்கள் சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளமையை பெருமையுடன் வாழ்த்தி அவர் மென்மேலும் மக்கள் சேவையுடன் வாழ்வில் உயர உளமார வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துக்களுடன்: பல்கலைக்கழக நண்பர்கள்**

(சி-4965)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முதலமைச்சர்- ஆளுநர் சந்திப்பு



## யாழில் நேற்று இடம்பெற்றது

வடக்கு மாகாணத்தின் முதலமைச்சர் முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறிக்குமிடையில் ஆளுநரின் வாசஸ்தலத்தில் நேற்று முற்பகல் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றது.

நடந்து முடிந்த வடக்கு மாகாண சபைத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் 30 ஆசனங்களைப் பெற்று ஆட்சியமைத்துள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சராக முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை அக்கட்சியின் ஏனைய மாகாண சபை உறுப்பினர்கள் ஏகமனதாக தெரிவு செய்திருந்தனர். இது விடயத்தை கட்சியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா ஊடாக கடிதம் மூலம் ஆளுநருக்கு கூட்டமைப்பு குழுவினர் அறிவித்திருந்தனர்.

இதனையடுத்து முதலமைச்சராக விக்னேஸ்வரனை தாம் ஏற்றுக்கொண்டதாக உத்தியோகபூர்வமாக கடிதம் மூலம் ஆளுநர் அறிவித்திருந்தார்.

இந்நிலையில் நேற்றையதினம் முற்பகல் 10.15 மணியளவில் வடக்கு மாகாண ஆளுநரின் வாசஸ்தலத்திற்கு விஜயம் செய்த முதலமைச்சர் விக்னேஸ்வரன் மற்றும் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் ஆளுநரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

சுமார் 30 நிமிடங்கள் இடம் பெற்ற இந்தச்சந்திப்பையடுத்து வெளியே வந்த முதலமைச்சரிடம் ஊடகவியலாளர்கள் சந்திப்பு தொடர்பாக அறியமுற்பட்ட போது ஊடகங்களுக்கு கருத்துக்கூற முதலமைச்சர் மறுத்துவிட்டார்.

வடக்கு மாகாண சபைக்கென சுமார் 25வருடங்களுக்குப் பின்னர் முதன்முறையாக இடம்பெற்ற தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட முதலமைச்சர் மற்றும் ஆளுநருடனான சந்திப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாக கருதப்படுகிறது.

மேலும் தேர்தல் காலத்தில் வடக்கு மாகாணத்தின் ஆளுநரை மாற்றிவிட்டு சிவில் நிர்வாகத்தைச் சேர்ந்த ஒருவரையே ஆளுநராக நியமிக்கவேண்டுமென தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பினர் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வடக்கு மாகாணத்தின் முதலமைச்சராக சி.வி.விக்னேஸ்வரன் ஏனைய உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்டபோதிலும் ஏனைய அமைச்சர்களின் பதவிகளுக்கான இழுபறி நிலை தொடர்ந்தும் இடம் பெற்று வருகின்றது.

இருப்பினும் போனஸ் ஆசனங்கள் தொடர்பான சர்ச்சை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

(2-6)

# இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்



இன்றைய வடலிகள் நாளைய தோப்புக்களாக நாட்டை அலங்கரிப்பது போல இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்களாகின்றனர்.

எனவே, அவர்களுக்கான அடித்தளம் முன்பள்ளிப் பருவத்தில் இருந்தே வழங்கப்பட வேண்டும். அப்போதுதான் எதிர்காலத்தில் அவர்கள் பல்துறை சார்ந்த ஆளுமைப் பண்புகளை கொண்டவர்களாகவும் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து சாதனை படைக்கவும் கூடிய திறன்களையும் பெற முடியும்.

சிறுவர்கள் எனும் போது 18 வயதுக்குட்பட்ட ஒவ்வொருவரும் சிறுவர், சிறுமியராகக் கணிக்கப்படுகின்றனர். அவர்கள் சிறுவர் உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் சமவாயத்தில் சொல்லப்பட்டிருக்கும் எல்லா உரிமைகளையும் அனுபவித்தல் வேண்டும். ஒவ்வொரு சிறுவனும் அடிப்படைத் தேவைகளைப்பெற உரிமை உள்ளவன் எனவும் நாம் அவற்றை ஒவ்வொரு பிள்ளைக்கும் வழங்குவதில் முனைப்பாக இருக்க வேண்டும் எனவும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் சிறுவர் உரிமை பற்றிய குறிப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி சிறுவர் உரிமைக ளாக உயிர்வாழும் உரிமை, பெயரும் தேசியமும் கொண்டிருக்கும் உரிமை, பெற்றோரை அறியவும் அவர்களின் பராமரிப்பை பெறுவதற்குமான உரிமை, விருப்பத்திற்கு மாறாக பெற்றோரிடமிருந்து பிரிக்கப்படாமை, சிந்தனை மனச்சாட்சி, சமயம் ஆகிய சுதந்திரம், கூடும் சுதந்திரம், அந்தரங்கத்திற்கான உரிமை, கல்வி பெறும் உரிமை, ஓய்வு, பொழுதுபோக்கு, கலாசார நடவடிக்கைகளுக்கான உரிமை, பொருளாதார ஏமாற்றத்திலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான உரிமை, பாலியல் இம்சையில் இருந்து பாதுகாப்பு பெறும் உரிமை, கடின உழைப்பிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை, சித்திரவதை கொடுமைப் படுத்தல், இழிவுபடுத்தும் விதமாக நடத்தப்படுவதிலிருந்து பாதுகாப்பு பெறும் உரிமை, நியாயமான விசாரணை பெறும் உரிமை, சுதந்திரம் பாதுகாப்பிற்கான உரிமை போன்றன முக்கியம் பெறுகின்றன.

சிறுவர் உரிமைகள் சமவாயமானது பிள்ளைகளின் பண்புகளுக்கமைய சமாதானம், கண்ணியம், சகிப்புத்தன்மை, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய இலட்சிய உணர்வுடன் வளர்க்கப்பட வேண்டும் என்பதைக் கருத்திற் கொண்டு சிறுவருக்குச் சிறப்பான பராமரிப்பு அவசியமென்பது உணரப்பட்டு 1923 ஆம் ஆண்டு எக்லான்ரன் ஜெப் சிறுவர் உரிமைகள் பிரகடனத்தை வரைந்தார்.

சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயமானது 1989 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச்சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதில் 54 உறுப்புரைகள் காணப்படுகின்றன. அவற்றிலே 40 உறுப்புரைகள் சிறுவர்கள் பற்றியும் ஏனையவை அவை நடைமுறைப்படுத்தும் முறை பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### நாளைய உலகம் நலமாகும்

சின்ன அரும்பு சில நாளில் மொட்டாகி
பின்னர் மலர்ந்து சிரிக்கிறது பூவாகி
அன்னதன் அழகும் மணமும் நன்றாக
அதனுள்ளே தேனுடன் சூலகம் மறைவாக
நிலத்தில் முளைத்த நட்சத்திர பூக்கள்
கண்ணும் கருத்தும் கவரும் சிட்டுக்கள்
எண்ண வித்தினுள் அடங்காத விருட்சங்கள்
வேரும் விழுதுமாய் தாங்கும் நம்பிக்கைகள்
பாரிலே பெயர்களை பதிவு செய்து
சரித்திரம் ஆகி சாதனை செய்பவர்கள்
நாடும் வீடும் கடந்த உலகமும் தேடும்
தலைவரும் சாதனையாளரும்
சார்ந்ததன் வண்ணமே விதியும் வினையுமால்
பார்த்துப் பக்குவமாய் படியேற்றி விட்டால்
புதியதோர் உலகம் புனைவர் உறுதியாய்
நாளைய உலகம் நலமாகும் நம்பிக்கையாய்.

சு.சிவராசா, நாவற்குழி.

இவ்வாறு சிறுவர் உரிமைகள் தொடர்பாக இலங்கைச் சட்டங்களாக,

* குற்றவியல் கோவை (1995 ஆம் ஆண்டு 22 ஆம் இலக்கச் சட்டம், 1998 ஆம் ஆண்டு 29 ஆம் இலக்கச்சட்டம்)
* சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைச் சட்டம்
* பராமரிப்புச் சட்டம்
* சிறுவர் இளம்பராயத்தவர்பெண்கள் தொழிற் சட்டம்
* சிறுவர் இளம்பராயத்தவர் சட்டம்
* வேலையாட்கள்விசேடபடிகள்சட்டம்
* தொழிலாளர் நட்டஈட்டு கட்டளைச் சட்டம்
* ஆபாசவெளியீடுகள் கட்டளைச்சட்டம்
* சிறுவர் மகவேற்புக் கட்டளைச் சட்டம்

என்பன காணப்படுகின்றன.

**சிறுவர்கள் கற்க விரும்பும் முறைகள்**

சிறியவர்கள் வளர்ந்த மனிதனின் ஓர் உருவம் அல்ல. அவர்கள் குழந்தைஉள்ளம்கொண்டவர்கள். அவர்களின் வயது, பலம், பலவீன ங்கள், விருப்பு, வெறுப்பு என்பவ ற்றை கருத்தில் கொண்டே கற்பித் தல் இடம்பெற வேண்டும். குழந் தைகளை குத்தப்பட்ட வண்ணத்துப்பூச்சிகள் போன்று வகுப்பறையில் அமர்த்தி கற்பிப்ப தைவிட சுதந்திரமாகி சூழலுடன் இசை வாக்கமடைந்து அனுபவம் ஊடா கவே கற்க விரும்புகின்றனர். எனவே, அதற்கேற்படவே கற்றல், கற்பித்தல் இடம்பெற வேண்டும்.

**வாழ்க்கைத்திறன்கள்**

தற்போது பிள்ளைகளிடம் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளாக பல மொழிப்புலமை, பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் ஆற்றல், உலகத்தோடு சேர்ந்து வாழ்தல் போன்றவற்றுக்கு பின்வரும் திறன்கள் முக்கியம் பெறுகின்றன.

* **முடிவெடுக்கும் திறன்:-** எமது வாழ்க்கையில் முன்னேற்றகரமான முடிவுகளை எடுப்பதற்கு உதவுகிறது.

* **பிரச்சினைக்குத் தீர்வு காணல்:-** எமது நாளாந்த பிரச்சினைகளை அணுகும் முறையை தெளிவாக்குகின்றது.

* **ஆக்கபூர்வமான சிந்தனைத்திறன்:-** தகவல்களையும் அனுபவங்களையும் ஒரு நோக்கத்தை அடிப்படையாக கொண்டு ஆராயும் பல்வேறு மாற்று செயல் வடிவங்களில் தெரிவை மேற்கொள்ளவும் உதவும்.

* **ஆராய்ந்தறிதல் திறன்:-** ஒருவரின் மனப்பாங்கு, நடத்தை ஆகியவற்றில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளான நண்பர்களின் தலையீடு, தொடர்பு சாதனங்கள் ஆகியவற்றின் தாக்கத்தை இனம் காணவும் மதிப்பிடவும் உதவுவதன் மூலமும் சுகவாழ்வை வலுப்படுத்தவும் உதவுகிறது. ஒவ்வொரு தெரிவுகளையும் நாம் மேற்கொள்ளும் போது அதன் நன்மை, தீமைகளை வேறுபடுத்தி கண்டறியவும் இத்திறன் அவசியமாகின்றது.

* **நேர்த்தியான தொடர்பாடல் திறன்-** எம்மை எமது கலாசார சூழ்நிலைக்கேற்ப வெளிப்படுத்த உதவும். இதன்மூலம் எமது தேவை களை சிறப்புற தெரிவிக்கவும் சந் தர்ப்பத்தில் தேவைப்படும் ஆலோசனையை பிறரிடம் கேட்டுப் பெற்றுக் கொள்ளவும் இலகுவாக்கின்றது.

* **தனிநபரிடைத் தொடர்புத் திறன்-**நாம் பழகும் நபர்களுக்கிடையே சிறப்புத் தொடர்பு கொள்ள உதவும் நீடித்த ஆழமான நட்புறவு வளரவும் எமது மனச்சுகம் மேம்படவும் இது காரணமாகின்றது. குடும்ப உறுப்பினரிடையே உறவு வளரவும் சமூகத்தின் ஆதரவை பெறவும் இத் திறன் அவசியமாகிறது.

* **சுய விழிப்புணர்வு-** எம்மை, எமது இயல்புகளை, எமது பலத்தை, விருப்பு, வெறுப்புக்களை இனங்காண்பதற்கு உதவுகின்றது. அதனுடன் தனதுணர்வுத்திறனை வளர்த்து விடுதல், இளம் சந்ததியின ரிடையே உள நெருக்கீட்டை இனங் காணவும்மனஅழுத்தத்திற்குஉட்படும்நிலைமையை இனங்காணவும் உதவும்.

* **புறநிலை நின்று உணர்தல் திறன்-** மற்றையவர் வாழ்வு எங்கனம் உள்ளது என அனுபவிக்காது அறிந்து கொள்ள வகை செய்கிறது. இதனால்மற்றவர்களிடம்காணும் வேறுபாடுகளை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் இளம் பிள்ளையிடத்தில் ஏற்படும். உதாரணமாக சமூகத்தில் பல்லினங்கள் வாழும் சூழலில் புறநிலை நின்றுணரும் திறன் மிக்கவர்கள் ஆதரவான நடத் தையும் பொறுமையும் காண்பிப்பவர்களாகவும் பாதிக்கப்பட்ட அல்லது பின்தங்கியவர்களுக்கு அல்லது சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்களுக்கும் உதவும் மனப்பான்மையைப் பெற்றுக் கொடுத்தல்.

* **உணர்வலைகளுக்கு முகங் கொடுக்கும் திறன்-**

விருத்தி பெற்றால் கோபம், பயம், கவலை முதலிய உணர்வுகள் தூண்டப்படும் விதம் பற்றியும் அவற்றை முகாமைப்படுத்தும் வழிமுறைகளையும் இலகுவாக இளம் பிள்ளைகளிடம் வளர்த்தெடுக்க முடியும்.

* **மன அழுத்தத்திற்கு முகங் கொடுக்கும் திறன்-** மன அழுத்தத்தை கையாளக்கூடிய பிள்ளைகள் அவ்வழுத்தத்தை குறைப்பதற்குரிய படிமுறைகளை இலகுவாக கையாளுவார்கள். மேலும் சுகாதார பிரச்சினைகள் வளர்வதை தடுப்பதற்கு இத்திறன் உதவுகின்றது.

சிறுவர்கள் ஒவ்வொருவரும் தனித்துவமானவர்கள். அவர்கள் ஒவ்வொருவரிடமும் நிறைய ஆற்றல்கள் பொதிந்துள்ளன. அவ்வாற்றல்களை வெளிக்கொணர்வதற்கு நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயற்படும் போதே ஆரோக்கியமான சமூகத்தையும் நாட்டையும் உருவாக்க முடியும்.

## உலக சிறுவர், முதியோர் தினம் இன்றாகும்

த.சிவகுமார்
விரிவுரையாளர் விசேட கல்வித்துறை
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 65 வருடங்களாக நிரந்தர கட்டடம் இன்றி


# தனியார் கட்டடத்தில் இயங்கும் புதுக்குடியிருப்பு அஞ்சல் அலுவலகம்

(முல்லைத்தீவு)

**புதுக்குடியிருப்பு அஞ்சல் அலுவலகம் 65 வருடங்களாக நிரந்தர கட்டடம் இன்றி தனியார் வீடொன்றில் வாடகை செலுத்தி இயங்கி வருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

இவ் அஞ்சல் அலுவலகம் 1948 ஆம் ஆண்டு உப அஞ்சல் அலுவலகமாக ஆரம்பிக்கப்பட்டு 1989 ஆம் ஆண்டு வரை புதுக்குடியிருப்பு மேற்கு கிராம சேவையாளர் பிரிவில் இயங்கி வந்தது.

1990 - 2002 வரை புதுக்குடியிருப்பு கிழக்கு கிராம சேவையாளர் பிரிவிலும் பின்னர் 2003 - 2005 வரை புதுக்குடியிருப்பு மேற்கு கிராமசேவையாளர் பிரிவிலும், 2006 - 2007 வரை மந்துவில் கிராம சேவையாளர் பிரிவிலும், 2007 - 2008 வரை புதுக்குடியிருப்பு மேற்கிலும் இயங்கி வந்தது.




பின்னர் போர்ச் சூழல் காரணமாக இயங்காதிருந்த நிலையில் இந்த உப அஞ்சல் அலுவலகம் 2006 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 10 ஆம் திகதி முதல் அஞ்சல் அலுவலகமாக தரமுயர்த்தப்பட்டது.

ஆனால் 2011 ஆம் ஆண்டு மக்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்டதில் இருந்து புதுக்குடியிருப்பு மேற்கு கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியில் தனியார் வீடொன்றில் இயங்கி வந்தது.

தற்பொழுது ஆனந்தபுரம் உபஅஞ்சல் அலுவலகம் இவ் அஞ்சல் அலுவலகத்தின் கீழேயே இயங்கி வருகின்றது.

புதுக்குடியிருப்பு கிழக்கு, புதுக்குடியிருப்பு மேற்கு, சிவநகர், இரணைப்பாலை, கோம்பாவில், தேவிபுரம், வள்ளிபுனம், மந்துவில், மல்லிகைத்தீவு, ஆனந்தபுரம் ஆகிய கிராமங்கள் உட்பட 108 கிராமங்களில் வாழும் 6ஆயிரத்து 700 குடும்ப அங்கத்தவர்கள் இந்த அஞ்சல் அலுவலகத்தைப் பயன்படுத்தி வருகின்றனர்.

கடந்த 2011 ஆம் ஆண்டு புதுக்குடியிருப்பு பிரதேச செயலரால் அரை ஏக்கர் காணி புதுக்குடியிருப்பு இரணைப்பாலை வீதிக்கு அருகில் இவ் அஞ்சல் அலுவலகத்திற்கென வழங்கப்பட்டது.

தற்காலிக கட்டடத்தில் இயங்கும் இவ் அஞ்சல் அலுவலகத்தில் 2 தபாலதிபர்கள் தேவைப்படுகின்ற நிலையில் தபாலதிபர் ஒருவரே கடமையிலுள்ளார். இங்கு இரு தபால் ஊழியர்கள் தேவை

மேலும் இவ்அலுவலகத்துக்கு நிழல் பிரதி வசதி, மின்னஞ்சல் வசதி, வாகனதரிப்பிடம் மற்றும் கிராமங்கள் தோறும் வீதிகளில் அமைக்கப்படும் தபால் பெட்டிகள் என்பன இல்லை.

எனவே இவ்அஞ்சல் அலுவலகத்துக்கு வழங்கப்பட்டுள்ள காணியில் நிரந்தர கட்டடம் ஒன்றையும் ஏனைய வசதிகளையும் விரைவில் அமைத்து வழங்கும்படி துறைசார்ந்த அதிகாரிகளிடம் அப்பகுதி மக்கள் வேண்டுகோள் ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-267)

# கடற்றொழில் உபகரணங்களை வழங்கி வாழ்வாதாரத்திற்கு உதவுங்கள்

## கடற்தொழில்ாளர்கள் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள செல்வபுரம் கிராமத்தில் 181 கடற்றொழில் குடும்பங்கள் வாழும் நிலையில் 134 குடும்பங்களுக்கே கடற்தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஏனைய குடும்பங்களுக்கு அவை வழங்கப்படவில்லை எனவும் பாதிக்கப்பட்டவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

போரினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து வாழ்ந்து 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட இம்மக்களுக்கு அவர்களின் ஜீவாதார தொழிலுக்கான உபகரணங்கள் வழங்கப்படாமையானது அவர்களை தமது அன்றாட வாழ்வை நடத்த முடியாத நிலைக்கும் அசாதாரண நிலைக்கும் தள்ளியுள்ளது.

இக்கிராமத்தில் 181 கடற்றொழில் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்ற நிலையில் 62 படகுகள் மற்றும் இயந்திரங்கள் என்பன 2 குடும்பத்திற்கு 1 படகு 1 இயந்திரம் என்ற அடிப்படையில் வழங்கப்பட்டு இதனால் 124 குடும்பங்களே பயன்பெற்றனர். அத்துடன் 10 குடும்பங்களுக்கு தெப்பம் வழங்கப்பட்டது.



ஏனைய குடும்பங்களுக்கு இவை எவையும் வழங்கப்படாமையால் பாடசாலை மாணவர்கள் மற்றும் சிறு குழந்தைகளை கொண்ட இக்குடும்பங்கள் மிகவும் கஷ்ட நிலையை அனுபவிக்கின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் கடற்தொழில் உபகரணங்கள் கிடைக்காதோருக்கு அவற்றைக் கிடைக்க செய்ய வேண்டுமென பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளனர். (ம-267)



பூநகரி பிரதேச மாணவர்கள் இலக்கிய ஆர்வலர்களை ஊக்கப்படுத்தும் முகமாக பூநகரி பிரதேச கலாசார பேரவையின் ஏற்பாட்டில் கவிதைப்பயிற்சி பட்டறை பூநகரி பிரதேச செயலக மண்டபத்தில் அண்மையில் இடம் பெற்ற போது...
(படம் - பூநகரி செய்தியாளர்)

# சர்வதேச சிறுவர் தினம்



(பூநகரி)

இன்று சர்வதேச சிறுவர் தினமாகும். இதனை யொட்டி இன்று காலை 9 மணியளவில் பூநகரி.ம.வி மண்டபத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளும், போட்டிகளும் நடைபெறவுள்ளன.


பூநகரி.ம.வி அதிபர் இ.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் ஆரம்ப பிரிவு மாணவர்களின் கலை நிகழ்வுகளும், இடைநிலை, உயர்நிலை மாணவர்களுக்கானபொது அறிவுப் போட்டியும், சிறப்பு நிகழ்வாக ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொள்ளும் உதை பந்தாட்டப் போட்டியும் இடம்பெறவுள்ளது. (ம-84)




# கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் காணி பகுதி நாள் கூட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட சில கிராமங்களில் காணி பகுதி நாள் கூட்டங்கள் நடைபெறவுள்ளன.



இக் கூட்டங்கள் உதய நகர் மேற்கில் எதிர்வரும் ஒக்டோபர் 3ஆம் திகதி, செல்வா நகரில் 8ஆம் திகதி, திருவையாறு மேற்கில் 15ஆம் திகதி, தொண்டமான் நகரில் 24ஆம் திகதி, அம்பாள் கிராமத்தில் 29ஆம் திகதி ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளன.

மேலும் ஆனைவிழுந்தான்குள கிராமத்தில் எதிர்வரும் நவம்பர் மாதம் 5ஆம் திகதியும் சிவநகர் கிராமத்தில் நவம்பர் 14ஆம் திகதியும் கனகாம்பிகை குள கிராமத்தில் நவம்பர் 19 ஆம் திகதி, கிளி. நகரத்தில் நவம்பர் 26ஆம் திகதி ஆகிய தினங்களிலும் நடைபெறவுள்ளன.

இதனைத் தொடர்ந்து கிருஷ்ணபுரம் கிராமத்தில் எதிர்வரும் டிசம்பர் மாதம் 3ஆம் திகதி, வட்டக்கச்சி கிராமத்தில் டிசம்பர் 10ஆம் திகதி, மாயவனூர் கிராமத்தில் டிசம்பர் 19ஆம் திகதி , புதுமுறிப்பு கிராமத்தில் டிசம்பர் 24ஆம் திகதி ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளன.

இக்காணிக்கான பகுதிநாள் கூட்டங்களில் அந்தந்த கிராமத்து மக்கள் தவறாது பங்குபற்றி தங்கள் காணிக்குரிய பதிவுகளையும், பிணக்குகளையும் தீர்த்து கொள்ளலாம் என கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ம-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## எத்தனை புறாக்கள்?

வழக்கம் போல் அக்பரின் அரசவையில் கூட்டம் நிரம்பி வழிந்தது. சக்கரவர்த்தி அப்பொழுதுதான் தனது நாட்டு நலனைப் பற்றி முக்கியமான விவாதத்தை முடித்தார்.

அவருக்கு சற்று ஓய்வு தேவைப்பட்டது. அவரது அவையினரையும் சோதிக்க வேண்டும் என நினைத்தார்.

தனது அவையினரைப் பார்த்து, ஆக்ரா நகரில் எவ்வளவு புறாக்கள் உள்ளன? என்று திடீரெனக் கேட்டார்.

இந்த எதிர்பாராத கேள்வியினால் அவையில் உள்ள அனைவரும் ஆச்சரியப் பட்டனர். யாராலும் இதற்கு பதில் கூற முடியவில்லை. தாங்கள் சிரித்தாலோ அல்லது தவறான பதிலளித்தாலோ மன்னன் கோபம் கொள்வார் என்பதை அனைவரும் அறிந்திருந்தனர். அதனால் அனைவரும் மௌனமாக இருந்தனர்.

சக்கரவர்த்தி அக்பர், பீர்பாலின் முகத்தைப் பார்த்தார்.

பீர்பால் ஆக்ரா நகரில் எத்தனை புறாக்கள் உள்ளன என்று உன்னால் கூற முடியுமா? எனக் கேட்டார்.

பாதுஷாவே! ஆக்ராவில் இருபத்து ஓராயிரத்து அறுநூற்று எட்டு புறாக்கள் உள்ளன என பீர்பால் உடனே கூறினார்.

எவ்வாறு உனக்கு சரியான எண்ணிக்கை தெரியும். நீ கூறிய எண்ணிக்கையை விட அதிகமான புறாக்கள் இருந்தால்?, என அக்பர் கேட்டார்.

அப்படி நான் கூறிய எண்ணிக்கையை விட அதிகமான புறாக்கள் இருந்தால் மற்ற இடங்களிலிருந்து தனது உறவினர்களான ஆக்ராவில் உள்ள புறாக்களைக் காணவந்த விருந்தினர்களாக இருக்கக்கூடும் என்று சற்றும் சளைக்காமல் பீர்பால் பதிலளித்தார்.

அப்படி நீ கூறிய எண்ணிக்கையை விட குறைவான புறாக்கள் இருந்தால்? என அக்பர் மீண்டும் மடக்கினார்.

ஆக்ராவில் உள்ள புறாக்கள் விடுமுறைக்காக வெளியூர் சென்றிருக்கக் கூடும் என பீர்பால் சாதுர்யமாக பதில் கூறினார்.

சபாஷ் பீர்பால்! என்று அக்பர் கை தட்டினார். உன்னால் எப்போதும் சாதுர்யமாக பதிலளிக்க முடியும் என்றார்.






- கி.மு.331- மகாஅலெக்சாண்டர் பேர்சியாவின் மூன்றாம் டாரியஸ் மன்னனை போரில் வென்றான்.
- 1788-நியூவென் ஹியூ வியட்நாமின் மன்னராக தன்னை அறிவித்தார்.
- 1795- பிரான்ஸ் பெல்ஜியத்தைக் கைப்பற்றியது.
- 1799-புதுக்கோட்டை மன்னர் விஜயரகுநாத தொண்டமானால் வீரபாண்டிய கட்டபொம்மன் கைது செய்யப்பட்டான்.
- 1800-ஸ்பெயின் லூசியானாவை பிரான்சிடம் தந்தது.
- 1814- நெப்போலியனின் தோல்வியை அடுத்து ஐரோப்பாவின் புதிய அரசியல் வரைபடத்தை வரைவதற்காக வியென்னா காங்கிரஸ் கூடியது.
- 1827- இவான் பஸ்க்கேவிச் தலைமையில் ரஷ்ய இராணுவம் ஆர்மெனியாவின் தலைநகர் யெரெவானைப் பிடித்தது.
- 1843- நியூஸ் ஒஃப்தெ வேர்ல்ட் பத்திரிகை லண்டனில் வெளியிட்டது.
- 1854- இந்திய அஞ்சல் துறை ஏற்படுத்தப்பட்டது
- 1869- உலகின் முதல் தபால் அட்டை ஆஸ்திரியாவில் வெளியிடப்பட்டது.
- 1880- இந்தியாவுடனான காசுக்கட்டளை இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1880- முதலாவது மின் விளக்கு தொழிற்சாலையை தொமஸ் எடிசன் ஆரம்பித்தார்.
- 1887- பிரித்தானியரினால் பலூசிஸ்தான் கைப்பற்றப்பட்டது.
- 1892- இலங்கையில் இந்திய இரண்டு அணா நாணயம் செல்லுபடியற்றதாக்கப்பட்டது. பதிலாக வெள்ளி நாணயம் அறிமுகமானது.
- 1898- ரஷ்யாவின் முக்கிய நகரங்களிலிருந்து யூதர்கள் இரண்டாம் நிக்கலாஸ் மன்னனால் வெளியேற்றப்பட்டனர்.
- 1910- லாஸ் ஏஞ்சலீஸ் டைம்ஸ் கட்டடம் பெரும் குண்டுவெடிப்பினால் தகர்க்கப்பட்டது.
- 1918- முதலாம் உலகப் போர்: அரபுப் படைகள் சிரியாவின் டமாஸ்கஸ் நகரைக் கைப்பற்றினர்.
- 1931- ஜோர்ஜ் வாஷிங்டன் பாலம் திறக்கப்பட்டது.
- 1943-இரண்டாம் உலகப்போர்: நேப்பில்ஸ் கூட்டுப் படைகளிடம் வீழ்ந்தது.
- 1949-மா சே துங்கினால் மக்கள் சீனக் குடியரசு அறிவிக்கப்பட்டது.
- 1953- ஆந்திரா மாநிலம் உருவாக்கப்பட்டது.
- 1960-சைபிரஸ், மற்றும் நைஜீரியா ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்றன.
- 1961- கிழக்கு மற்றும் மேற்கு கமரூன் ஒன்றுபட்டு கமரூன் சமஷ்டிக் குடியரசு ஆகியது.
- 1969-கொன்கோர்ட் விமானம் முதற்தடவையாக ஒலியின் வேகத்தை மீறியது.
- 1971- வால்ட் டிஸ்னி உலகம் புளோரிடாவில் அமைக்கப்பட்டது.
- 1975- சிஷெல்ஸ் சுயாட்சியைப்பெற்றது. எலிஸ் தீவுகள் கில்பேர்ட் தீவுகளிலிருந்து பிரிக்கப்பட்டு துவாலு என்ற பெயரைப் பெற்றது.
- 1978- துவாலு ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1979- ஐக்கிய அமெரிக்கா பனாமா கால்வாயை பனாமாவுக்கு மீள் அளித்தது.
- 1982-சொனி நிறுவனம் முதலாவது குறுந்தட்டு ஒலிபரப்பு சாதனத்தை வெளியிட்டது.
- 1994- பலாவு ஐ.நாவிடம் இருந்து விடுதலை பெற்றது.
- 2001- ஜம்மு காஷ்மீர் சட்ட பேரவையைத் தகர்க்க தற்கொலைப் படையினர் தாக்குதல் நடத்தினர்.
- 2006- பாண்டிச்சேரி மாநிலத்தின் பெயர் புதுச்சேரி என மாற்றம் பெற்றது.

### பிறப்புகள்

- 1847- அன்னி பெசண்ட், பெண் விடுதலைக்குப் போராடியவர் (இ.1933)
- 1927- சிவாஜி கணேசன், தமிழ்த் திரைப்பட நடிகர் (இ.2001)
- 1932- அரங்க முருகையன் தமிழறிஞர், எழுத்தாளர், (இ2009)
- 1936- கே.எஸ்.சிவகுமாரன், ஈழத்து எழுத்தாளர், திறனாய்வாளர்
- 1947- ஆரன் சீசேனோவர், நோபல் பரிசு பெற்ற இஸ்ரேலியர்.

### இறப்பு

- 2008- பூர்ணம் விஸ்வநாதன் ,தமிழக நாடக, திரைப்பட நடிகர்

### சிறப்புநாள்

உலக சிறுவர் மற்றும் முதியோர் தினம்
ஒக்டோபர் 1-7 உலக வனவுயிரி வாரம்

### கே.எஸ். சிவகுமாரன்



கே.எஸ். சிவகுமாரன் ஈழத்து எழுத்தாளரும், கலை, இலக்கியத்திறனாய்வாளரும் ஆவார். மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் இலக்கியம், நாடகம், திரைப்படம், ஊடகங்கள், அறிவியல், செய்தித் திறனாய்வுகள், அரசியல் திறனாய்வுகள், இசை, நடனம், ஓவியம், மொழிபெயர்ப்பு, சிறுகதை, கவிதை போன்ற பல துறைகளிலும் திறம்பட விளங்கியவர்.

இலங்கை வானொலியில் தமிழிலும், ஆங்கிலத்திலும் நிகழ்ச்சிகளை வழங்கியிருக்கிறார். 30 தமிழ் நூல்களையும், 2 ஆங்கில நூல்களையும், இரண்டு ஆங்கிலமொழிக் கலைக்களஞ்சியங்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

ரேவதி என்ற புனைபெயரிலும் திரைப்படம் சம்பந்தமான கட்டுரைகளை ஆங்கிலத்தில் இவர் எழுதி வந்திருக்கிறார். 1959 இல் நாவலாசிரியர் வரிசையில் வரதராசனாரின் இடம் என்பதே இவர் எழுதிய முதலாவது இலக்கியத்திறனாய்வுக் கட்டுரையாகும். ஜீவநதி சஞ்சிகை கே.எஸ். சிவகுமாரனுடைய பவள விழாச் சிறப்பிதழாக ஓர் இதழை வெளியிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தருமத்தில் சிறந்த அண்ணன், தம்பி!



ஆன்மீகம் 130

சிங்கப்பூர் சென்றேன், என் தரும சிந்தனையை எடுத்துரைத்தேன். என் விதை இரண்டு தங்கமான உள்ளத்தின் நிலத்தில் விழுந்து முளைத்தது. அவர்கள் இந்திராணி அம்மா ஈன்றெடுத்த செல்வ சீமான்களாகிய சிங்கைராஜா, நடராஜானந்த பாபா.

ஒரு காலத்தில் மிகப்பெரிய ரவுடியாகவும் கோபத்தில் தலை சிறந்தவராயும் இருந்தார். நடராஜானந்த பாபா, இன்று பல சீனர்களும் சிங்கப்பூர் தமிழ்மக்களும் இவர் உபதேசத்தைக் கேட்க, பார்க்க ஆவலாய் உள்ளார்கள் என்றால் இவரது உள்ளத்தில் சித்தர்கள் வாசம் செய்வது உண்மை.

ஒருமுறை நான் சிங்கப்பூர் கடற்கரையில் நடராஜானந்த பாபாவுடன் தியானம் செய்தபோது அவர் என்னிடம் குருநாதா நம் தவ சக்தியால் கடல்மாதா நமக்கு ஆசி வழங்குவதை எப்படி உணர முடியும் என்றார். அடியேன் ஏன்? உணரலாமே என்றேன். நீயே சொல் எப்படி உணர்ந்தால் நீ ஒப்புக்கொள்வாய் என்றேன். திடீரென்று வானத்தில் போகர் பெருமான் கருடன் வடிவில் வட்டமிட்டார். சரி இங்கு ஏதோ நடக்கப் போகிறது. இவர்வேறு சங்கடமான கேள்வியை கேட்டுவிட்டார் என உணர்ந்தேன்.

குருவே சாட்சி என்று இவர் என்ன புதில் போடப் போகிறார் என்று காத்திருந்தேன். என்னை சோதிப்பது போல் சுவாமி நடராஜானந்தர் குருநாதா நாம் தவம் செய்ததை கடல்மாதா ஏற்றுக்கொண்டால் கடல் அலை நிற்க வேண்டும் என்றார். அடியேன் ஆடிவிட்டேன். சரி அதனால் உனக்கென்ன லாபம் என்றேன். திடீர் என்று ஆறு அடி நீளம் உள்ள சர்ப்பம் எங்களைத் தாண்டி விர் என்று போய்விட்டது. அவனுக்கு ஒரு ஆச்சரியம் முகத்தில் தெரிந்தது. அடியேன் கண்டுகொள்ளவில்லை. சரி கடல் அலை நின்றால்



உனக்கு சக்தி வந்தது என்று தெரிய வேண்டும் அவ்வளவுதானே என்று எழுந்து குருவை நினைத்து இவன் கண்களுக்கு அலை நிற்பதுபோல் தெரிய வேண்டும். இல்லை நான் சிங்கப்பூரை விட்டு போக வேண்டும் என்று முணுமுணுத்து மந்திரம் சொல்வதுபோல் கொஞ்சம் கடல் தண்ணீரை அவர் முகத்தில் தெளித்தேன்.

பார் கடலை, கடல்மாதா நிற்பதை என்றேன். அவன் கண்களுக்கு கடல் அலை ஒருகணம் நிற்பதை கண்டுவிட்டான். கடல்மாதா என்னைக் காப்பாற்றிவிட்டாள்.

குருநாதா குருநாதா என்றான். என்னவென்று கேட்டேன். ஆச்சரியம் மூன்று நட்சத்திரம் கடலுக்குள் புகுந்து கடல் அலை நின்று விட்டது. என் கண்களுக்கு தெரிந்த போது அந்த மூன்று நட்சத்திரமும் என் உள்ளத்தில் புகுந்துவிட்டது என்றான்.

ஒரு பக்கம் இவன் என்னை சோதனை செய்தாலும் வெறும் சாதனை அடைந்தான் என்ற மகிழ்ச்சியோடு. காரில் புறப்பட்டு வந்து கொண்டு இருந்தோம். மீண்டும் நடராஜானந்தா என்ன குருநாதா ஆச்சரியம் என்றான்.

அடியேன் இனி நீ சிங்கப்பூர் வாழும் தரும சிந்தனையுடைய மக்களைக் காக்க வேண்டும். சிங்கப்பூர் அருகில் கடல் இருக்கிறது. எங்கெல்லாம் கடல் இருக்கிறதோ அங்கிருந்து 25 கி.மீ. தூரம் உள்ள மக்களை தர்ம சிந்தனையுடைய மக்களை நீ காக்க வேண்டும். தயவுசெய்து பணத்திற்கு ஆசைப்படாதே. சித்தர்கள் கூட்டு வழிபாடுசெய். பிறர் உன்னை கேலி, கிண்டல் செய்யலாம். உன்னில் புகுந்த அந்த 3 சித்தர்கள் அகத்தியர், ஸ்ரீ போகர், ஸ்ரீவள்ளல் ராமலிங்க சுவாமிகள், அவர்கள் அருளால் நீ எது தொட்டு கொடுத்தாலும் அது உற்பத்தியாகும். பிரச்சினைகள் நிவர்த்தியாகும். சித்தர்கள் வல்லமை வாய்ந்தவர்கள். நீ வந்த வேலை எதுவோ அதைச்செய் என்றேன்.

ஒருமுறை சென்னைக்கு சிங்கைராஜா சுவாமிகள், நடராஜானந்த சுவாமிகள் வந்தார்கள். மலைகள், குகைகள் எல்லாம் சென்றோம். ஏன்? உங்களுக்கு என்று ஒரு இடம்கூட இல்லையா? ஏன் வாடகை வீட்டில் இருக்கிறீர்கள். ஒவ்வொரு சாமியார்கள் பலகோடி ரூபா பெறுமதியான சொத்து வைத்திருக்கிறார்களே என்றார்கள்.

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

(தொடரும்)

# "கூட்டணி வைத்து இந்திய நாடாளுமன்றத் தேர்தலை சந்திப்பேன்" - விஜயகாந்த்

தொகுதி பங்கீட்டில் எந்தக் கட்சி தலைவருமே பலமிழக்கவோ, அல்லது தங்களது ஆளுமைத் திறனை விட்டுக்கொடுக்கவோ, விரும்ப மாட்டார்கள். அதனால் கடைசிவரை சஸ்பென்ஸாக வைத்து திடீரென்று ஒரு கட்சியுடன் கூட்டணி அமைத்து, தொகுதிப்பங்கீட்டையும் முடித்துக்கொள்வார்கள்.

இந்த யுக்தியைக் கடைப்பிடிக்காமல் முன்கூட்டியே இந்தக் கட்சியுடன்தான் கூட்டணி என்று அறிவித்துவிட்டால் அந்தக் கூட்டணியில் அறிவித்தவருக்கு கிடைக்க வேண்டிய உரிய தொகுதிப்பங்கீடு கிடைக்காது. இது தேர்தல் பாலபாடம் கற்றவர்கள் அறிந்த உண்மை.

அதனால்தான் இப்போதைய இந்தக் கட்சியுடன் கூட்டணி வைக்கப்போகிறேன் என்பதை அறிவிக்காமல் கூட்டணி அமைப்பதற்கு காலநேரம் பார்த்துக் கொண்டிருக்கிறார் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த்.

கூட்டணி என்பதில் உறுதியாக இருக்கிறார். ஆனால், யாருடன் கூட்டணி என்பதை முடிவு செய்யவில்லை என்பதை மற்றகட்சித் தலைவர்களும் உன்னிப்புடன் பார்க்கிறார்கள்.

குறிப்பாக பாரதீய ஜனதாக் கட்சி இதில் அக்கறை செலுத்துகிறது. அ.தி.மு.கவுடன் தங்களுக்கு கூட்டணி கிடைக்காது என்ற நிலையில் பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள நரேந்திர மோடியின் தமிழக கூட்டணி வியூகம் என்ன என்பதை அனைவரும் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள்.


அவர் திருச்சியில் பேசப் போகும் கருத்துக்களில் இருந்துதான் மோடியின் வியூகம் வெளிப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், அந்த வருகைக்குள் இப்போதே பா.ஜ.க.விற்கு வேண்டியவர்கள் சிலர் விஜயகாந்துடன் பேச்சுவார்த்தை திரைமறைவில் நடத்தி வருவதாகத் தகவல். உங்களுக்கு 2016 சட்டமன்றத் தேர்தல்தான் லட்சியம். அதை அடைவதற்கு நாங்கள் கை கொடுக்கிறோம். இப்போது நாடாளுமன்றத் தேர்தலில் நீங்கள் எங்களுக்கு கைகொடுங்கள் என்று கோரிக்கை வைக்கப்பட்டு வருகிறது.

இந்த அழைப்பின் பெயரில் விஜயகாந்த் இன்னும் ஆர்வம் காட்டவில்லை. அதற்கு இரு காரணங்கள் இருப்பதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஒன்று பா.ஜ.க. தரப்பில் எடுக்கப்படுவது உண்மையான முயற்சியா அல்லது நம்மைக் காட்டி அ.தி.மு.கவுடன் கூட்டணி வைப்பதற்கு பா.ஜ.க. முயற்சிக்கிறதா என்ற சந்தேகத்தில் விஜயகாந்த் இருப்பதாக அவருக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அதற்கு காரணம் ஹைதராபாத்திற்கு வந்த நரேந்திரமோடி அங்கு நின்று கொண்டே தமிழக அரசைப் பாராட்டினார்.

தமிழக முதல்வர் ஜெயலலிதாவிற்கும் அவருக்கும் நெருங்கிய அரசியல் உறவு இருக்கிறது. அதனால் அவரை எதிர்த்துக்கொண்டு நம்முடன் கூட்டணிக்கு வருவாரா நரேந்திரமோடி என்ற தயக்கம் விஜயகாந்திடம் இருக்கிறது. இதை ஒரு புறமிருக்க, பா.ஜ.கவுடன் மட்டும் சேர்ந்து கூட்டணி வைப்பது அ.தி.மு.கவை ஜெயிக்க விடாமல் செய்வதற்கு உதவுமா என் பதிலும் விஜயகாந்திற்கு ஏகப்பட்ட சந்தேகம் இருக்கிறது. ஏனென்றால், பலமான கூட்டணி இருந்தால்தான் அ.தி.மு.கவை சந்திக்க முடியும். நாம் போட்ட சபதத்தை நிறைவேற்ற முடியும் என்பது விஜயகாந்தின் வியூகம். ஆகவே, இந்த இரு காரணங்களின் அடிப்படையில் விஜயகாந்த் இன்னும் பா.ஜ.கவுடன் கூட்டணி வைப்பது பற்றி முடிவு எடுக்கவில்லை.

தூத்துக்குடி பொதுக்கூட்டத்தில் அவரது பேச்சு, திருச்சியில் நரேந்திரமோடி கூட்டத்திற்கு முன்பு பா.ஜ.க. விடுத்துள்ள அழைப்பு பற்றி முடிவு எடுக்காதது, அனைத்து முக்கியக் கட்சிகளையுமே சாடும் அவரது மனப்பான்மை-இது அனைத்துமே வருகின்ற தேர்தலில் கூட்டணி வைக்காமல் தனித்து போட்டியிடுவேன் என்பதற்கான அடையாளம் அல்ல. அதற்கு மாறாக நாடாளுமன்றத் தேர்தலில் நிச்சயம் கூட்டணி அமைப்பேன். அதுவும் அ.தி.



மு.கவை ஜெயிக்க விடாமல் செய்வதற்கேற்ற வலுவான கூட்டணியை அமைப்பேன் என்பதற்கான சமிக்ஞைகள்!

விஜயகாந்தின் எண்ணவோட்டத்தைப் புரிந்துகொண்ட திராவிட முன்னேற்றக்கழகமும் காங்கிரஸ் கட்சியும் அமைதியாக தங்கள் கட்சியின் போராட்ட வியூகங்கள், பொதுக் கூட்ட வியூகங்களை செய்து கொண்டிருக்கிறார்கள்.

தமிழக காங்கிரஸ் தலைவர்கள்கூட தங்கள் கட்சியின் தலைமையில் உள்ள மத்திய ஆட்சியின் சாதனைகளை நவீன தொழில்நுட்பங்கள் மூலம் விளக்கத் தொடங்கிவிட்டார்கள்.

-எம்.காசிநாதன்- (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# த.தே.கூட்டமைப்பு அரசியலுக்கு முரணாக செயற்படுகிறது

## ஜாதிக ஹெல உறுமய தெரிவிப்பு

(கொழும்பு)

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் சாசனத்திற்கு முர்ணான வகையில் செயற்பட்டு வருவதாக ஜாதிக ஹெல உறுமய கட்சி தெரிவித்துள்ளது.**

வடமாகாண ஆளுநரை நீக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்துள்ள கோரிக்கை, அரசியல் சாசனத்திற்கு முரணானது என சுட்டிக்காட்டிய ஹெல உறுமய, மாகாண ஆளுநரை பணி நீக்குவதற்கு சில விதி முறைகள் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளது.

அரசியல் சாசனத்தை மீறியதாகவோ அல்லது தனிப்பட்ட ரீதியில் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகவோ தெரிவித்து மாகாணசபையில் தீர்மானம் நிறைவேற்றுவதன் மூலமே ஆளுநரை பணி நீக்க முடியும்.

வடமாகாண ஆளுநர் எந்த விதமான குற்றச் செயல்களிலும் ஈடுபடவில்லை எனவும் அரசியல் சாசனத்தை மீறவில்லை எனவும் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் மேல் மாகாணசபை உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

ஓய்வு பெற்ற நீதவான் விக்னேஸ்வரன் மற்றும் சட்டத்தரணி சுமந்திரன் ஆகியோரின் சட்ட அறிவாற்றல் குறித்து வெட்கப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் மக்களின் மெய்யான பிரச்சினைகளுக்கு தீர்வுகாண தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாட்டம் காட்டவில்லை.

வடக்கு மக்களைத் தூண்டி அதன் மூலம் அரசியல் நடத்தவே விரும்புவதாகவும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை அதிகரிக்கவோ அவர்களுக்கு நலன்களை வழங்கவோ கூட்டமைப்பு நாட்டம் காட்டவில்லை எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தம்மை ஈழத்திற்கு அழைத்துச் செல்வார்கள் எனத் தமிழ் மக்கள் கருதுவதாகவும் உண்மையில், கூட்டமைப்பு தமிழ் மக்களை அழிவுப்பாதையில் இட்டுச் செல்வதாகவும் பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டது போன்றே பயங்கரவாத அரசியல் சக்திகளும் தடைசெய்யப்பட வேண்டியது அவசியமானது என்றும் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். (2-7)



இலங்கை வங்கியின் திருநெல்வேலிக் கிளையில் 18 + கணக்கினை பேணி வரும் வாடிக்கையாளர் ஒருவருக்கு அண்மையில் தங்க நாணயம் பரிசாக வழங்கப்பட்டது. வங்கி முகாமையாளர் ரி.சந்திரகுமார் நாணயத்தை வழங்குவதையும் அருகே வடமாகாண செயற்பாட்டு முகாமையாளர் எஸ்.என். மாணிக்க சிங்கி நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:-புன்னாலைக் கட்டுவன் செய்தியாளர்)

# இலங்கை அரசு தமிழர்களின் காணி அதிகாரங்களை பறித்துள்ளது

## தொல்.திருமாவளவன் கண்டனம்

(சென்னை)

இலங்கையில் தமிழர்களின் காணி தொடர்பான அதிகாரம் பறிக்கப்பட்டுள்ளதாக விடுதலைச் சிறத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்றுமுன்தினம் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

தமிழர்களுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட மாட்டாது என்று அமைச்சர் கோத்தபாய ராஜபக்ஷ கூறி வந்தார்.

இந் நிலையில்தான் காணி அதிகாரம் பறிக்கப்பட்டுள்ளது.



ராஜீவ்காந்தி-ஜெயவர்த்தன ஒப்பந்தத்தின் அடிப்படையில் செய்யப்பட்ட 13 ஆவது சட்டதிருத்தம் தான் மாகாண சபைகளுக்கு காணி தொடர்பான அதிகாரத்தை முதலில் வழங்கியது.

வடக்கு மாகாணத்தில் தேர்தல் நடத்தப்பட்டு அரசாங்கம் அமையாத காரணத்தால் இலங்கை அரசு இது பற்றி கவலைப்படாது இருந்து வந்தது.

தற்போது தமிழர்களுக்கான அரசாங்கம் உருவாகியிருப்பதால் இலங்கை அரசு காணி அதிகாரத்தை பறித்துள்ளது.

பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாடு இலங்கையில் நடைபெறவுள்ள நிலையில் இப்படி இலங்கை அரசு நடந்து கொள்வது சர்வதேச நாடுகளின் கருத்தை அது அலட்சியம் செய்கிறது என் பதையே காட்டுகிறது என அவ்அறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளார். (2-7)

# பொதுநலவாய மாநாட்டை புறக்கணிக்க தொடர் போராட்டங்கள் முன்னெடுப்பு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெறும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டை அதன் அங்கத்துவ நாடுகள் புறக்கணிக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் பிரான்ஸ், பாரிஸ் நகரில் கவனயீர்ப்பு போராட்டம் நடைபெற்றுள்ளது.

தென் ஆபிரிக்கா, பிரித்தானியா, நியூசிலாந்து, அவுஸ்திரேலிய, இந்தியா, மலேசியா ஆகிய நாடுகளில் நடைபெறும் இந்த தொடர் போராட்டம், நாளை புதன்கிழமை ஆபிரிக்க நாடுகளில் நடைபெறவுள்ளது.

அத்துடன், ஆபிரிக்காவில், ஆபிரிக்க யூனியனிலும் பொதுநலவாய நாடுகள் அமைப்பிலும் அங்கத்துவ நாடாகிய நைஜீரியா நாட்டின் தூதரகம் முன் இந்த வார தொடர் கவனயீர்ப்பு போராட்டம் நடைபெறவுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை இலங்கை அரசுக்கு எதிராக அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கும் நிலையிலும், அதேநேரத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் 68 ஆவது அமர்வின் போது ஐ.நா.பொதுச் செயலாளர் பான் கீ மூன், இலங்கையில் நடைபெற்ற படுகொலைகளைத் தடுக்க ஐக்கிய நாடுகள் சபை தவறிவிட்டது என்று அறிக்கை வெளியிட்டிருக்கும் நிலையிலும், கனடாவின் வெளிவிவகார அமைச்சர் இலங்கையில் பொதுநலவாய மாநாடு நடப்பது, மனித நேயத்திற்கே நாம் செய்யும் மிகப் பெரிய தவறு என்று கூறி இருக்கும் நிலையில், தொடர்ச்சியாக கவனயீர்ப்பு போராட்டங்களை நடத்துவது, சர்வதேசத்தின் பார்வையை எமது பக்கம் தொடர்ந்து வைத்திருப்பது முக்கியம் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (2-7)

# வடக்கு மக்களின் அபிலாஷைகளுக்கு அரசாங்கம் மதிப்பளிக்க வேண்டும்

## சுரேஷ் எம்.பி.தெரிவிப்பு

வடக்கு மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு அரசாங்கம் மதிப்பளிக்க வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண சபைக்கு நிதி ஒதுக்கீடுகளையும் ஏனைய உட்கட்டுமான வசதிகளையும் அரசாங்கம் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

வட மாகாண சபைக்கான கட்டடங்கள், தளபாட வசதிகள் உள்ளிட்ட அனைத்துமே வழங்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

வடமாகாண சபை இயங்கக் கூடிய அளவிற்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதன் மூலமே உறுப்பினர்கள் தங்களது கடமைகளை செய்யமுடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் வடமாகாண சபையை இயக்குவதற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும் என குறிப்பிட்டுள்ளார்.

வடமாகாண மக்கள் அரை நூற்றாண்டு காலம் நிர்வாக அதிகாரங்களைப் பெற்றுக் கொள்ள காத்திருந்தார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2-7)

# இலங்கை அகதிகள் சென்னையில் கைது

(கொழும்பு)

இலங்கை அகதிகள் 6 பேர் சென்னையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியாவுக்கு தப்பிச் செல்ல முயன்ற இலங்கை அகதிகள் அறுவர் சென்னையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சென்னை அண்ணாசதுக்கத் தில் நேற்றுமுன்தினமிரவு நின்ற இவர்கள் மீது சந்தேகம் கொண்ட பொலிஸார் விசாரணை நடத்தியபோது, குறித்த நபர்கள் முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களைத் தெரிவித்ததால் அவர்களை கைது செய்துள்ளதாக தமிழக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர்களிடம் நடத்திய விசாரணையின் மூலம் அவர்கள் அவுஸ் திரேலியாவுக்கு தப்பிச்செல்ல முயன்றமை தெரியவந்துள்ளது. தொடர்ந்து அவர்களிடம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (2-7)

# தேர்தலில் வாக்குகள் நிராகரிக்கப்பட்டமை குறித்து விசாரணை நடத்தப்படும்

(கொழும்பு)

தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பிலான காரணங்களைக் கண்டறியும் விசாரணைகளை நடத்த தேர்தல் கண்காணிப்பு அமைப்பு தீர்மானித்துள்ளது.

தேர்தலில் அளிக்கப்படும் வாக்குகள் அதிகளவில் நிராகரிக்கப்படுகின்றன என குறித்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தலில் அதிகளவான வாக்குகள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பாக தகவல்கள் கிடைத்துள்ளதாக அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். வாக்காளர்கள் தாம் வேண்டுமென்றே வாக்குகளை நிராகரிக்கும் படியாக அளித்திருந்தால், அதற்கான கார்ணங்களை கண்டறிய வேண்டியது அவசியம் எனவும் அவர் கூறினார்.

அதேவேளை தேர்தலில் வாக்களிக்காது தவிர்க்கும் நபர்களுக்கு வெளிநாடுகளில் அபாரதம் விதிப்பது போன்று இலங்கையிலும் அதனை அமுல்படுத்த வேண்டும் என்ற யோசனையையும் தேர்தல் அதிகாரிகளிடம் முன் வைக்கவுள்ளதாகவும் ஹெட்டியாராச்சி குறிப்பிட்டார். (2-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரடைப்புக்கு தீர்வு அறுவைச் சிகிச்சைதானா?

(கடந்தவாரத் தொடர்ச்சி..)

மாரடைப்பு-அதற்குரிய சிகிச்சை, தடுப்பு நடவடிக்கைகள் குறித்து பார்த்தோம். இனி இதயம் செயல் இழத்தல் குறித்து பார்ப்போம்.மேற்குறித்த இரண்டும் ஒன்றுதானே என்று நம்மில் பலர் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், இரண்டும் ஒன்றல்ல என்பதே உண்மையாகும்.

இதயம் செயல் இழத்தல் என்பது இதயம் இரத்தத்தை பம்ப் செய்ய முடியாத நிலையையே இதயம் செயலிழத்தல் என்கிறோம். இதயத்தின் செயற்றிறன் குறைவதால் உடலின் எல்லாப் பாகங்களுக்கும் தேவையான இரத்தத்தை அனுப்ப முடியாமல் திணறுகிறது. பொதுவாக முதுமையில்தான் இதய செயலிழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. அது தவிர ருமாட்டிக் காய்ச்சலால் இதயவால்வு பாதிக்கப்படுவது. உயர் இரத்த அழுத்தம் , இதய முடியுருநாடி இரத்தக்குழாய்களில் அடைப்பு ஏற்படுவது உட்பட வேறுசில காரணங்களாலும் இதயத்தின் பம்ப்பும் திறன் குறைந்து விடுகிறது.


இதயத்துக்கு இரத்தம் கொண்டு செல்லும் முடியுருநாடி இரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்பட்டால் மாரடைப்பு வரும் என்றுதானே பார்த்தோம். அடைப்பு இருந்தால் சிலருக்கு இதயம் செயலிழக்கும் இரத்தம் இதய தசைகளுக்கு வராமல் போவதால் தசை நார்கள் செயலிழந்து இதயம் செயலிழக்கின்றது. கார்டியோ மையோபதி என்று கூறப்படும் இதயத் தசைகளில் ஏற்படும் தொய்வு நோய் காரணமாகவும் இதயம் செயலிழப்பு ஏற்படும். நீரிழிவு நோயாளிகளில் சிலருக்கு இதயத்தின் மிகச்சிறு இரத்தக் குழாய்கள் பாதிக்கப்பட்டு இதய அறைகள் விரிவடைந்து கார்டியோ மையோபதி ஏற்படுகின்றது.

அறிகுறிகள்: இதய செயலிழப்பு ஏற்பட்டால் உடல் மிகவும் சோர்வாக இருக்கும். அதிகமாக மூச்சு வாங்கும். மாடிப் படிகளில் ஏறும் போது அதிகமாக மூச்சு வாங்கினால் உஷாராகிவிட வேண்டியதுதான். நுரையீரலில் இரத்தம் தேங்கும் போது தான் மூச்சுத் திணறல் வருகிறது. நுரையீரலில் இரத்தம் தேங்கும் போது அங்கே இரத்த அழுத்தம் அதிகமாகிறது. இரத்த அழுத்தத்தின் காரணமாக சிறு இரத்தக் குழாய்கள் வெடிக்கின்றது. இதனால் இருமும்போது சளியுடன் இரத்தமும் வெளி யேறுகின்றது.

மேலும் நுரையீரலில் இரத்த அழுத்தம் அதிகமாகும் போது அங்கு ஒட்சிசன், காபனீரொட்சைட் மாற்றம் தடைப் படுகின்றது. இதனால் மூச்சுத் திணறல் ஏற்படுகின்றது. இதே வேளை தாயின் கர்ப்பத்தில் இருக்கும் போதே சில குழந்தைகளுக்கு இதய வால்வில் ஓட்டை அல்லது கசிவு ஏற்பட வாய்ப்பு உண்டு. இதய வால்வுக்கோளாறு இருந்தால் மூச்சு இரைப்பு அதிகமாக இருக்கும். கை, கால்களில் வீக்கங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு. சோர்வு அதிகமாக இருக்கும். இதய வால்வில் ஓட்டை இருந்தால் அல்லது கசிவு இருந்தால் இதய ஒலிபெரு க்கி மூலம் அறிந்து கொள்ள முடியும். (முற்றும்)




# ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றெடுக்க கருத்தரிக்கும் முன்பே கவனமெடுக்க வேண்டும்



பிறக்கும் குழந்தை புத்திசாலியாக, ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்பது அனைத்து பெற்றோர்களின் கனவு! கர்ப்பத்தில் இருக்கும் குழந்தையின் ஆரோக்கியத்துக்காக தாய் உணவு எடுத்துக்கொள்வது சரி. ஆனால், அது எந்த அளவுக்குக் குழந்தையின் புத்திசாலித்தனத்தைத் தீர்மானிக்கும்? கரு உருவான 20 ஆவது நாளில் வளர ஆரம்பிக்கும் மூளை, 28 ஆவது நாளுக்குள்ளேயே அந்தக் குழந்தை அதன் வாழ்நாள் முழுவதும் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான அடித்தள வேலைகள் மொத்தத்தையும் முடித்துவிடுகிறது.

இதனால், கர்ப்பம் தரிப்பதற்கு முன்பே பெண் ஆரோக்கியமான உணவு எடுத்துக்கொள்வது அவசியம் என தற்போது கண்டுபிடித்திருக்கிறார்கள். இதற்கென நாம் நேரம் ஒதுக்குவோமாயின் குழந்தை எப்படிப் பிறக்க வேண்டும் என்பதை நாமே தீர்மானிக்கலாம்"

குழந்தை புத்திசாலியாகவும் சுறுசுறுப்பாகவும் இருப்பது, முதல் ஒருமாத காலத்தில் கிடைக்கிற ஆரோக்கியத்தைப் பொறுத்துதான் அமைகிறது. கர்ப்ப காலத்தில் ஏற்படுகிற நீரிழிவு நோய், தைரொய்டு சுரப்பியில் உண்டாகும் ஏற்ற இறக்கம், சரியான ஊட்டச்சத்து இல்லாமை...இவை அனைத்தும் குழந்தையின் மூளை வளர்ச்சியைத் தடை செய்யக்கூடியவை.


மேலும் 'ருபெல்லா' என்பது மூளை வளர்ச்சியைப் பாதிக்கக் கூடிய ஒரு வகை வைரஸ். பெண் குழந்தை பிறந்த 15ஆவது மாதத்திலேயே, அதற்கு 'ருபெல்லா தடுப்பூசி வழங்கப்படவேண்டும்.

அதேபோன்று அவளுடைய 15ஆவது வயதில் மீண்டும் அதே தடுப்பு ஊசி போட வேண்டும். இது அந்தக் குழந்தையின் உடலில் ருபெல்லாவை எதிர்ப்பதற்கான சக்தியைக் கொடுக்கும். பின்னாளில் அவள் பெரியவளாகி கர்ப்பம் தரிக்கும்போது, அந்தக் கருவின் மூளை வளர்ச்சி நல்லபடியாக இருப்பதற்குத்தான் இத்தனை முன்னேற்பாடு!

இவ்வாறு பெண் குழந்தைகளுக்காக ஒரு சிறப்பு தடுப்பூசி இருப்பதே நம்மில் பலருக்குத் தெரியாது. ருபெல்லா வைரசினால் பாதிக்கப்படும் குழந்தையின் தலை சின்னதாக இருக்க வாய்ப்புகள் அதிகம். கண் பார்வை குறையலாம்.

மூளை நரம்புகளுக்கு இடையேயான தகவல் தொடர்புச் செயற்பாடு குறைவாக இருக்கும். இருபது நாள் கருவில் வளர ஆரம்பிக்கும் மூளை, ஏழு வயது ஆகும்போது கிட்டத்தட்ட 95 சதவிகிதம் வளர்ச்சி அடைந்து விடுகிறது. குழந்தை பிறந்ததும் தாய்ப்பால் கொடுக்கும்படி கட்டாயப் படுத்துவதற்குக் காரணம், அதில் இருக்கும் புரதம் உள்ளிட்ட சத்துக்கள், மூளை வேகமாக இயங்கத் தூண்டுதலாக இருக்கும் என்பதனாலேயேயாகும்.

இசையைக் கேட்டுக்கொண்டே இருக்கும் தாய்க்கு பிறக்கும் குழந்தையின் மூளை வளர்ச்சி வேகமாக இருப்பதோடு, மூளையின் கிரகிக்கும் திறனும் அதிகமாக இருக்கும் என்று ஹங்கேரியில் நடந்த ஒரு ஆராய்ச்சியில்



கண்டுபிடித்துள்ளனர்.

மேலும் பிறக்கப்போகும் குழந்தை ஆணா, பெண்ணா என்பதை நாம் தீர்மானிக்க முடியாது. ஆனால், அந்தக் குழந்தை புத்திசாலியாகப் பிறப்பதற்கான சூழலை நம்மால் நிச்சயம் உருவாக்க முடியும்!

# பொ.ந.வா. மாநாடு குறித்து பிரித்தானியா தீவிர கரிசனை

(கொழும்பு)


இலங்கையில் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் அமர்வை நடத்துவதில் தீவிர கரிசனை நிலை ஏற்பட்டுள்ளதாக பிரித்தானியா தெரிவித்துள்ளது.


இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் அமர்வில் அவுஸ்ரேலியாவுக்கு அடுத்ததாக தாமும் பங்கேற்றவுள்ளமையை பிரித்தானியா பல இடங்களில் குறிப்பிட்டு வந்துள்ளது.

எனினும் தற்போது பிரித்தானியாவின் பொதுநலவாய அமைச்சர் ஹுகோஸ்வரே மாற்றுக் கருத்தை வெளியிட்டுள்ளார்.


பொதுநலவாய நாடுகளின் கொள்கைகளையும் அர்ப்பணிப்புகளையும் பாதிக்கும் வகையில் இலங்கையில் மாநாட்டை நடத்தும் தீர்மானம் அமைந்து விடக்கூடாது என்று ஸ்வரே குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கா நியூயோர்க்கில் கடந்த வாரம் இடம்பெற்ற பொதுநலவாய நாடுகளின் அமைச்சர் மட்டக் கூட்டத்தில் இந்த கருத்தை பிரித்தானிய அமைச்சர் வெளியிட்டார். (2-7)











யா/உரும்பிராய் இந்துக்கல்லூரியிலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்களுக்கான சேவை நலன் பாராட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற ஆசிரியர் ம.இ. நரேந்திரா, பாராட்டு பெறும் ஆசிரியர்கள், அதிபர், முன்னாள் அதிபர், உப அதிபர், பழைய மாணவர் சங்க செயலாளர், பாடசாலை அபிவிருத்திசங்க செயலாளர் ஆகி யோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் ஓய்வுபெற்ற ஆசிரியர் ம.இ. நரேந்திரா வுக்கும் அவரது பாரியாருக்கும் முன்னாள் அதிபர், முன்னாள் உப அதிபர் பொன்னாடை போர்த்தி மலர்மாலை அணிவிப்பதையும் ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு கல்லூரி முதல்வர் பரிசில் வழங்கி கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தை திணற வைத்த திடீர் திருப்பங்கள்!

கடந்த சில நாட்களில் இலங்கை சந்தித்துள்ள முக்கியமான பல திருப்பங்கள், நிகழ்வுகள் அடுத்தடுத்த கட்டங்களில் என்ன நடக்கப்போகிறது என்ற எதிர்பார்ப்பை கிளறிவிட்டுள்ளன.

முதலாவது–வடமாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டதும், அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்ற வெற்றியும்.

இரண்டாவது– போரின் இறுதிக் கட்டத்தில் இலங்கையில் ஐ.நா. தோல்வியடைந்துவிட்டது என்று ஐ.நா பொதுச் செயலாளர் பான்கீ மூன் பொதுச்சபைக் கூட்டத்தில் பகிரங்கமாக ஒப்புக்கொண்டது.

மூன்றாவது– அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் போர்க்குற்றச்சாட்டுக்களுக்குப் பொறுப்புக்கூற இலங்கை அரசாங்கம் தவறினால், சர்வதேச விசாரணைக்குச் செல்ல வேண்டியிருக்கும் என்ற ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை விடுத்துள்ள எச்சரிக்கை.

நான்காவது– மாகாணசபைகளுக்கு காணிகளின் மீது உரிமை செலுத்தும் அதிகாரம் இல்லை என்று உயர்நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு.

இந்த நான்கு முக்கிய விடயங்களையும் சுற்றி பல்வேறு உப நிகழ்வுகள் நடந்துள்ளன. பல்வேறு தரப்பினரதும் கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

போர் முடிவுக்கு வந்த பின்னர் இலங்கை அரசாங்கம் எதிர்கொண்டுள்ள முக்கியமான நெருக்கடி மிக்க காலப்பகுதி இதுவாகும்.

ஜெனீவாவில் இரண்டு முறை தீர்மானங்கள் கொண்டுவரப்பட்ட போதுகூட இலங்கை அரசாங்கத்துக்கு இராஜதந்திர முனையில் மட்டும்தான் அழுத்தங்கள் இருந்தன. ஆனால், இப்போது ஏற்பட்டுள்ள பன்முனை அழுத்தங்கள் இலங்கை அரசாங்கத்தை சிக்கலானதொரு கட்டத்துக்கு இழுப்பதற்கான அறிகுறிகளை வெளிப்படுத்தியுள்ளன.

போரின் இறுதிக் கட்டத்தில் ஐ.நா. தோல்வியைத் தழுவிவிட்டது என்று பான்கீ மூன் ஒப்புக்கொண்டது, பொதுமக்களைப் பாதுகாப்பதற்கான கடப்பாடுகளிலிருந்து தவறிவிட்டது என்பதையே குறிக்கிறது.

பொதுமக்களுக்கு எந்த இழப்புக்களுமின்றியே போர் செய்ததாக இலங்கை அரசாங்கம் இன்னமும் வாதிட்டுவரும் நிலையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவும் முன்பாகவே பான் கீ மூன் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இறுதிக்கட்டப் போரில் 40 ஆயிரம் பொதுமக்கள் வரை கொல்லப்பட்டிருக்கலாம் என்று கூறிய ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ள போதிலும் அதன் அடிப்படையில் நடத்தப்பட்ட உள்ளக விசாரணைகளின் முடிவில்தான் ஐ.நா. தோல்வியடைந்துவிட்டது என்ற உண்மை வெளிச்சத்துக்கு வந்தது.



போரின் இறுதியில் பொதுமக்கள் கொல்லப்படவில்லை என்ற இலங்கை அரசின் கருத்தை உள்ளக விசாரணை அறிக்கை ஏற்றுக் கொண்டிருந்தால் ஐ.நா. தோல்வியடைந்துவிட்டதாக கூறியிருக்க வேண்டியதில்லை.

போரில் பொதுமக்கள் கொல்லப்படவில்லை என்றால் விடுதலைப் புலிகளைக் காப்பாற்றுவதில் ஐ.நா. தோல்வியடைந்துவிட்டது என்றே அர்த்தமாகிவிடும்.

விடுதலைப் புலிகள் குறித்து ஐ.நா. விசாரணைகளில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. பொதுமக்களைப் பாதுகாக்கும் கடப்பாடுகள் குறித்தே விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அதன்படியேதான் ஐ.நா. தோல்வியடைந்துவிட்டது என்று பான்கீ மூன் ஒப்புக்கொண்டிருந்தார். அதுவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச முன்பாகவேதான் அவர் இதனைக் கூறியிருந்தார்.

பான்கீ மூன் உரையாற்றிய சில மணி நேரங்கள் கழித்து பொதுச்சபையில் உரையாற்றிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இதுபற்றி எதுவுமே கூறவில்லை. அவர் மறைமுகமாக அமெரிக்காவைச் சாடுவதிலேயே கவனம் செலுத்தியிருந்தார்.

எது எவ்வாறாயினும் பான்கீ மூனின் உரை போரின்போது தமிழ் மக்களுக்கு அநீதிகள் இழைக்கப்பட்டுள்ளன என்பதையும் அதில் ஐ.நாவுக்கு பங்குள்ளது என்பதையும் வெளிச்சம்போட்டுக் காட்டியுள்ளது.

இதன்மூலம் ஒரு சிறிய மக்கள் கூட்டத்தின் மீது, உலகமே தொடுத்த போராக– செய்த தவறாக இது வரலாற்றில் இடம்பெறுவது உறுதியாகியுள்ளது.

ஐ.நா.பொதுச் செயலரின் உரை நிகழ்த்தப்பட்ட மறுநாள் ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 24–வது அமர்வில் தனது இலங்கைப் பயணம் தொடர்பான வாய்மூல அறிக்கையை சமர்ப்பித்திருந்தார் ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை. அந்த அறிக்கையில் தனது இலங்கைப் பயணத்தில் கண்ட அறிவுகளைக்கொண்டு இலங்கை மீது பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார்.

அவற்றில் உச்சக்கட்டமான குற்றச்சாட்டு, போரின்போது இடம்பெற்ற மீறல்களுக்கு எதிரான நம்பகமான, சுதந்திரமான விசாரணைகள் ஏதும் முன்னெடுக்கப்படவில்லை என்பது தான். இதன் தொடர்ச்சியாக இலங்கை அரசுக்கு அடுத்த ஆண்டு மார்ச் மாதம் வரை அவர் காலக்கெடு கொடுத்துள்ளார்.

குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக நம்பகமான, சுதந்திரமான விசாரணைகளை இலங்கை அரசாங்கம் நடத்தத் தவறினால் சர்வதேச சமூகத்துக்குச் சொந்தமான விசாரணைப் பொறிமுறையை உருவாக்கும் பொறுப்புள்ளது என்று அவர் எச்சரித்துள்ளார். நவநீதம்பிள்ளை இவ்வாறு எச்சரிப்பது இதுதான் முதல் தடவையல்ல. ஆனால், இது தனிப்பட்ட ரீதியாக அவர் கொடுத்துள்ள எச்சரிக்கையோ, அல்லது வெளியிட்ட கருத்தோ அல்ல. இம்முறை அவரது எச்சரிக்கை காலக்கெடு ஒன்றை முன்வைத்து கொடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை தொடர்பான அறிக்கைகளை அளிக்குமாறு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையினால் பொறுப்புகள் அளிக்கப்பட்டவர் என்ற வகையில் அவர் கொடுத்துள்ள எச்சரிக்கை இது. இந்தக் காலக்கெடு விதிக்கும் அதிகாரம் நவநீதம்பிள்ளைக்கு இல்லை என்று அரசாங்கம் கூறியுள்ள போதிலும், இந்த எச்சரிக்கை உதாசீனப்படுத்தக்கூடிய ஒன்று அல்ல. எது எவ்வாறாயினும் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்குள் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு இலங்கைக்கு உள்ளது. அதை நிறைவேற்றத் தவறினால் இலங்கைக்கு எதிராக அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து சிந்திக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று ஏற்கனவே அமெரிக்கா எச்சரித்துள்ளது. இப்போதும்கூட பொறுப்புக் கூற தவறினால் சர்வதேச விசாரணையை எதிர்நோக்க நேரிடும் என்று நவநீதம்பிள்ளையின் கருத்தை அமெரிக்காவும் ஏற்றுக்கொண்டுள்ளது.

எனவே, இந்த விவகாரத்தில் அடுத்த ஆறு மாதங்களில் இலங்கை அரசாங்கம் தெளிவானதொரு நகர்வை மேற்கொண்டேயாக வேண்டிய நிலையில் உள்ளது. இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணையை மேற்கொள்வதற்கான பொறிமுறையை உருவாக்குவதில் சீனா, ரஷ்யா போன்ற நாடுகளால் அமெரிக்காவுக்கும் ஐ.நா.வுக்கும் சிக்கல்கள் இருந்தாலும் இந்த விவகாரத்தை இடைநடுவில் கைவிட்டுவிட முடியாது.

இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான ஏதோவொரு வழியில் சர்வதேச விசாரணைப் பொறிமுறையை உருவாக்கவோ, அழுத்தம் கொடுக்கவோ அமெரிக்கா தயங்காது. இந்த நிலைமை இலங்கைக்கு மிகவும் நெருக்கடி கொடுக்கக் கூடியது.

இதற்கிடையில் வடக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்தி முடித்துவிட்டதாக இலங்கை அரசாங்கம் வெளியுலகில் பிரசாரம் செய்து ஆதாயம் பெற முனைந்தாலும் அங்கும் அரசாங்கத்துக்கு நெருக்கடிகள் தொடரப் போகின்றன. ஏனென்றால் வடக்கு மாகாணசபையுடன் ஒத்துழைத்துச் செயற்படுமாறும் அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுக்குமாறும் அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட நாடுகள் வலியுறுத்துகின்றன. ஆனால், அரசாங்கத்தினால் அவ்வாறு ஒத்திசைந்து செயற்படுவது இலகுவானதல்ல. அவ்வாறு ஒத்திசைந்து செயற்படவும் அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுக்கவும் அரசாங்கத்தைச் சுற்றியுள்ள அடிப்படைவாதக் கூட்டாளிகள் விடப்போவதில்லை.

அதுவும் காணி அதிகாரங்கள் மாகாணசபைகளுக்கு கிடையாது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள நிலையில், இதை வைத்து மாகாணசபைகளை நசுக்க அரசாங்கமும் அடிப்படைவாத சக்திகளும் முயற்சிக்கும். இந்தத் தீர்ப்பு இந்தியாவுக்கு ஏமாற்றம் அளிக்கும் ஒன்றாகவே இருக்கும்.

ஏனென்றால், மாகாணசபைகளுக்கு அதிகாரங்களைப் பகிர வழி செய்யும் இந்தியா– இலங்கை உடன்பாட்டுக்கு கிடைத்துள்ள இரண்டாவது தோல்வி.

ஏற்கனவே வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணைப்பை உயர் நீதிமன்றம் ரத்துசெய்துவிட்டது.

இப்போது காணி அதிகாரங்களும் இல்லை என்று அறிவிக்கப்பட்டுவிட்டது.

இந்த நிலையில் முதலாவது தீர்ப்பையடுத்து இந்தியா எவ்வாறு மௌனமாக இருந்ததோ, அது போலவே இப்போதும் மௌனமாக இருந்துவிட முடியாது.

ஏனென்றால் இது இந்தியாவின் அதிகாரப் பகிர்வுத் திட்டத்தின் அடிப்படைகளை ஆட்டம்காண வைத்துள்ள தீர்ப்பு.

13– வது திருத்தசட்டமே தமிழர் பிரச்சினைக்கான உயர்ந்தபட்ச தீர்வாகக் கொண்டாடும் இந்தியாவுக்கு இந்தத் தீர்ப்பு நிச்சயம் அதிர்ச்சியைக் கொடுத்திருக்கும்.

அதுவும் வடக்கு மாகாணசபைத் தேர்தல் முடிந்த கையோடு இது வெளியாகி இருப்பது பெரும் சங்கடங்களை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. ஏனென்றால் தமிழர்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கான புதிய முயற்சிகளை முன்னெடுக்க வேண்டிய தலைவலி இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ளது.

முக்கிய அதிகாரங்களைக் கொண்ட அதிகாரப் பகிர்வுக்கு இலங்கையை அழுத்திப் பிடிக்க வேண்டிய நிலை இந்தியாவுக்கு உருவாகியுள்ளது.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு இலங்கை அரசுக்கு அதிகாரப் பகிர்வை எதிர்க்கும் அடிப்படைவாத சக்திகளுக்கும் சாதகமானதாக இருந்தாலும் இன்னொரு வகையில் இதனை தமிழருக்குச் சாதகமான நிலையையும் உருவாக்கலாம்.

தமிழர் பிரச்சினைக்கான தீர்வு 13–வது திருத்தச்சட்டத்துக்கும் அப்பாற்பட்டதொன்றாக இருக்க வேண்டும் என்ற கோரிக்கையை இது வலுப்படுத்தப்போகிறது. அத்துடன் அதிகாரப் பகிர்வை சட்ட வலுவானதாக்கும் அழுத்தங்களும் அதிகரிக்கலாம்.

கடந்த சில நாட்களுக்குள் நடந்த நிகழ்வுகள் இலங்கைக்கு புதிய தலைவலியைக்கொண்டு வருவதற்கான அறிகுறிகளே வெளிப்பட்டுள்ளன. இலங்கை அரசாங்கம் இந்தச் சிக்கல்களைச் சமாளிப்பது ஒன்றும் இலகுவான விடயமாக இருக்காது. ஏனென்றால் இவையனைத்தும் உள்நாட்டு எல்லைகளுக்குள் முடக்கிவிடக்கூடிய பிரச்சினைகள் அல்ல. வெளிநாடுகளின் கதவுகளைத் தட்டத் தொடங்கியுள்ள பிரச்சினைகள்.

-சுபத்ரா-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வெற்றி பெறும் என்பது நமக்கு தெரியும்

## ஜனாதிபதி மஹிந்த தெரிவிப்பு



சில இராஜதந்திரிகள் தன்னிடம் வடமாகாண சபைத் தேர்தல் பற்றி கேட்ட போது தான் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 7 முதல் 10 ஆசனங்களை வடமாகாண சபைத் தேர்தலில் பெறுமென்று கூறிய போதிலும் எனது இந்த எதிர்பார்ப்பு தவறாக அமைந்தது.

இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அல்ஜெசீரா தொலைக்காட்சி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியிலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றிபெறும் என்பது எமக்கு நன்கு தெரியும். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வட மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றிபெற்று ஆட்சிப் பொறுப்பை ஏற்க வேண்டுமென்று அறிவித்திருந்தது.

எனவே, வடமாகாணத்தின் பொறுப்பை ஏற்றுக் கொண்டு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சீரான நிர்வாகத்தை நடத்தவேண்டுமென்று நான் சவால் விடுக்கிறேன். எனது கட்சி வட மாகாண சபைத் தேர்தலில் தோல்வியடையும் என்பதை நான் முன்கூட்டியே தெரிந்திருந்ததாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவரிடமும் நாம் வடமாகாண சபைத் தேர்தலை நடத்தப் போகிறோம். அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நீங்கள் வெற்றி பெறுவீர்கள் என்றும் கூறி எமது கட்சியின் மக்கள் ஆதரவை இந்தப் பேட்டியின் போது வலியுறுத்தினேன்.

எவருக்கும் ஒரு நிர்வாகத்தில் குற்றம் குறை காண்பது இலகுவான விடயம். எனினும் நிர்வாகத்தை சீராக நடத்துவது கஷ்டமான விடயம். ஆகவேதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை வடமாகாண சபையை நிர்வாகிக்க வேண்டுமென கூறினோம்.

சில இராஜதந்திரிகள் என்னிடம் வட மாகாண சபைத் தேர்தல் பற்றி கேட்ட போது நான் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 7 முதல் 10 ஆசனங்களை வடமாகாண சபைத் தேர்தலில் வெற்றியீட்டுமென்று கூறிய போதிலும் எனது இந்த எதிர்பார்ப்பு தவறாக அமைந்தது. நாம் அங்கு 7 ஆசனங்களையே வெற்றி பெற்றோம் என்றும் ஜனாதிபதி இந்த தொலைக் காட்சி பேட்டியில் தெரிவித்தார்.

நாடெங்கிலும் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்த இராணுவம் நிலைகொண்டிருக்கும் இவ்வேளையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வடமாகாணத்திலிருந்து இராணுவத்தை வெளியேற்றுமாறு கோரிக்கை விடுக்கலாகாதென ஜனாதிபதி இதன்போது தெரிவித்துள்ளார்.

நாடெங்கிலும் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கும் நோக்குடனேயே அரசாங்கம் இராணுவ முகாம்களை வைத்திருக்கிறது. விக்னேஸ்வரனின் வேண்டுகோளுக்கு அமைய வடக்கில் இருந்து இராணுவத்தை எனது அரசாங்கம் வெளியேற்றாது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (2)

## வீடியோ காட்சி வைத்திருந்த இளைஞன் கைது

தமிழீழ விடுதலைப் புலிகளின் வீடியோ காட்சிகளை வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பேத்தாழை விஷ்ணு கோவில் வீதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு பாசிக்குடா யானைக்கல் கடற்கரைப் பிரதேசத்தில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் நேற்று முன்தினம் மாலை மேற்படி இளைஞனைக் கைது செய்துள்ளனர்.

பொலிஸாரைக் கண்டு ஓடிய இளைஞனை பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளது டன் கையடக்கத் தொலைபேசியையும் சோதனை செய்துள்ளனர்.

இதன்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் வீடியோக் காட்சிகளை குறித்து இளைஞன் தனது கையடக்கத் தொலைபேசியில் வைத்திருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார். மேற்படி இளைஞனிடம் கல்குடா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-7)

## தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்

(சென்னை)

தமிழக மீனவர்கள்ள விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என இந்திய மத்திய அமைச்சர் நாராயணசுவாமி தெரிவித்துள்ளார். இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களையும் அவர்களது படகுகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

காரைக்கால் மற்றும் நாகப்பட்டிணம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மீனவர்கள் அமைச்சரை சந்தித்த போது இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது. இந்த விடயம் குறித்து பேச்சுவார்த்தை நடத்த டில்லிக்கு விஜயம் செய்யுமாறு அமைச்சர் தமிழக மீனவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பாக இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார், ஒவ்வொரு படகும் 50 இலட்ச ரூபா பெறுமதியானது எனவும் படகுகள் இன்றி மீன்பிடித் தொழிலில் ஈடுபட முடியாது எனவும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (2-7)

## பிறக்கும் குழந்தைகளையும் அரசு கடனாளியாக்கியுள்ளது

### ஐ.தே.க. குற்றச்சாட்டு

(கொழும்பு)

பிறக்கும் குழந்தைகளை நாட்டை ஆளும் அரசு கடனாளியாக்கியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

20 ஆண்டுகளுக்கு முன்பாக மக்கள் முன்னணி ஆட்சி பொறுப்பை ஏற்றுக் கொண்ட போது, நாட்டின் மொத்த கடன் 750 பில்லியன் ரூபாவாக இருந்தது. தற்போது இந்தத் தொகை 7ஆயிரத்து 500 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளதாகவும் கட்சியின் தேசிய அமைப்பாளர் தயா கமகே தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பினால் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பிறக்காத குழந்தைகள் கூட 4இலட்சத்து 31 ஆயிரம் ரூபா கடனாளிகளாகியுள்ளனர் எனக் குறிப்பிட்ட அவர் இந்த அரசாங்கத்திடம் எந்தவிதமான பொருளாதாரக் கொள்கைகளும் கிடையாது எனவும் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தக் கூடிய ஆற்றல் இந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு கிடையாது என தயா கமகே தெரிவித்துள்ளார். (2-7)

## படையினருக்கு நன்றி கூறுங்கள்

படையினருக்கு நன்றி பாராட்ட வேண்டிய அனைவரினதும் கடமையாகும் என அஸ்கிரிய பீடாதிபதி உடுகம ஸ்ரீ புத்தரக்கித தேரர் தெரிவித்துள்ளார்.

இராணுவ படை ஆரம்பிக்கப்பட்டு 64 ஆண்டுகள் பூர்த்தியாவதனை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் படையினர் அரிய சேவைகளை ஆற்றியுள்ளனர்.

1949 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இலங்கை இராணுவம் அன்றிலிருந்து இன்று வரை நாட்டின் அபிவிருத்திக்காக பாடுபட்டுள்ளது.

பயங்கரவாதத்தை இல்லாதொழித்த படையினருக்கு நாம் அனைவரும் நன்றிக் கடன் செலுத்த வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். (2-7)

## கூட்டமைப்பின் தீர்மானத்திற்கு வாசுதேவ வரவேற்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீர்மானத்திற்கு தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார வரவேற்பை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச முன்னிலையில் வட மாகாணசபை முதலமைச்சர் உள்ளிட்டோர் பதவிப் பிரமாணம் செய்து கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி முன்னிலையில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் செய்து கொள்வது வரவேற்கப்பட வேண்டியதும் பாராட்டப்பட வேண்டியதொன்றுமாகும்.

வடக்கு அபிவிருத்திக்கு மத்திய அரசாங்கத்தின் ஆதரவைப் பெற்றுக்கொள்ள இது சிறந்த சந்தர்ப்பமாக அமையக் கூடும்.

எட்டு மாகாணசபைகளின் முதலமைச்சர்களும் ஜனாதிபதியுடன் சுமுகமாக செயற்பட்டு வருகின்றனர்.

வடமாகாண சபை முதலமைச்சர் எவ்வாறு செயற்படுகின்றார் என்பது குறித்து எதிர்காலத்தில் அறிந்து கொள்ளமுடியும் என வாசுதேவ தெரிவித்துள்ளார். (2-7)

## அரச கூட்டமைப்புடன் இணைகிறது ம.ம.மு!

(கொழும்பு)

மத்திய மாகாண சபையில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட தீர்மானித்துள்ளோம் என மலையக மக்கள் முன்னணி அறிவித்துள்ளது.

மக்களின் நன்மை கருதியும் காலத்தின் தேவை கருதியும் ஜனாதிபதி மீது வைத்துள்ள நம்பிக்கை காரணமாக தாம் ஆளும் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கியுள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் அரசியல் துறை தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

மத்திய மாகாண சபை தேர்தல் தொடர்பான முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

மத்திய மாகாண சபை தேர்தலில் நாம் தனித்து போட்டியிட்டு ஒரு ஆசனத்தைக் கைப்பற்றியுள்ளோம். இதன்மூலம் நாம் ஆளும் கட்சியுடன் இணைந்து செயற்படுவதா அல்லது எதிர்க்கட்சி ஆசனத்தில் அமர்வதா என்ற தீர்மானத்தை எடுக்க முடியும்.

அதற்கான அங்கீகாரத்தை மக்கள் எம்க்கு வழங்கியுள்ளார்கள். ஆனால் நாம் எமது மக்களின் நம்மை கருதியும் காலத்தின் தேவை கருதியும் அரசாங்கத்துடன் இணைந்து மத்திய மாகாண சபையில் செயற்படுவதென தீர்மானித்துள்ளோம்.

இதற்கெல்லாம் காரணம் நான் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதே. நாம் தேர்தலில் வாக்கு கேட்பது எமது மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்பதற்காகவே. அதை விடுத்து எதிர்க்கட்சியில் அமர்ந்து கொண்டு குறைகளைச் சுட்டிக்காட்டுதற்காகவல்ல.

ஜனாதிபதி அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுக்க எமக்கு முழுமையான சந்தர்ப்பங்களை வழங்கி வருகின்றார். இவற்றையெல்லாம் கருத்திற் கொண்டே இந்த தீர்மானத்தை எடுத்துள்ளோம் என்றார். (எ-8)

## கிளைமோர் குண்டுகள் 9 மீட்பு

ஒன்பது கிளைமோர் குண்டுகளை பொலிஸார் மீட்டுள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆயித்தியமலை பொலிஸ் பிரிவில் ஒன்பது கிளைமோர் குண்டுகள் மீட்கப்பட்டு அவை செயல் இழக்கச் செய்யப்பட்டதாக ஆயயித்திய மலை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் ஆயித்தியமலை பிரிவில் மணிபுரம் கிராமத்திலுள்ள ஒருவரின் காணியை டோஸர் கொண்டு சுத்தம் செய்யும் போது அதி சக்தி வாய்ந்த கிளைமோர்க் குண்டுகள் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஒவ்வொரு குண்டுகளும் பத்து கிலோ கிராமுக்கு அதிகமான எடையைக் கொண்டுள்ளதாகவும் அக்குண்டுகளை இராணுவத்தின் குண்டு செயல் இழக்கும் குழுவினரின் உதவியுடன் அவ்விடத்திலேயே செயலிழக்கச் செய்ததாகவும் ஆயித்தியமலை பொலிஸார் தெரிவித்தனர். (2-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் பிரிவினைவாதத்தை வெளிப்படுத்தியுள்ளது

## டாக்டர் ஜெஹான் பெரேரா தெரிவிப்பு

மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் இனப் பிரிவினை வாதத்தை வெளிப்படுத்தியுள்ளதாக தேசிய சமாதானப் பேரவையின் தலைவர் டாக்டர் ஜெஹான் பெரேரா தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தல் நடைபெற்ற மூன்று மாகாணங்களிலும் தேசியத்தை முதன்மைக் கருப்பொருளாகக் கொண்டு பிரசாரம் செய்யப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

வடக்கில் அரசாங்கத்துக்கு எதிராக 80 வீதமான வாக்குகள் அளிக்கப்பட்டுள்ள நிலையில் வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களில் அரசாங்கத்துக்கு ஆதரவாக 60 வீதத்துக்கும் மேற்பட்டவர்கள் வாக்களித்துள்ளதாக குறிப்பிட்டார்.

இனவாத அடிப்படையிலான தேர்தல் முடிவுகளை ஆபத்தான நிலைமையாகவே கருதப்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தல் முடிவுகள் தேசிய நல்லிணக்கத்தை மேலும் மோசமான நிலைக்கு இட்டுச் சென்றுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளக ரீதியாக பிளவடைந்த சமூகங்களின் ஊடாக தேசிய நல்லிணக்கத்தையோ நாட்டின் சுபீட்சத்தையோ உறுதிப்படுத்த முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தெற்கில் எதிர்க்கட்சிகளின் பலவீனம் அரசாங்கத்துக்கு பெரும் பலமாக அமைந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார். சுயாட்சி அதிகாரம், தேசிய ஐக்கியம் ஆகிய இரண்டு முக்கிய காரணிகளையும் சமனிலைப்படுத்தி பிரதான இன சமூகங்களுக்கு இடையில் பரஸ்பர நல்லிணக்கத்தை ஏற்படுத்தக் கூடிய சூழ்நிலையை உருவாக்குவதன் மூலம் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு காண முடியும் என ஜெஹான் பெரேரா தெரிவித்துள்ளார். (2-7)

# வெலிக்கடை மோதல் தொடர்பாக 17 பரிந்துரைகள் முன்வைப்பு

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலை மோதல் குறித்து 17 பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. கடந்த வருடம் நவம்பர் மாதம் வெலிக்கடைச் சிறைச்சாலையில் கைதிகளுக்கும் பாதுகாப்புப் பிரிவினருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது.

இந்த மோதலின் போது 27 கைதிகள் உயிரிழந்த அதேவேளை பாதுகாப்பு படையினர் உட்பட 40 பேர் காயமடைந்தனர்.

இதனால் வெலிக்கடைச் சிறைச்சாலை மோதல் சர்வதேசத்தின் கவனத்தையும் ஈர்த்தது.

இவ்விடயம் தொடர்பில் ஆராய்வதற்கு விசேட குழு ஒன்று அமைக்கப்பட்டு அக்குழு பல சந்தர்ப்பங்களில் அறிக்கைகளையும் வெளியிட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை இந்த விசேட குழு சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீரவிடம் அறிக்கை ஒன்றை ஒப்படைத்துள்ளது.

இவ்வறிக்கையில் புதிய பரிந்துரைகள் 17 முன்வைக்கப்பட்டுள்ளன. இந்தப் பரிந்துரைகள் தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதாக சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, குறித்த அறிக்கை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடமும் கையளிக்கப்படவுள்ளது. (2-7)

# மீசாலை பொதுநூலக சிறுவர் பகுதி தனிப்பிரிவாக இயங்கும்

## நூலகர் தெரிவிப்பு

(சாவகச்சேரி)

மீசாலை பொது நூலகத்தில் சிறுவர் பகுதி தனியான பிரிவாக ஆரம்பிக்கப்படவுள்ளதாக சாவகச்சேரி நகர சபைத் தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளை அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில் நூலகர் திருமதி த.பாலச்சந்திரன் தெரிவிக்கையில், சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் கீழ் இயங்கும் மேற்படி பொது நூலகத்தில் இதுவரை காலமும் சிறுவர்களுக்கு புத்தகங்கள் இரவல் வழங்கும் பகுதி தனியாக இயங்கவில்லை.

இந்நிலையில் சிறுவர்களின் நன்மை கருதியும் தேசிய வாசிப்பு மாத நூலக சேவை விரிவாக்கல் திட்டத்தின் கீழும் தனி அலகாக சிறுவர் பகுதி அரம்பிக்கப்படவுள்ளது.

எனவே, மீசாலை பொது நூலகத்திற்குட்பட்ட 14 வயதிற்குப்பட்ட மாணவர்கள் நூலகத்தில் விண்ணபப்படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து இந்நூலகத்தில் அங்கத்தவராக இணைந்து கொள்ள முடியுமென அவர் தெரிவித்தார். (2-9-29)

# மும்மொழியறிந்த சமூகம் அரச துறையில் உருவாக்கம்

(கொழும்பு)

அரச துறையில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளும் அறிந்த சமூகம் ஒன்று 2020 ஆம் ஆண்டுக்குள் உருவாக்கப்படும். இது தொடர்பாக பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாக தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அரசின் மும்மொழிக் கொள்கைக்கமைய அரச துறை ஊழியர்கள் மும்மொழிகளை அறிந்திருப்பது அவசியம். அதற்கமைய இவ்வாண்டின் முதல் ஆறு மாதங்களில் சுமார் 25 ஆயிரம் அரச உத்தியோகத்தர்கள் தமிழ் மொழிப் பயிற்சி பெற்றுள்ளனர்.

அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் வழிகாட்டலில் நாடு முழுவதிலுமுள்ள 84 தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவக கிளைகளினூடாக வைத்தியர்கள் பிரிவெனாக்களில் கல்வி பயிலும் பௌத்த பிக்குமார் மற்றும் பாராளுமன்ற ஊழியர்களுக்கான பத்து நாட்கள் தமிழ் மொழிப்பயிற்சி வழங்கப்பட்டது என அமைச்சு தெவித்தது.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் பிரதேச சபை ஊழியர்களுக்கான விசேட தமிழ் மொழி பயிற்சிகளும் வழங்கப்படுகிறது என அமைச்சு மேலும் தெரிவித்தது. (2)

# சர்வதேச நல்லொழுக்க தினம்

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் நடத்தும் சர்வதேச நல்லொழுக்க தினம் நாளை மறுநாள் வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சங்கானை பட்டின சபை வீதியில் அமைந்துள்ள காரியாலய மண்டபத்தில் வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத் தலைவர் க.புஸ்பராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். றோட்டறிக் கழக மக்கள் தொடர்பு இயக்குநர் சி.அனுராஜ், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு நிலை தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றப் பணிப்பாளர் தி.சிவ தெட்சணாமூர்த்தி , சட்டத்தரணி திருமதி பிரதீபா கருணாகரன், சங்கானை தெற்கு கிராம சேவையாளர் திருமதி. கு.லலிதாம்பாள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (2-7)


# பளை - பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோரல்

**01. பதவி : பொதுமுகாமையாளர் (நிரந்தரம்)**

பதவி குறியீட்டு எண்: 101/8
சம்பள அளவுத் திட்டம்: 11 200 - 14100
140X10 - 150X10
(கூ.ஊ.ஆ.குழு சுற்றுநிருபம் 66/2006 இன்படி)

✔ கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இதரபடிகளும் வழங்கப்படும்.

**பதவிக்கான தகைமைகள்:**

அ. கூட்டுறவு ஊழியர் 9 ஆவது சம்பளத் திட்ட முகாமை/மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம். அல்லது கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பளத் திட்ட முகாமை அல்லது மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 06 ஆண்டு கால அனுபவம்.
அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டமொன்றுடன் அல்லது அதற்கு சமனான தகைமையொன்றுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்
அல்லது

இ. கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 04 வருட கால அனுபவம்/க.பொ.த உயர்தரப் பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 06 வருட சேவையாற்றிய அனுபவம்.

✔ வயதெல்லை: 21 - 45 (சங்கப் பணியாளர்களுக்கு கவனத்தில் கொள்ளப்படமாட்டாது)

**02. பதவி கணக்காளர் (நிரந்தரம்)**

பதவி குறியீட்டு எண் : 104/10
சம்பள அளவுத் திட்டம் : 11 700 - 13200
120X 10 - 130X 10
(கூ.ஊ.ஆ.குழு சுற்றுநிருபம் 66/2006 இன்படி)

✔ கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இதரபடிகளும் வழங்கப்படும்.

**பதவிக்கான தகைமைகள்**

அ) கூட்டுறவுப் பணியாளர் 11 ஆவது சம்பள அளவுத் திட்டத்தில் கணக்குப் பதிவாளர்/கணக்காளர் அல்லது கணக்கு இலிகிதர் பதவியில் 03 வருடங்களுக்கு குறையாத அனுபவம். அல்லது 12 ஆவது சம்பள அளவுத் திட்டத்தில் கணக்குப் பதிவாளர், கணக்காளர் அல்லது கணக்கு இலிகிதர் பதவியில் 06 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்
அல்லது

ஆ) ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் இறுதிப் பரீட்சையில் சித்தியுடன் மேற்பார்வைத் தரத்தில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனத்தில் கணக்கு/கணக்காய்வு வேலைகளில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் ஐக்கிய இராச்சிய கணக்குப் பதிவாளர் இடைநிலை பரீட்சை சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனத்தில் மேற்பார்வைத்தர கணக்காய்வு பதவியில் 04 வருட அனுபவம்.
அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திர சித்தி/கூட்டுறவுத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி. அத்துடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 02 ஆண்டுகால அனுபவம். அல்லது க.பொ.த. உயர்தரப் பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உள்ளிட்ட 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/கணக்காய்வு துறையில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

✔ வயதெல்லை 18 - 45 (சங்கப் பணியாளர்களுக்கு கவனத்தில் கொள்ளப்படமாட்டாது)

**நிபந்தனைகள்**

அ) கூட்டுறவுச் சங்கங்களில் தற்போது கடமையாற்றுபவர்கள் சங்கத்தின் ஊடாக சிபார்சு செய்து விண்ணப்பித்தல் வேண்டும்.

ஆ) பிணைப்பணம் சங்கத்தால் கோரப்படும் உரொக்கப் பிணை ஆதனப் பிணை செலுத்தவேண்டும். பதவி நிரந்தரமானது. இரண்டு வருடங்கள் தகுதிகாண் காலத்தைக் கொண்டதாகும்.

இ) விண்ணப்பத்துடன் கல்விச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், மேலதிக தகைமைகளுக்கான சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படவேண்டும். விண்ணப்பங்களை ஏற்கவோ நிராகரிக்கவோ நெறியாளர் குழுவுக்கு உரிமையுண்டு.

மேற்குறித்த பதவிகளுக்கு இலங்கைப் பிரஜைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சங்க எல்லைப் பரப்புக்குள் வசிப்பவர்கட்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பப் படிவங்களை சுயமாகத் தயாரித்து “தலைவர் பளை - பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம், A-9 வீதி, பளை” எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் எதிர்வரும் 15.10.2013 இற்கு முன்பதாக கிடைக்க கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர், குறியீட்டு இலக்கம், குறிப்பிடப்படல் வேண்டும்.

க.இராசதுரை,
தலைவர், பளை - பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.

(408)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமைச்சுப் பதவியால் இழுபறிப்படும் வடக்கு மாகாண சபை




வடக்கு மாகாண சபைத்தேர்தல் ஒரு மாதிரியாக முடிந்து விட்டது. தமிழ்மக்கள் தங்கள் கடமையை மிகச் சிறப்பாகச் செய்து முடித்துள்ளனர். ஆனால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தனக்குக் கிடைத்த இரண்டு போனஸ் ஆசனங்களை வழங்குவதிலும் அமைச்சுப் பதவிகளை வழங்குவதிலும் இழுபறிப்படுவதைப் பார்க்கும்போது இதையே செய்யமுடியாதவர்கள் வேறு எதைத்தான் செய்துவிடப்போகிறார்கள் என்று எண்ணத்தோன்றும். அந்தளவிற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்குள் சுயநலமும் பதவிமோகமும் மேலாடியுள்ளது.

ஒருவருக்கு ஒருவருடம் என்ற அடிப்படையில் போனஸ் ஆசனத்தைக் கொடுத்து எந்தவிதப் பிரயோசனமும் இல்லாமல் ஆக்கிவிட்ட கூட்டமைப்பு, இப்போது அமைச்சுப் பதவியை வழங்குவதில் கடும் இழுபறியையும் வாதப்பிரதிவாதங்களையும் சந்தித்துள்ளது.

தகைமையுடையவர்களுக்கும் இப்பணியை இவர்கள் செய்து முடிப்பார்கள் என்ற உத்தரவாதம் உள்ளவர்களுக்குமே அமைச்சுப் பதவியை வழங்க வேண்டும். இதைவிடுத்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் அங்கம் பெறும் கட்சிகளுக்கு ஒவ்வொரு அமைச்சு என்ற அடிப்படையில் அல்லது மாவட்ட அடிப்படையில் அமைச்சுப் பதவியை வழங்குவது பொருத்துடையதல்ல. கட்சியில் அங்கத்துவம் பெற்றிருப்பவர்களைச் சமாளிக்கவேண்டும் என்று நினைத்தால் எல்லாமே பாழாகிவிடும்.

### வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலை

விடுதிகளுக்கு ஏகப்பட்ட பணத்தைக்கொட்டி கூட்டம் நடத்துவது, ஊடகவியலாளர் மாநாடுகளை நடத்துவது என்ற அளவில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

தீர்மானம் எதனையும் எடுக்கமுடியாத அளவில் கூட்டமைப்புக் கூட்டிய கூட்டங்கள் முடிந்து போனமை கூட்டமைப்புக்குள் கூடாத கூட்டம் சேர்ந்துவிட்டது என்பதையே வெளிப்படுத்தி நிற்கின்றது.

அமைச்சுப் பதவிகளை வழங்குவதில் இத்துணை இழுபறி ஏற்படுவதற்குக் காரணம் வட மாகாணத்தின் தற்போதைய நிலைமையை கூட்டமைப்பினர் அறிந்து கொள்ளாமையேயாகும்.

வடமாகாணத்தின் தற்போதைய கல்வி நிலையானது நாட்டின் ஒன்பதாவது இடத்தில் உள்ளது. அதாவது இலங்கைத்தீவில் உள்ள ஒன்பது மாகாணங்களில் இறுதியிடத்திலேயே வடபுலத்தின் கல்வி அடைவு மட்டம் இருக்கிறது. இந்நிலையில் வடமாகாணத்தின் கல்விப் பாதிப்புக்களை எங்ஙனம் நிவர்த்திப்பது, கல்விச் சிதைவுகளை எவ்வாறு கட்டியெழுப்புவது என்பது பற்றி மாநாடு கூடி ஆலோசிக்கவேண்டிய நேரத்தில், இங்கோ மந்திரியைத் தெரிவு செய்வதில் இழுபறி நடக்கிறது.

மாகாண சபைக்கு எந்த அதிகாரமும் கொடுக்கக்கூடாது என்ப தில் மிகவும் உறுதியாக இருக்கின்ற அரசு, அதற்காக இராப்பகலாக ஆலோசனை நடத்தி வருகிறது. காணி அதிகாரத்தை ஏதொவொரு வகையில் ஜனாதிபதிக்கு ஆக்கி அதற்குத் தீர்ப்பும் எழுதிவிட்ட ஆளும் வர்க்கம் இப்போது மாவட்ட அமைச்சரை நியமித்து, மாகாண சபைக்கான நிதி ஒதுக்கீட்டுக்கு உலைவைக்க எத்தனிக்கிறது.

மாவட்ட சபை நடைமுறைகள் இல்லாதொழிந்து போன பின்பு மாவட்ட அமைச்சர்களை நியமிப்பது பற்றி அரசு சிந்திப்பதன் நோக்கம் எல்லாம் தமிழர்களின் உரிமைகளை எப்பாடுபட்டேனும் பறித்தெடுப்பதாகும்.

தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்கிவிட்ட அரசு, இப்போது மாகாண சபைக்குக் கிடைக்கக்கூடிய அதிகாரங்களையும் பறித்தெடுத்துப் பரிநாசம் செய்யப்படாப் பாடுபடுகின்றது.

ஆனால், வடக்கு மாகாண சபையோ இதனை உணராமல் அமைச்சுப் பதவிக்காக அடிபடுகிறது. எதற்காக இந்த அடிபாடு. பதவி ஆசை, வாகனங்களில் ஓடித்திரியும் நப்பாசை, ஊழல் மோசடி செய்யும் உள்நோக்கம், விழாக்கள், மாலை மரியாதைகள் என்ற படோபகாரம் என்பவற்றிற்காகவே அமைச்சுப் பதவிக்கு அடிபாடு நடக்கின்றது. இதைவிட மக்கள்சேவை என்று யாரேனும் சொல்வார்களேயாயின் அதுவே மிக உச்சமான பொய்யாக இருக்கும்.

## முதலமைச்சரின் கை ஓங்க வேண்டும்

### விக்னேஸ்வரனை நம்பியே மக்கள் வாக்களித்தனர்

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் வடக்குமாகாண சபையின் முழு நிர்வாகத்தையும் தனது பொறுப்பில் எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதே தமிழ்மக்களின் விருப்பம்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் அமோக வெற்றிக்குப் பின்னால் தங்களின் அரசியல் பிரவேசம் இருந்தது என்பதை யாருமே மறுத்துவிட முடியாது.

ஓய்வுபெற்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் என்ற வடக்கு மாகாண சபையின் முதன்மை வேட்பாளரை விலக்கிவிட்டு அந்த இடத்தில் கூட்டமைப்பின் வேறு எந்தத் தலைவரை நிறுத்தியிருந்தாலும் அவர்கள் 50 ஆயிரம் விருப்பு வாக்குகளைத் தாண்டியிருக்கமுடியாது.

எனவே, தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கு மாற்றீடாக ஒரு கட்சியமைப்பை விரும்பிய தமிழ்மக்களுக்கு அது நிறைவேறாமல் போனது. ஆயினும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு என்ற குட்டைக்குள் ஊறிப்போனவர்கள் இல்லாமல், நீதியரசராக இருந்த ஒருவர் முதன்மை வேட்பாளராக நியமிக்கப்பட்டதும் அதனைத் தமிழ்மக்கள் அமோகமாக வரவேற்றனர். அதன்முடிபுதான் இத்துணை வெற்றி.

எனவே, மக்களின் நம்பிக்கைகளை, அபிலாசைகளை காப்பாற்ற வேண்டிய தார்மீகப் பொறுப்பு முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்களுக்கு உண்டு. கூட்டமைப்பினரால் எந்த எதிர்ப்பு வந்தாலும் அதனையெல்லாம் தூக்கியெறிந்துவிட்டு உங்களுக்கு மக்கள் தந்த ஆணையை பலம் பொருந்திய செங்கோலாகக் கொண்டு வடக்கின் மாகாண சபை ஆட்சியை நடத்துங்கள்.

பொருத்தமான அமைச்சர்களை நீங்களே நியமியுங்கள். அமைச்சுப் பதவி தேவை என்று அடம்பிடிப்பவர்களை மக்களுக்கு வெளிப்படுத்துங்கள். மக்கள் அவர்களை வெளியேற்றுவர். இதை முதலமைச்சராகிய நீங்கள் செய்தே ஆகவேண்டும்.

- விதுரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிரந்தர கட்டடம் மற்றும் நிரந்தர வைத்தியர் இன்றி

# பல்வேறுபட்ட குறைபாடுகளுடன் மூங்கிலாறு பிரதேச வைத்தியசாலை

(முல்லைத்தீவு)

**மூங்கிலாறு பிரதேச வைத்தியசாலை தற்காலிக கட்டட மொன்றில் பல்வேறுபட்ட குறைபாடுகளுடன் நிரந்தரமான வைத்தியர் இன்றியும் இயங்கிவருவதால் தாம் பல சிரமங் களை எதிர்கொள்வதாக அப்பகுதி மக்களும் நோயாளர் களும் கவலை தெரிவித்து கோரிக்கை ஒன்றை முன்வைத் துள்ளனர்.**

முல்லைத்தீவு மாவட்ட புதுக் குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் உள்ள உடையார்கட்டு தெற்கு கிராமத்தில் புதுக்குடியிரு ப்பு பரந்தன் வீதிக்கு அருகாமை யில் இவ் வைத்தியசாலை இய ங்கி வருகின்றது.

கடந்த 2004 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இவ் வைத்தியசாலை 2008 ஆம் ஆண்டுவரை ஆர ம்ப சுகாதார நிலையமாகவே இயங்கி வந்தது.

பின்னர் போர் காரணமாக இயங்காதிருந்து 2011 ஆண்டு மக்களின் மீள்குடியேற்றத்துடன் மீண்டும் இயங்க ஆரம்பித்தது. பின்னர் இது 2013 ஆம் ஆண்டு மூங்கிலாறு பிரதேச வைத்திய சாலையாக தரமுயர்த்தப்பட்டது.

இவ் வைத்தியசாலையில் தினமும் 25 இற்கு மேற்பட்ட உள் நோயாளர்களும் 15 இற்கும் மேற்பட்ட வெளிநோயாளர்களும் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இங்குநோயாளர்களின்சேவைக் கென இரண்டு நிரந்தர வைத் தியர்கள் தேவைப்படுகின்ற நிலையில் ஒருவரே பதில் கடமை



வைத்தியராக கடமையையாற்றி வருகிறார்.

இங்கு பல்வைத்தியர், நிரந்தர தாதி, நிரந்தர மருந்துக்கலவை யாளர் ஆகியோர் நியமிக்கப்பட வில்லை. மின்சார வசதி, கணனி




வசதி, ஆண், பெண் நோயாளர் விடுதி வசதி, மகப்பேற்று அறை வசதி எதுவும் இல்லாத நிலையும் காணப்படுகிறது.

மேலும் இடப்பற்றாக்குறை, தளபாட பற்றாக்குறை என்பவற் றோடு வைத்தியர் விடுதி வசதி, மலசலகூட வசதி என்பனவும் இங்கில்லை. மேலும் கட்டடத்தை சுற்றி பாதுகாப்பு வேலிகளும் அமைக்கப்படவில்லை.

குடிநீருக்காக கிணறு ஒன்று உள்ள போதிலும் குடிநீர் தாங்கி அமைக்கப்படவில்லை. குடிநீர் வசதி இல்லை.

நிரந்தர வைத்தியர் இன்மை யால் இரவு நேரங்களில் அவசர சிகிச்சைக்காக இங்குவரும் நோயா ளர்கள் மறுநாள் விடியும் வரை பெரும் துன்பங்களை அனுபவிக்க வேண்டியுள்ளன. தேநீர்ச் சாலை அமைக்கப்படவில்லை. இவர்கள் இந்நிலையில் நோய் முற்றி உயிராபத்துக்களையும் எதிர் கொள்ள வேண்டியுள்ளது.

மாறாக இரவு நேரத்தில் சிகிச்சை பெற விரும்பின் 15 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள புதுக்குடியிருப்பு, தர்மபுரம் வைத்தியசாலைகளுக்கு உயி ரைக் கையில் பிடித்துக் கொண்டு பணம், அதிக நேரம் என்பவற் றைச் செலவு செய்து செல்ல வேண்டிய நிலையிலும் உள்ளணர்.

போரால் சேதமாக்கப்பட்ட தற் காலிகக் கட்டடத்தில் இவ் வைத்தி யசாலையை நம்பி உடையார் கட்டு வடக்கு, உடையார் கட்டு தெற்கு, தேவிபுரம், வள்ளிபுனம், சுதந்திர புரம், விஸ்வமடு கிழக்கு, விஸ்வ மடு மேற்கு, வள்ளுவர் புரம், மாணிக்கபுரம், தேராவில் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 52 கிராமங்களில் உள்ள 6 ஆயிரத்து 170 குடும்பங்கள் வாழ்கின்றனர்.

எனவே தற்காலிக கட்டடத்தில் பல்வேறுபட்ட குறைபாடுகளுடன் இயங்கும் இந்த வைத்தியசா லையை இவ்வைத்திய சாலை யிலி ருந்து 100 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள வைத்திய சாலை க்குரிய 10 ஏக்கர் காணியில் சகல வசதிகளுடனான நிரந்தரக் கட்டடத்தை அமைத்து ஆளணிப் பற்றாக்குறைகளையும் ஏனைய குறைகளையும் நிவர்த்தி செய்து தர வேண்டும் என அப்பகுதி மக்களும் நோயாளிகளும் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளனர். (ம-267)

## ஐந்து ஆட்கொணர்வு மனுக்கள் முல்லை.மாவட்ட நீதிபதி முன்னிலையில்

(முல்லைத்தீவு)

காணாமற் போனவர்கள் தொடர் பில் வவுனியா மேல் நீதி மன்றில் நடைபெற்ற ஐந்து ஆட்கொண ர்வு மனுக்கள் கடந்த செப்டெம்பர் மாதம் 27 ஆம் திகதி வெள்ளிக் கிழமை அன்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் பாரப்ப டுத்தப்பட்டுள் ளது.

காணாமற் போனவர்கள் தொடர்பில் பூர்வாங்க விசார ணையை மேற்கொண்டு அதன் அறிக்கையை முல்லைத்தீவு மாவ ட்ட நீதிமன்றம் வவுனியா மேல் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கும்.

இப்பூர்வாங்க விசாரணை எதிர்வரும் 24 ஆம் திகதி அன்று முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் எடுத்து கொள் ளப்படவுள்ளது. ஐந்து ஆட்கொ ணர்வு மனுக்கள் அவ்வேளை யில் எடுத்து கொள்ளப்படவுள் ளன. (ம)

## நிர்வாக சபைத் தெரிவு

(குருமன்காடு)

ஆதிவிநாயகர் ஆலய புதிய நிர்வாக சபைத் தெரிவு கடந்த சனிக்கிழமை ஆலய பாலாம் பிகை மண்டபத்தில் பிரதேச செய லாளர் கா. உதயராசா, கலாசார உத்தியோகத்தர் நித்தியானந் தன்,கிராம சேவையாளர் எஸ். சிவானந்தன், மாகாணசபை உறுப்பினர் எம்.தியாகராஜா முன்னிலையில் இடம் பெற்றது.

இதில் தலைவராக தி.தில்லை நாதன், செயலாளராக எஸ். கஜேந்திரகுமார் உப தலைவராக க.சுமந்திரன், பொருளாளராக எஸ்.சிவகரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

வவுனியா வைரவ புளியங் குளத்தில் உள்ள ஆதி விநாயகர் ஆலயத்தில் பல ஆண்டு கால மாக நிர்வாக சபை இயங்கா திருந்தது.

ஆலயத்தில் புதிய நிர்வாக சபை உருவாக்கப்பட வேண்டும் என இப் பகுதி மக்கள், கிராம சேவையாளர், பிரதேச செய லாளர், கலாசார உத்தி யோ கத்தர் ஆகியோருக்கு கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக் கது. (ம-250)

## வீதியை புனரமைத்து போக்குவரத்துக்கு உதவுங்கள்



(முல்லைத்தீவு)

முள்ளியவளை வற்றாப் பளை வீதி 30 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாமையால் பயணிப் போர்பெரும் சிரமங்களை எதிர்கொள் கின்றனர்.

வீதி அபிவிருத்தி திணைக்களத் துக்கு சொந்தமான 2.5 கி.மீ தூரம் கொண்ட இவ் வீதியை முள்ளிய வளை மேற்கு, முள்ளியவளை மத்தி, வற்றாப்பளை ஆகிய கிராமங் களை சேர்ந்த 14 கிராமங்களில் உள்ள ஆயிரத்து 61 குடும்பங் கள் மக்கள் பயன்படுத்துகின்றனர்.

இவ்வீதியில் வெள்ளம் ஓடுவ தற்கு வடிகால் அமைப்போ பாலமோ அமைக்கப்படவில்லை.

குறித்த குறுகிய அகலத்தை உடையதாக இரண்டு வாகனங் கள் ஒரே வேளையில் செல்ல முடி யாத நிலை காணப்படுகின்றது.

எனவே இவ்வீதியின் குறை பாடு களை கவனத்திற் கொண்டு விரை வில் இதனை புனரமைத்து போக்குவரத்துக்கு உதவ வேண்டு மென அப்பகுதி மக்களும் பயணி களும் வேண்டுகோள் ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-267)

## கிளி.யில் கேரள கஞ்சாவுடன் பெண் ஒருவர் கைது

கிளிநொச்சி பாரதிபுரம் பிர தேசத்தில் கேரள கஞ்சா வைத் திரு ந்த பெண் ஒருவர் கைது செய் யப்பட் டுள்ளார்.

கிளிநொச்சி பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப் படையிலேயே இச் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாரதிபுரத்தைச் சேர்ந்த பெண் ஒருவரே சந்தேகத்தின் பேரில் நேற்று முன்தினம் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து ஒரு கிலோ 100 கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இவர் நேற்று கிளிநொச்சி நீத வான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப் பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான மேல திக விசாரணைகளை கிளி நொச்சி பொலிஸார் மேற்கொண் டுள்ளனர். (2-7)

## சர்வதேச சிறுவர் தினமும் முதியோரை கௌரவித்தல் நிகழ்வும்

சர்வதேச சிறுவர் தினம் மற்றும் முதியோர்களுக்கான கௌரவி ப்பு நிகழ்வு இன்று உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தில் நடை பெறவுள்ளது.

காலை 9 மணிக்கு 'சிறுவர் தினலும் பிற்பகல் 2 மணிக்கு வயதால் மூத்தவயோதிபரை கௌர விக்கும் நிகழ்வும் இடம்பெறவு ள்ளது.

இந்நிகழ்வை பாடசாலை சமூ கத்தினரும் மாணவர்களின் பெற் றோரும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளனர். (ம-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயம் இன்னது என்று அறிந்தும் அதை நீ செய்யாதிருப்பது கோழைத்தனமாகும்.
~ கோன்பு தஸன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வழிப்படுத்த புத்திஜீவிகள் அமைப்பு தேவை

தமிழர்களின் தலைவிதி போராட்டம் என்பதாயிற்று. அதிலும் அவர்களின் போராட்டம் இப்போது இரு தரப்பிற்கானதாகிவிட்டமை துன்பச்சுமையை மேலும் பாரமாக்கும்.

உரிமையைத் தர மறுக்கும் ஆளும் வர்க்கங்களுக்கு எதிராகப் போராட்டம் நடத்துவதென்பது உலக வழமை. அத்தகையதொரு போராட்டமே உரிமையை பெறுவதற்கும் உதவியது.

ஆனால் எங்கள் தமிழ் இனம் உரிமைகளை பெறுவதற்காக ஆளும் தரப்பிற்கு எதிராக போராட வேண்டிய அதேநேரம், தமிழ் அரசியல் தலைமைகள் தாறுமாறாக நடப்பதைதடுத்து அவர்களை தமிழ் இனப்பற்றோடு செயல்பட வைப்பதற்காக போராட வேண்டிய தேவையும் உண்டு.

உலகில் உரிமைகளுக்காகப் போராடும் மக்களின் போராட்ட அடிப்படைகளில் இருந்து இங்கு தான் எங்கள் தலைவிதி மாற்றமடைகின்றது.

அதாவது, நாங்களே எங்களுக்கான அரசியல் தலைமைகளை தெரிவு செய்துவிட்டு; தெரிவு செய்யப்பட்டவர்களின் சுயநலம், பதவியாசை என்பதால் எங்களின் உரிமைப் போராட்டத்திற்கு சூத்தையை ஏற்படுத்திக் கொள்கிறோம்.

இந் நிலையில் எங்கள் அரசியல் தலைமைகளை ஒழுங்கு படுத்துவதற்காக போராட வேண்டிய தேவையும் உரிமைப் போராட்டத்துடன் சேர்ந்து கொள்கிறது.

அந்தவகையில் ஈழத்தமிழ் மக்களின் தலைவிதியை நினைக்கும் போது, தாள முடியாக் கவலை கண்களை ஈரமாக்கவே செய்யும்.

தேர்தல் காலங்களில் ஏதோவொரு வகையில் விழிப்படையும் தமிழ் சமூக மற்றும் பொது அமைப்புகள் அறிக்கை விடுவதில் காத்திரமான தேர்ச்சியை கொண்டுள்ளன.

அதே சமயம், தமிழ் அரசியல் தலைமைகளும் தேர்தல் காலங்களில் இந்த அமைப்புகளை கனகச்சிதமாகப் பயன்படுத்திவிட்டு பின்னர் அந்த அமைப்புகளை திரும்பியும் பார்க்காமல் கைகழுவி விடுகின்றன.

அறிக்கை எழுதிய அமைப்புகளும், அறிக்கை வெளிவந்ததோடு தங்கள் பணி முடிந்துவிட்டதாக நினைக்கின்றனர்.

இங்குதான் மாபெரும் தவறு நடக்கின்றது. அதாவது, வாக்களித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தெரிவு செய்துவிட்டால், அவர்களே எங்கள் பிரச்சினையைப் பார்த்துக் கொள்வார் கள் என்று நாம் அதீதமாக நம்புகிறோம்.

ஆனால், அந்த நம்பிக்கைக்கு மோசம் செய்யாமல் தமிழ் மக்களின் வாழ்வுக்காக தங்களை அர்ப்பணிக்க வேண்டும் என்ற சிந்தனை, தமிழ் அரசியல் தலைமைகளிடம் இம்மியும் இல்லை.

இதன் காரணமாக உரிமை போராட்டம் என்பதோடு தமிழ் அரசியல் தலைமைகளின் பாதை மாறிய பயணத்தை தடுத்து நிறுத்துதல் என்ற ஒழுங்கு அமைப்பிற்காகவும் போராட வேண்டிய தேவை உள்ளது.

இதற்காக தமிழ் புத்திஜீவிகள் அடங்கிய குழுவொன்று தமிழ் மக்களின் அங்கீகார அமைப்பாக உருவாக்கம் பெறவேண்டும்.

இவ்வாறு உருவாக்கம் பெறும் அமைப்பில், அனைத்து சமூக, பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் இடம்பெறுவதற்காக நெகிழ்ச்சித்தன்மையும் இருப்பது அவசியம்.

வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி அதற்கான திட்டமிடல், தொழில்நுட்ப ஆலோசனை, வேலைவாய்ப்பிற்கான முன் மொழிவுகள், கல்வி முன்னெடுப்புகள், மருத்துவ சேவைகளின் விரிவாக்கம், அரசியல் தீர்வை அடைவதற்கான வியூகங்கள், சர்வதேச உறவை பலப்படுத்தும் முயற்சிகள், நிதி மூலதனத்தை உள்நாடு, வெளி நாடுகளில் இருந்து பெற்றுக்கொள்ளும் உபாயம், போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மீள் எழுச்சித்திட்டங்கள் என பலதரப்பட்ட விடயங்களில் இந்தக் குழு கவனமும் கரிசனையும் ஆக்கபூர்வமான செயலாக்கத்தையும் கொண்டிருக்க வேண்டும்.

இத்தகையதொரு அமைப்பின் ஊடாகவே எங்களை நாங்கள் ஒழுங்கு படுத்த முடியும். இதற்கான ஏற்பாடுகளை யாழ்.பல்கலைக்கழகம் முன்னெடுப்பது பொருத்துடையது.

# சிவில் சமூகத்தினர் மீதான விசாரணையை நிறுத்துங்கள் !

## நவநீதம்பிள்ளை மீண்டும் வலியுறுத்து

(சிட்னி)

இலங்கையில் போரால் பாதிக்கப்பட்டவர்கள் மிகவும் பயந்த சூழலில் வாழ்ந்து வருகின்றனர். வடக்கில் அதிகளவு இராணுவப் பிரசன்னத்தால் மக்கள் அச்சத்துடனேயே உள்ளனர்" என ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஊடகவியலாளர், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் நெருக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டு, விசாரணைக்கு உட்படுத்தப்படுவது உடன் நிறுத்தப்பட வேண்டும் என்றும் அவர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

அவுஸ்திரேலிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கிய செவ்வி ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கை சென்றபோது யுத்தத்தால் உறவுகளையும் உடைமைகளையும் இழந்த தமிழ், சிங்கள மக்கள் அனைவரையும் சந்திக்க முடியாது போனதுடன், நான் பார்க்க விரும்பியவர்களையும் போக விரும்பிய இடங்களுக்கும் இலங்கை அரசாங்கம் அனுமதிக்கவில்லை.

நான் உண்மையிலேயே பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்தித்துள்ளேன். அவர்கள் மிகவும் பயந்த சூழலில் வாழ்ந்து வருகின்றனர். குறிப்பாக அண்மையில் தேர்தல் வேட்பாளர் ஒருவர் மிகவும் கடுமையாக அச்சுறுத்தப்பட்டார். எனினும், வடக்குத் தேர்தலில் அவர் வெற்றியீட்டியுள்ளார்.

இவ்வாறாக சமூகத்தில் முக்கியமானவர்களே பிரச்சினைகளை எதிர்கொள்ளும்போது சாதாரண மக்களைப் பற்றி சிந்தித்துப்பாருங்கள்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இலங்கை அரசாங் கம் நடைமுறைப்படுத்தத் தவறியுள்ளது. 2014 மார்ச் மாதத்திற்கு இடையில் இலங்கை அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்காவிட்டால், சர்வதேச விசாரணைக்கான நடவடிக்கைகளை ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு எடுக்க வேண்டும் என நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சு ஒவ்வொரு புகலிடக் கோரிகையாளரின் பிரச்சினைகளையும் தனித் தனியே முக்கியத்துவம் கொடுத்து ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டுமென்றும் வெறுமனே அரசின் அறிக்கைகளை நடைமுறைப்படுத்தக்கூடாதென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

கடந்த காலங்களில் முன்னைய அவுஸ்திரேலிய அரசால் 1000 இற்கும் மேற்பட்ட இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். எனவே, இலங்கையில் நிலைமை மேம்பட்டிருக்கின்றது எனக் கருதலாமா அல்லது இலங்கை அரசாங்கம் தவறான பிரசாரங்களை செய்கின்றது என விளங்கிக் கொள்ளலாமா? எனக் கேட்டதற்கு,

அவுஸ்திரேலிய அரசு மற்றும் ஐ.நாவினது உதவிகளைப் பெற்று கண்ணுக்கு தெரிகின்ற வீதிகளும் கட்டடங்களும் கட்டப்படுவதால் இலங்கை அரசாங்கம் பெருமைப்படுவது போல், புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விட்டதாக அர்த்தமாகி விடாது. மனித உரிமைப் பிரச்சினைகளும் தீர்க்கப்படுகின்ற போதுதான் புனர்வாழ்வு பூரணமடையும் என இச்செவ்வியில் நவநீதம்பிள்ளை பதிலளித்துள்ளார். (செ-11)

# மக்கள் குடியிருப்புக்களை விட்டு இராணுவம் வெளியேற வேண்டும்

## கந்தையா சர்வேஸ்வரன் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.வல்வெட்டித்துறை சந்தியிலிருந்து இராணுவம் வெளியேறி மக்களை மீளக்குடியேற அனுமதிக்கப்பட வேண்டும் என வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சியி உறுப்பினர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த 16 வருடங்களுக்கு மேலாக வல்வெட்டித்துறை நகரப்பகுதியை சூழவுள்ள சுமார் 60 வீடுகளில் வசித்து வந்தவர்களை வெளியேற்றியதுடன் கடற்பிரதேசம் உட்பட மூன்று ஏக்கர் நிலப்பரப்பை ஆக்கிரமித்திருக்கும் இராணுவத்தினர் மக்கள் குடியிருப்புக்களை விட்டு வெளியேறவேண்டும் என்று நகரசபை தீர்மானித்திருந்தது.

இது தொடர்பாக ஜனாதிபதி மற்றும் படைத்தளபதிக்கு நேரிலும் கடிதங்கள் மூலமும் வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரை அவர்கள் வெளியேறவில்லை.

கடந்த 13ஆம் திகதி வீடுகளை கையளிப்பதாக கூறியதால் கொழும்பிலும் தென்னிலங்கையின் ஏனைய பகுதகளிலும் இடம்பெயர்ந்த வீட்டு உரிமையாளர்கள் இராணுவ அதிகாரிகளின் வாக்குறுதிகளை நம்பிவருகை தந்து தமது உறவினர்களின் வீடுகளில் நீண்ட நாட்களாக காத்திருக்கின்றார்கள்.

அதன் பின்னர் தேர்தல் முடிந்ததும் கையளிப்பதாக கூறிய போதும், இதுவரை எந்த நவடிக்கையையும் மேற்கொள்ளப்படவில்லை என வீட்டு உரிமையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அண்மையில் வல்வெட்டித்துறைக்கு விஜயம் செய்தபோது நான் அந்த முகாம் பகுதியை பார்வையிட்டதும் அதிர்ச்சியடைந்தேன்.

அங்கே பல வீடுகள் உடைக்கப்பட்டு சந்தியிலிருந்து கடற்கரை வரைக்கும் ஒரேவெளியாக காணப்படுவதுடன் தேர்தல் முடிபடைந்ததும் மீண்டும் முட்கம்பி வளைய வேலிகள் போடப்பட்டுள்ளன.

இந்த நிலையில் இராணுவத்தினர் தமது குடியிருப்பு பிரதேசங்களை விட்டு வெளியேறி தம்மை மீள்குடியேற்றுவதற்கான நாளை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த மக்கள், இப்போது ஏமாற்றம் அடைந்து விரக்தியுடன் காணப்படுகின்றனர்.

எனவே மக்களின் நிலங்களை பாதுகாக்க வேண்டிய படையினர் தமது கடமையும் பொறுப்பையும் மனதிற்கொண்டு ஏற்கெனவே அளித்த வாக்குறுதிகளுக்கு அமைய அவர்களது குடியிருந்த வீடுகளை மீண்டும் கையளிக்க நடவடிக்கை எடுக்குமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளை கேட்டுக்கொள்கிறேன் என்று அவர் தனது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (செ-6)

# சித்திரக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யா/கொக்குவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த சித்திரக் கண்காட்சி நாளை புதன்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு கல்லூரியின் சித்திரக் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக் கண்காட்சியில் பிரதம விருந்தினராக யா/கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபர் வி.ஞானகாந்தன், கௌரவ விருந்தினராக யாழ்.கல்வி வலய அதிரிய ஆலோசகர் சி.துசியந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (செ-5)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### ஆன்மீகமே நம் இலட்சியம்



❖ முன்னேறிக் கொண்டே இருங்கள். முறையற்ற ஒரு செயலைச் செய்து விட்டதாகவே நினைத்தாலும் திருப்பிப் பார்க்காதீர்கள். தவறு நடந்திருந்தால் திருத்திக் கொள்ளுங்கள்.

❖ மற்றவர்களுக்கு நன்மை செய்வதுதான் தர்மம். மற்றவர்களுக்குத் தீமை செய்வது பாவம்.

❖ உண்மை, தூய்மை, சுயநலமின்மை ஆகிய மூன்றையும் கொண்ட மனிதனை நசுக்கக் கூடிய ஆற்றல் யாருக்கும் கிடையாது. இந்த பிரபஞ்சமே எதிர்த்து நின்றாலும் அவனால் சாதிக்க முடியும்.

❖ கொழுந்து விட்டெரியும் ஆர்வம் நாலாபுறத்திலும் பரவட்டும். பணியாற்றும் போது ஒரு வேலைக்காரனை போல இருங்கள்.

❖ ஆன்மிகத்தை இலட்சியமாகப் போற்றுங்கள். மேலை நாட்டு நாகரிகத்தின் பின்னால் சென்றால் நம் பண்பாட்டின் அடிப்படை ஆட்டம் கண்டு விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லாலிகா காற்பந்துத் தொடரில்

# அல்மிரியா அணியை பந்தாடி பார்சிலோனா புதிய சாதனை

அல்மிரியா அணிக்கு எதிரான லாலிகா காற்பந்து தொடரின் லீக் போட்டியில் வெற்றி பெற்ற பார்சிலோனா அணி, தொடர்ந்து 7ஆவது வெற்றியை பதிவுசெய்து புதிய சாதனை படைத்தது.

ஸ்பெயினில் லாலிகா காற்பந்து தொடர் நடைபெற்று வருகிறது. இதன் லீக் போட்டியில் 'நடப்பு சம்பியன்' பார்சிலோனா அணி, அல்மிரியா அணியை எதிர்கொண்டது. இதில் போட்டியின் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய பார்சிலோனா அணிக்கு நட்சத்திர வீரர் மெஸ்சி (21ஆவது நிமிடம்) முதல் கோல் அடித்தார். இதற்கு அல்மிரியா அணி வீரர்களால் பதிலடி கொடுக்கமுடியவில்லை.

தொடர்ந்து நடந்த இரண்டாவது பாதியிலும் அசத்திய பார்சிலோனா அணிக்கு அட்ரியானோ (56) ஒரு கோல் அடித்தார். இதற்கு கடைசி வரை அல்மிரியா வீரர்களால் பதிலடி கொடுக்கமுடியவில்லை.

இறுதியில், பார்சிலோனா அணி, 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம், இந்த ஆண்டுக்கான தொடரில் பங்கேற்ற 7 போட்டியிலும் வெற்றி பெற்று பார்சிலோனா அணி, புதிய சாதனை படைத்தது. இதற்கு முன் கடந்த 2009-10, 2012-13 ஆண்டுகளில் நடந்த லாலிகா தொடர்களில் பார்சிலோனா அணி தொடர்ந்து 6 போட்டிகளில் வெற்றி பெற்றதே சாதனையாக இருந்தது.

14 ஆண்டுகளுக்கு பின்: மற்றொரு போட்டியில் ரியல் மாட்ரிட் அணி, அத்லெடிகோ மாட்ரிட் அணியிடம், 1-0என்ற கோல் கணக்கில் 14 ஆண்டுகளுக்கு பின் முதல் முறையாக தோல்வியை சந்தித்தது. மற்றொரு போட்டியில வாலன்சியா அணி, ரேயோ வலே கெனா அணியை 1-0 என வீழ்த்தியது. ரியல் சோசிடெட், செவில்லா அணிகள் மோதிய மற்றொரு லீக் போட்டி 1-1 என்ற கணக்கில் சமநிலையானது.

## ஐ.பி.எல். தலைவராக ரஞ்சிப் பிஸ்வால்

ஐ.பி.எல். இன் தலைவராக ஒடிசாவை சேர்ந்த ரஞ்சிப் பிஸ்வால் நியமிக்கப்பட்டுள்ளார். ரசிகர்கள் மத்தியில் ஏகோபித்த வரவேற்பை பெற்றிருக்கும் ஐ.பி.எல். போட்டியின் மூலம் இந்திய கிரிக்கெட் சபைக்கு கோடிக்கணக்கில் வருமானம் கொட்டுகிறது. 6ஆவது ஐ.பி. எல். தொடரில் சூதாட்ட பிரச்சினை வெடித்த போது, ராஜீவ் சுக்லா் தனது பதவியை இராஜினாமா செய்தார். கிரிக்கெட் சபை வற்புறுத்தியும் அவர் முடிவை மாற்றிக் கொள்ளவில்லை.

இதையடுத்து சென்னையில் நடைபெற்ற இந்திய கிரிக்கெட் சபையின் ஆண்டு பொதுக் குழு கூட்டத்தில் ஐ.பி.எல். தலைவராக 43 வய தான ரஞ்சிப் பிஸ்வால் நியமிக்கப் பட்டார்.

## சலஞ்சேர் கிண்ணம் யுவராஜ் அணிக்கு

சலஞ்சேர் கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் யுவராஜ்சிங் தலைமையிலான இந்திய புளூ அணி வெற்றி வெற்று கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது.

என்.கே.பி.சால்வே சலஞ்சேர் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதி ஆட்டத்தில் யுவராஜ்சிங் தலைமையிலான இந்திய புளூ அணியும், விராட் கோலி தலைமையிலான டில்லி அணியும் இந்தூரில் மோதின.


இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய புளூ அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 274 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக மனிஷ் பாண்டே 62 ஓட்டங்களும் பியுஷ் சாவ்லா 42 ஓட்டங்களும், அங்கித் பாவ்னே 37 ஓட்டங்களும் நமன் ஓஜா 33 ஓட்டங்களையும் அணித் தலைவர் யுவராஜ்சிங் 29 ஓட்டங்களையும் (40 பந்து, 2 பவுண்டரி, ஒரு சிக்சர்) பெற்றனர்.

தொடர்ந்து ஆடிய டில்லி அணியை வேகப் பந்து வீச்சாளர்கள் புவனேஷ்வர் குமாரும், வினய்குமாரும் மிரள வைத்தனர். அந்த அணியின் நட்சத்திர வீரர்கள் கவுதம் கம்பீர் (4), உன்முக் சந்த் (6), ஷேவாக் (5), அணித் தலைவர் விராட் கோலி (23) ஆகியோர் முதல 10 ஓவருக்குள் ஆட்டம் இழந்து வெளியேறினர்.

இதன் பின்பு அணியை சரிவில் இருந்து மீட்க மிலிண்ட் குமார் (54), புனீத் பிஷ்த் (54) போராடிய போதிலும் அதற்கு பலன் கிட்டவில்லை. இறுதியில் டில்லி அணி 44.4 ஓவர்களில் 224 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. ஆனது. இதன் மூலம் இந்திய புளூ அணி 50 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்தது. புவனேஷ்வர் குமார் 39 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுகளை சாய்த்தார். வினய்குமார் 3 விக்கெட்டுகளும், பியுஷ் சாவ்லா 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர். புவனேஷ்வர் குமார் ஆட்டநாயகன் விருதை பெற்றார்.



# ஒட்டாகோ 'திரில்' வெற்றி



சம்பியன்ஸ் லீக் கிரிக்கெட்டில் லயன்சுக்கு எதிரான ஆட்டம் இரண்டு முறை சமநிலையில் முடிந்த போதிலும் புதிய விதிப்படி ஒட்டாகோ அணி 'திரில்' வெற்றியை ருசித்தது.

லயன்ஸ் வீரர் குயின்டோன் டி காக் ஆட்டமிழக்காமல் 63 பந்துகளில் 109 ஓட்டங்கள் எடுத்தபோதும், அதிர்ஷ்டம் இல்லாததால் அந்த அணி தோல்வியைத் தழுவியது.

இந்த ஆட்டம் ராஜஸ்தான் மாநிலம், ஜெய்ப்பூரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய லயன்ஸ் அணி 20 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 167 ஓட்டங்களைப் பெற்றது.

இதைத் தொடர்ந்து களமிறங்கிய டைட்டன்ஸ் அணி, ஒரு கட்டத்தில் தோல்வியடையும் நிலையில் இருந்தது. 6ஆவது வீரராகக் களமிறங்கிய நீஷாம் 25 பந்துகளில் 52 ஓட்டங்கள் எடுத்து அணியின் ஓட்டத்தை உயர்த்தினார்.

கடைசி ஓவரில் ஒடாகோ அணிக்கு 11 ஓட்டங்கள் தேவைப்பட்டது. ஆனால், அந்த ஓவரில் 10 ஓட்டங்கள் மட்டும் கிடைத்தது. இதனால், ஒடாகோ அணி 167 ஓட்டங்களை மாத்திரம் பெற ஆட்டம் சமநிலையானது.

சுப்பர் ஓவரும் சமநிலை: வெற்றியைத் தீர்மானிக்க சுப்பர் ஓவர் முறை கடைப் பிடிக்கப்பட்டது.

ஒடாகோ முதலில் விளையாடியது. நீஷாமும், அணித் தலைவர் மெக்கல்லமும் ஒடாகோ தரப்பில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கினர். லயன்ஸ் தரப்பில் சோகைல் தன்வீர் சுப்பர் ஓவரை வீசினார். இதில், ஒடாகோ விக்கெட் இழப்பின்றி 13 ஓட்டங்களை எடுத்தது.


அடுத்து விளையாடிய லயன்ஸ் அணியில காக்கும், ஷியம்ஸ்ூம் துடுப்பெடுத்தாடினர். சுப்பர் ஓவரை நீஷாம் வீசினார். முதல் 2 பந்துகளில் 10 ஓட்டங்கள் எடுத்த லயன்ஸ், அடுத்த 4 பந்துகளில் மேலும் 3 ஓட்டங்கள் எடுத்து 2 விக்கெட்டுகளை பறி கொடுத்தது. இதனால், சுப்பர் ஓவரும் சமநிலையானது.

பவுண்டரியில் வெற்றி: இதைத் தொடர்ந்து, இரு அணிகளும் அடித்த பவுண்டரிகள் கணக்கிடப்பட்டன. இதில், லயன்ஸ் வீரர்கள் 11 பவுண்டரிகளை அடித்திருந்தனர். ஆனால், ஒடாகோ வீரர்கள் 12 பவுண்டரிகளை விளாசியிருந்தனர். ஒரு பவுண்டரி கூடுதலாக இருந்ததால் ஒடாகோ வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. ஆட்ட நாயகன் விருதை நீஷான் பெற்றார். இதன்மூலம் ஏ பிரிவில் உள்ள ஒடாகோ அணி 3 ஆட்டங்களில் விளையாடி 10 புள்ளிகள் பெற்று முதலிடத்தில் உள்ளது. இதனால் அந்த அணியின் அரையிறுதி வாய்ப்பு பிரகாசமாகியுள்ளது.

## சூரிய தீப்பிழம்புகளால் ஒலிம்பிக் தீபம் ஏற்றப்பட்டது

இந்த வருடத்திற்கான குளிர்கால ஒலிம்பிக் போட்டித் தொடருக்கான ஒலிம்பிக் ஜோதி கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்றப்பட்டது. இந் நிகழ்வு பழங்கால ஒலிம்பியா நகரில் உள்ள ஹீரா கோவிலின் இடிபாடுகளிடையில் கோலாகலமாக நடைபெற்றது. இந்த விழாவில் ஒலிம்பிக் சபையின் தலைவர் தாமஸ் பாக் கலந்துகொண்டார்.

விழாவின் ஆரம்பத்தில் வெள்ளை உடை அணிந்த பெண்கள் விரிவான ஒரு நடன நிகழ்ச்சியை நடத்தினர். அதன் பின்னர் சூரிய ஒளிக்கதிர்களில் இருந்து தீப்பிழம்பு பெறப்பட்டு அதன்மூலம் இந்த ஒலிம்பிக் ஜோதி ஏற்றப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பியன்ஸ் லீக் இருபது - 20

# டைட்டன்ஸை வீழ்த்தியது டிரினிடாட்

டக்வேத் லூயிஸ்முறைப்படி டைட்டன்ஸ் அணியை 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது டிரினிடாட் அணி. சம்பியன்ஸ் லீக் கிரிக்கெட் தொடரில் நேற்று அகமதாபாத்தில் நடந்த பி பிரிவு லீக் ஆட்டத்தில்



டிரினிடாட் அனட் டொபாக்கோ-டைட்டன்ஸ அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற டைட்டன்ஸ்அணி, களத்தடுப்பைத் தேர்வு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய டிரினிடாட அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர சிம்மன்ஸ் டக் அவுட் ஆகி அதிர்ச்சி அளித்தார்.

ஆனால், அவரைத் தொடர்ந்து இணைந்த லெவிஸ்-பிராவோ ஜோடி டைட்டன்ஸ் பந்துவீச்சை பதம் பார்த்தனர்.

மின்னல் வேகத்தில் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்திய லெவிஸ், 35 பந்துகளில் 7 பவுண்டரி, 5 சிக்சருடன் 70 ஓட்டங்கள் விளாசி ஆட்டமிழந்தார். இதேபோல் பிராவோ, 44 பந்துகளில் 63 ஓட்டங்களைக் குவித்தார். இதில 5 பவுண்டரி, 4 சிக்சர் அடங்கும்.


விறுவிறுப்பாக ஆடிய ஸ்ருவர்ட 23 ஓட்டங்களில் அரங்கு திரும்பினார். இதனால் அந்த அணி 20 ஓவர் முடிவில் 6 விக்கெட் இழப் பற்கு 188 ஓட்டங்களை எடுத்திருந்தது. டைட்டன்ஸ் தரப்பில் லாங் 3 விக்கெட் எடுத்தார்.

பின்னர் களமிறங்கிய டைட்டன்ஸ் அணக்குசிறப்பான ஆரம்பம் அமைந்த போதும்போதிய ஓட்ட எண்ணிக்கையை எட்ட முடியவில்லை. அணித்தலைவர் டேவ்ட்ஸ் (42), ருடால்ப் (31) ஜோடி பிரிந்த பிறகு ஆட்டத்தில் மந்தநிலை காணப்பட்டது.

ஓட்டங்களை உயர்த்தகடும்முயர்சி மேற்கொண்ட பெகார்டியன் 19 ஓட்டங்களில் 3 சிக்சர்களுடன் 29 ஓட்டங்களைக் குவித்தார். டிவில்லியர்ஸ் 13 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 23 ஓட்டங்கள் எடுத்தார்.

17 ஓவர்களில் டைட்டன்ஸ் அணி 6 விக்கெட் இழப்பிற்கு 153 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் மழை பெய்ய ஆரம்பித்தது. ஆடுகளத்தில் தண்ணீர்த் தேங்கியதால் தொடர்ந்து விளையாட முடியாத நிலை ஏற்பட்டது.

எனவே, டக்வோர்த் லூயிஸ்விதிப படி வெற்றி தோல்வி கணிக்கப்பட்டது. இதில் டிரினிடாட் அன்ட் டொபாக்கோ அணி 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக லூயிஸ் தெரிவானார்.



# சுல்தான் ஆப் ஜோகர் ஹாக்கி இந்திய அணி சம்பியன்

சுல்தான் ஒப் ஜோகர் ஹாக்கி கிண்ணப் போட்டியில் இந்தியா வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.

மலேசியாவில் சுல்தான் ஒப் ஜோகர் கிண்ண ஹாக்கி போட்டி நடந்தது.

21 வயதிற்கு உட்பட்டோருக்கான போட்டியில் இறுதி ஆட்டத்தில் இந்தியாவும், மலேசியாவும் மோதின.

இந்த தொடரில் இந்திய வீரர்களின் ஆட்டம் அபாரமாகவே இருநதது. எந்த போட்டியிலும் தோல்வி அடையவில்லை.




தங்களது அதிரடியான ஆட்டத்தை இறுதிப்போட்டியிலும் இந்திய வீரர்கள் வெளிப்படுத்தினர்.

ஆட்டத்தின் 22-வது நிமிடத்தில் ஆமோன டிர்க்கி முதலாவது கோல் அடித்து இந்திய அணியை முன்னிலை பெற செய்தார்.

அதன்பிறகு 52-வது நிமிடத்தில் யூசுப் ஒரு கோலும், 64-வது நிமிடத்தில் மாண்பிரீத் ஒரு கோலும் அடித்தனர்.

மலேசியா அணியால்எந்த கோலும் போட முடியவில்லை. முடிவில் இந்திய அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சுல் தான் ஜோகர் கிண்ணத்தை கைப்பற்றியது.

இந்த தொடரில் மலேசியாவின் முகமது சாபா அதிகபட்சமாக 8 கோலும், பாகிஸ்தானின் முகமது தில்பர் 7 கோலும், இந்தியாவின் ராமன்தீப் சிங் 6 கோலும், இந்தியாவின் யூசுப அப்ரான் 4 கோலும் அடித்தனர்.

# இந்திய அணியில் மீண்டும் யுவராஜ்

அவுஸ்திரேலியா கிரிக்கெட் அணி வருகிற 10 ஆம் திகதி முதல் நவம்பர் 2ஆம் திகதி வரை இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து ஒரு 20 ஓவர் போட்டி மற்றும் 7 ஒருநாள் போட்டியில் விளையாடவுள்ளது.

10ஆம் திகதி 20 ஓவர் போட்டி ராஜ்கோர்ட்டில் நடக்கிறது. ஒருநாள் போட்டி தொடரின் முதல் போட்டி 13ஆம் திகதி புனேவில் தொடங்குகிறது.

கடைசி மற்றும் 7ஆவது ஒரு நாள் போட்டி நவம்பர் 2ஆம் திகதி பெங்களூரில் நடக்கிறது.

இதில் 20 ஓவர் போட்டி மற்றும் முதல் 3 ஒருநாள் போட்டிக்கான 15 பேர் கொண்ட இந்திய அணி நேற்று சென்னையில் அறிவிக்கப்பட்டது.

யுவராஜ்சிங் மீண்டும் அணியில் இடம் பிடித்தார். 9 மாதங்களாக



அணியில் இடம் பெறாமல் இருந்த அவர் உள்ளூர் போட்டிகளில் சிறப்பாக விளையாடியதால் தேர்வு பெற்றார்.

மேற்கிந்தியத் தீவுகள் ஏ அணிக்கு எதிரான ஒருநாள் போட்டியில் அதிரடியாக விளையாடி சதம் அடித்தார். 20 ஓவர் போட்டியிலும் திறமையை நிரூபித்தார்.

கடைசியாக அவர் கடந்த ஜனவரி மாதம் இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் போட்டியில் விளையாடி இருந்தார்.

அம்பதி ராயுடு, ஜெய்தேவ் உனகட் இடம் பிடித்தனர். தினேஷ் கார்த்திக், புஜாரா, ரகானே, மொகித் சர்மா, பர்வேஷ் ரசூல் ஆகியோருக்கு வாய்ப்பு வழங்கப்பட வில்லை.

15 பேர் கொண்ட இந்திய அணி விவரம் வருமாறு,

தோனி (அணித்தலைவர்), வராட் கோலி, ஷிகார் தவான், ரோகித் சர்மா, யுவராஜ் சிங், சுரேஷ் ரெய்னா, ரவிந்திர ஜடேஜா, அஸ்வின், புவனேஸ்வர் குமார், இஷாந்த் சர்மா, வினய் குமார், அமித் மிஸ்ரா, அம்பதி ராயுடு, முகமது சமி, ஜெய்தேவ் உன்கட்.

# நீற்றா அன்ரனி ஞாபகார்த்த கிரிக்கெட் போட்டி குருநகர் கார்மேல் போய்ஸ் அணி வெற்றி

கோப்பாய் அம்மன் கிரிக்கெட் கழகத்தால் நடத்தப்பட்ட அமரர் நீற்றா அன்ரனி ஞாபகார்த்த 6 பேர் 5 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டியில் குருநகர் கார்மேல் போய்ஸ் அணியினர் அபார வெற்றியைப் பெற்றனர்.

6 பேர் 5 பந்து பரிமாற்றம் கொண்ட போட்டியில் சுன்னாகம் ஜொலி போய்ஸ அணியை குருநகர் கார்மேல் போய்ஸ அணி எதிர்கொண்டது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற குருநகர் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக் கழகத்தினர் முதலில் துடுப்பாட முடிவு செய்தனர்.



இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய குருநகர் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக் கழகத்தினர் 5 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் ஒரு இலக்கை மாத்திரம் இழந்து 105 ஓட்டங்களை பெற்றனர்.

இதில் அதிகபட்சமாக தேசியன் பதினொரு ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 75 ஓட்டங்களையும், அஜன் இரண்டு ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 20 ஓட்டங்களையும் பெற்றுக கொடுத்தனர்.

106 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சுன்னாகம் ஜோலி போய்ஸ் அணியினர் 5 பந்து பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 50 ஓட்டங்களை மட்டுமே பெற்று போட்டியில் 55 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக கார்மேல் போய்ஸ் விளையாட்டுக் கழகத்தினைச் சேர்ந்த தேசிகனும் தொடர்நாயகனாக இத்தொடர் முழுவதும் 154 ஓட்டங்களையும், 8 இலக்குகளையும் வீழ்த்திய கார்மேல் போய்ஸ் விளையாட்டுக் கழகத்தினைச் சேர்ந்த அயனும் தெரிவு செய்யப்பட்டனர்.

எஸ்.மதுஷன் தலைமையில் இடம் பெற்ற இறுதிப் போட்டிகளின் பிரதம விருந்தினராக மதுரம் இயக்குநர் எஸ்.கே.கிருபாகரன் மற்றும் எஸ்.அன்ரனி ஆகியோர் கலந்து கொண்டு வெற்றிக்கிண்ணங்களையும் பரிசில்களையும் வழங்கிக் கௌரவித்தனர். (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணங்களுக்கு அதிகாரம் வழங்குவதை இந்தியா உறுதி செய்ய வேண்டும் - ஜி. ராமகிருஷ்ணன் வலியுறுத்து

இலங்கை மாகாணங்களுக்கு அதிகாரம் வழங்கப்படுவதை இந்திய அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அக்கட்சியின் மாநிலச் செயலாளர் ஜிராமகிருஷ்ணன் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில்,

26-9-2013 அன்று இலங்கை உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பை மேற்கோள்காட்டி இலங்கை அரசின் அதிகாரபூர்வ செய்தித் தொடர்பாளரும், செய்தித்துறை அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல மாகாண அரசாங்கங்களுக்கு நிலம் மற்றும் காவல்துறை அதிகாரங்கள் கிடையாதென்றும. அந்த அதிகாரங்களின்றியே அவை செயல்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்திய அரசாங்கத்தின் தலையீடு இலங்கைத் தமிழ் அமைப்புகளின் எதிர்ப்பு ஆகியவற்றால் அது கைவிடப்பட்டது. இப்போது உச்ச நீதிமன்ற தீர்ப்பை முன்னிறுத்தி நிலம் மற்றும் காவல்துறையின் அதிகாரம் மாகாணங்களுக்கு மறுக்கப்படுமென்றால், அது இலங்கையில் வாழும் சிறுபான்மை தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதியாக அமையும். மேலும், இலங்கையின் இதரப்பகுதி மாகாண மக்களையும் வஞ்சிப்பதாகும்.

13-வது சட்டத்திருத்தம் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படை என்பதோடு அரசியல் தீர்விற்கான முதல்படியும் ஆகும். இதை நிராகரிக்க முயல்வது கடும் கண்டனத்திற்குரியது. இலங்கை அரசாங்கம் தனது நியாயமற்ற இந்த அணுகுமுறையை கைவிட வேண்டும். இந்திய அரசாங்கம், இலங்கை அரசாங்கத்தை நிர்ப்பந்தித்து 13-வது சட்டத்திருத்தத்தின்படியான அதிகாரம் மாகாணங்களுக்கும் வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு வலியுறுத்துகிறது என்று தெரிவித்துள்ளார். (செ-11)

## இராணுவ பஸ்...

வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ் விபத்து சம்பவம் தொடர்பாக யாழ். போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)

## ஐ.நா சென்ற இலங்கை...

ரத்வத்த, முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த போகொல்லாகம, ஜனாதிபதியின் ஆலோசகர்களான தீபா விஜேசிங்க, சேபால, அனோமா லாபீர, அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்ரமசூரிய, பிரித்தானியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் கிறிஸ் நோனிஸ், அமைச்சர் அதாவுத செனவிரட்னவின் புதல்வரான நெதர்லாந்துக்கான தூதுவர் புத்தி செனவிரட்ன, உகண்டாவுக்கான தூதுவர் கானா கண்ணன், வர்த்தகரான நோயேன் செல்வநாயகம், வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள், பாதுகாப்பு அதிகாரிகள் ஆகியோர் அடங்கியிருந்தனர்.

கடந்த வருடம் இலங்கை அரச பிரதிநிதிகளுக்கான செலவுகள் 25 மில்லியன் ரூபாவாக இருந்ததுடன் இந்த வருடம் அந்த தொகையானது 250 மில்லியன் ரூபாவுக்கும் மேல் அதிகரிக்கும் என கூறப்படுகிறது.

ஏற்கெனவே அரசாங்கம் வெளிநாடுகளிலிருந்து 75 ஆயிரம் கோடி ரூபாய் கடனைப் பெற்றிருப்பதாக எதிர்க்கட்சியினர் குற்றம்சாட்டியுள்ளனர். அத்தோடு இலங்கையிலுள்ள அரச வங்கிகளிலும் பல மில்லியன் ரூபாவை கடனாகப் பெற்றுள்ளது.

இந்நிலையில், ஜனாதிபதி தன்னுடன், அதிகளவான பிரதிநிதிகளை அழைத்துச் செல்வதால் மக்களின் பணம் வீண் விரயம் செய்யப்படுவதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (செ-11)

## போர்க் கப்பல்களை...

செய்யப்பட்டுள்ளது. இலங்கையின் கடற்படையினர் 500க்கு மேற்பட்ட இந்தியமீனவர்களை கொன்றுள்ளனர்.

அதேநேரம் இலங்கைப் படையினரால் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிப்போரில் பல் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

இந்தநிலையில் தமிழ்நாட்டின் தமிழர்கள் மத்தியில் இலங்கைக்கு எதிரான கொள்கை பின்பற்றப்படுகிறது.

எனவே இலங்கைக்கு போர்க்கப்பல்களை வழங்குவதை தமிழக மக்கள் விரும்பவில்லை என்று மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனுவில் பிரதிவாதிகளாக தமிழக பிரதம செயலாளர் மற்றும் மத்திய அரசாங்கம் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் மனுவின் விசாரணை இந்த வாரத்தில் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (செ-11)

## 5ஆம் தர...

இதன்படி, சகல மாணவர்களும் தமது பெறுபேறுகளை பரீட்சை திணைக்களத்தின் **www.doenets.lk** என்ற இணையத்தளத்தினூடாக இன்று பிற்பகல் தெரிந்து கொள்ளலாம்.

இம்முறை ஐந்தாம் தர புலமை பரிசில் பரீட்சைக்கு மூன்று இலட்சத்து 22ஆயிரத்து 455 மாணவர்கள் தோற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## இனவாத வன்முறையை...

வில் நேற்று அவர் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

ஏற்கெனவே மியன்மாரில் பௌத்தர்களுக்கும் முஸ்லிம்களுக்கு இடையில் மோதல்கள் ஏற்பட்டன. இலங்கை மற்றும் மியன்மார் பௌத்த துறவிகள் பயங்கரவாதிகளாக கருதப்படுவது மிகவும் வருத்தமானது. பௌத்த துறவிகள் புனிதத்தன்மை குறித்து கவனம் செலுத்த வேண்டும்.

உங்கள் மதம் மீது நம்பிக்கை வையுங்கள். அதேபோல் ஏனைய மதங்களுக்கு மதிப்பளியுங்கள். இது பல்வேறு மதங்களுக்கு இடையில் ஐக்கியத்தை கொண்டு வரும் என்றார்.

திபெத்திய ஆன்மீகத் தலைவர் தலாய் லாமா 1989-ம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர்.

திபெத் நாட்டை சீனா கைப்பற்றியதில் இருந்து தலாய் லாமா இந்தியாவிற்கு இடம் பெயர்ந்து வாழ்ந்து, நாடு கடந்த திபெத் அரசாங்கத்தின் தலைவராக செயற்பட்டு வந்ததுடன் சுமார் ஒரு வருடங்களுக்கு முன்னர் அரசியலில் இருந்து ஓய்வு பெற்றார்.

நாடு கடந்த திபெத் அரசாங்கம் மற்றும் நாடாளுமன்றம் இந்தியாவின் தர்மசாலாவில் இருந்து செயற்பட்டு வருகிறது. (செ-11)

## பிரித்தா...

மீறி, அதற்கு முரணான வகையில் அமைப்பிற்குள் இலங்கைக்கு தண்டனை வழங்குவதற்காக கனேடிய அரசாங்கம் மேற்கொண்டு வரும் முயற்சியானது பொருத்தமற்றதும் தகுதியானதும் அல்ல. அத்துடன் இந்த முயற்சி பொதுநலவாய அமைச்சர்களின் செயற்பாட்டுக் குழுவின் பொது இணக்கத்திற்கும் ஏற்புடையதல்ல. இவ்வாறு பொது நலவாய அமைப்பை அரசியல் மயப்படுத்தும் முயற்சிகள் கண்டிக்கப்பட வேண்டும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## முதலமைச்சர் விக்னேஸ்வ...

வழிபாடு செய்கிறார்.

விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கமும் இதே வழியையே பின்பற்றினார். அவர் தெற்கில் உள்ள சிங்கள மக்களுக்கு சமாதானம் பற்றி கூறியதுடன் நயினாதீவுக்கு யாத்திரை வருமாறும் குறிப்பிட்டார்.

பாலசிங்கம் சட்டரீதியாக ஈழத்திற்கான செயற்பாடுகளை முன்னெடுத்ததுடன் அதற்கான விடுதலைப்புலிகளின் வழிமுறைகளை முன்னெடுத்துச் சென்றார்.

இந்த நிலையில் தென் பகுதி மக்களை ஆழ்ந்த நித்திரையில் வைத்து விட்டு தமது நோக்கத்தை முன்னெடுத்துச் செல்வதே விக்னேஸ்வரனின் திட்டமாகும்.

பிரபாகரன் ஆயுதத்தினால் தனது நோக்கத்தை அடைய முடியும் என நம்பினார். அவரது நோக்கம் அழிக்கப்பட்டது. ஆனால் அழிக்கப்பட்ட அந்த நோக்கத்தை முன்னெடுத்து பிரிவினைக்கான முனைப்புகளை விக்னேஸ்வரன் இன்று மேற்கொண்டு வருகிறார்.

புத்திசாலித்தனமாக வேலை செய்து, மேற்குலம் மற்றும் சர்வதேச சமூகத்தின் உதவியுடன் தனது சதித்திட்டத்திற்கான நகர்வுகளை விக்னேஸ்வரன் முன்னெடுத்துள்ளார் என்றார். (செ-11)

## அணிசேரா...

ஐக்கிய நாடுகள் அமைப்பு அனைத்து உறுப்பு நாடுகளையும் சமமான முறையில் நடத்த வேண்டும். மனித உரிமை விடயத்தை அரசியல் ஆயுதமாக பயன்படுத்துவதை அணிசேரா நாடுகள் அமைப்பு எதிர்க்க வேண்டும்.

உறுப்பு நாடுகளின் மக்களது நலன்களுக்காக அணிசேர நாடுகள் ஒருமித்து குரல் கொடுப்பது கட்டாயமான தேவை எனவும் அமைச் சர் சுட்டிக்காட்டியுள்ளார். (செ-11)

## தமிழீழத்தை உருவாக்க...

இந்த முயற்சி நிறைவேறினால் ஆளுநரின் அதிகாரங்கள் சவாலுக்கு உட்படுத்தும் நிலை உருவாகும்.

மாகாண சபையின் முதலமைச்சர் ஒருவர் ஆளுநரின் முன்னிலையிலேயே பதவிப் பிரமாணம் செய்ய வேண்டும். காரணம் மாகாண சபைகளின் அதிகாரம் உள்ள ஜனாதிபதியின் பிரதிநிதியாகவே ஆளுநர் நியமிக்கப்படுகின்றார். இதுதான் இலங்கையின் மாகாண சபைகளின் சட்டமாகும்.

ஜனாதிபதியின் முன்னிலையிலும் சத்தியப் பிரமாணம் செய்யலாம். ஆனால் ஆளுநரின் முன்னிலையில் அதனை மேற்கொள்வதே சிறந்தது.

இந்த நிலையில் வடகிழக்கு மாகாண ஆளுநரின் அதிகாரங்களை சட்டத்தின் சவாலுக்குட்படுத்தும் நோக்கிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சரான விக்னேஸ்வரன் ஜனாதிபதியின் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்ய முயற்சித்து வருகிறார்.

தற்போதைய ஆளுநர் இராணுவ அதிகாரி என்ற கூட்டமைப்பின் குற்றச்சாட்டை ஏற்க முடியாது. காரணம் அவர் தற்போது இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றவர்.

ஆளுநரின் முன்னிலையில் விக்னேஸ்வரன் முதலமைச்சராக சத்தியப் பிரமாணம் செய்வதை நிராகரித்தால், ஆளுநர் அடுத்த இரண்டாவது இடத்தை பிடித்தவர்களுக்கு ஆட்சியமைக்க அழைப்பு விடுப்பார்.

அவர்களும் அழைப்பை நிராகரித்தால் வடமாகாண சபையை கலைத்து விடுமாறு ஆளுநரால் ஜனாதிபதிக்கு சிபாரிசு செய்ய முடியும்.

இவ்வாறு குழப்பகரமான சூழலை ஏற்படுத்தி சர்வதேசத்தின் தலையீட்டை அதிகரிக்கச் செய்வதே கூட்டமைப்பின் திட்டமாகும்.

அரசுக்கு எதிராக சர்வதேசத்தினாலும் கூட்டமைப்பினாலும் நெருக்கடிகள் ஏப்ரல் மாதமளவில் உச்சக்கட்டத்தை அடையும். இதன்போது எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தை கவிழ்க்கும் போராட்டங்களையும் சதித் திட்டங்களையும் உத்வேகப்படுத்தும்.

இதற்கான முதலாவது துப்பாக்கி வேட்டே ஜனாதிபதி முன்னிலையில் விக்னேஸ்வரன் முதலமைச்சராக பதவியேற்க வேண்டும் என்ற திட்டமாகும் என்றார். (செ-11)

# மரண அறிவித்தல்கள்

## சின்னம்மா நடேசன்



சிறுப்பிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னம்மா நடேசன் 30.09.2013 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலம்சென்ற நடேசன்(தம்பிராசா)வின் அன்பு மனைவியும், தெய்வேந்திரம், கருணாநிதி, ஈஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), விக்னேஸ்வரி, யோகேஸ்வரி, கருணவேல் ஆகியோரின் அன்புத் தாயாரும், சியாமளா, ஜெயமதி, தர்மலிங்கம், காலம் சென்ற அருமைநாயகம், மகேஸ்வரன், சத்தியபாமா ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2013) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுப்பிட்டி கிந்திட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி.
021 321 3414, 0213216942

தகவல்:
குடும்பத்தினர்

(C-4968)

## சோமநாதர் கிருஸ்ணராஜா

(கிராமசேவகர்)

துன்னாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமநாதர் கிருஸ்ணராஜா(மந்திகை, அல்வாய் வட மேற்கு கிராம சேவகர்) நேற்று (30.09.2013) திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

துன்னாலை வடக்கு, கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்

(4064)

CIMA சாதனைச்சித்திகள் MCS இல்!
Foundation level 100%
F.M:67% F.O:80% P.O:70% E.O:66%



S.Kanisdda
Po -75%

Save 40000 Rs
Week days, 2nd Oct
Week End, 5th Oct
Type <CM><Name> & Sms to 772395895
MCS IT CAMPUS Near University of Jaffna
Supported by UNDP/JRRP 772 395 895

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.10.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.